உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்டதேவநாயனுர்

# ஐப்பசிச் சுவாதி மலர்.

சய ஆண்டு

திருவாவடுதுறை ஆதீனவெளியீடு 9

தி. க. சண்முகம் நூலகம் தமிழியல் துறை

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# 1. சித்தாந்தமரபு

தருமபுரத்துச் சிதம்பரநாதத்தம்பிரான் எழுதிய

# 2. சித்தாந்தமரபு கண்டனம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து
ஸ்ரீ மாதவச்சிவஞானசுவாமிகள் அருளிய

# 3. சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து
இருபத்தொன்றுவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்திகள்
கட்டளையிட்டருளியபடி

முன்பதித்த பிரதிக்கிணங்க

திருவாவடுதுறை ஆதீன வித்துவான்
த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையால்
பதிப்பிக்கப்பெற்றன.


உரிமை பதிவு. மெய்கண்டார்யாண்டு—732

1954

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 3023
நன்கொடை எண்:

முதற்பதிப்பு ... 1944
இரண்டாம்பதிப்பு 1954

ஸ்ரீ முருகன் அச்சகம்,
கும்பகோணம்.



இருபத்தொன்றாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிகசுவாமிகள்

உ

சிவமயம்

# முன்னுரை.

கயிலாயபரம்பரையிற்சிவஞானபோதநெறிகாட்டும்வெண்ணை
பயில்வாய்மைமெய்கண்டான்சந்ததிக்கோர்மெய்ஞ்ஞானபானுவாகிக்
குயிலாரும்பொழிற்றிருவாவடுதுறைவாழ்குருநமச்சிவாயதேவன்
சயிலாதிமரபுடையோன்றிருமரபுநீடூழிதழைகமாதோ.

சிந்தாந்த மரபு கண்டண கண்டன மென்பது சிந்தாந்த மரபும், அதன் கண்டனமும், மற்றதன் கண்டனமுமென மூன்றும். இம் மூன்றனுள் சிந்தாந்தமரபு எழுதினவர் திருவாவடுதுறை யாதீனத் தாருள் ஒருவர் என்பர். சிந்தாந்த மரபு கண்டன கண்டனத்துத் தொடக்கத்தில் 'குழறுபாடாய் அகப்பட்ட தோன்றலைனத் தம்மாற் குறிக்கப்பட்டோர் கொண்ட மரபென மயங்கிக் கொண்டு' என்றும் பகுதி 34-ல்.

"............அவ்வாறு கூறுவார் ஈண்டு யாருமில்லை. எவரோ குழறுபடையாக எழுதிவைத்த தோன்றலைனக் கைப்பற்றிக் குற்றங் கூறப் புகுந்தீர். 'பொய்யர்க்குப் பொய்யாய பொய்யினன்' என்றதுபோல, நும் அறிவின் குழறுபடைக் கேற்பவே அதுவும் குழறு படையாய் நுமக்கு வந்து வாய்த்தது." என்றும்

ஸ்ரீ மாதவச்சிவஞான சுவாமிகள் அருளிச் செய்வதால், சிந்தாந்த மரபு என்னும் நூல் திருவாவடுதுறையாதீனத்துப் பிரமாணநூல்களில் ஒன்றன்று என்பது அறியப்படும்.

1934-ம் ஆண்டில் சென்னைச் சைவ சிந்தாந்த மகா சமாஜப் பிரசுரமாகிய 'சிந்தாந்த மரபு' நூலின் முன்னுரையில் 'சிவஞான முனிவர் இதனை ஆதரித்ததனாலேயே இந்நூல் திருவாவடுதுறை

மடத்தில் போற்றப்பட்டு வந்ததென்பது தெளிவாகும்' என்பது காணப்படுகிறது. மேலே காட்டப்பட்ட ஸ்ரீமத்: மாதவச்சிவஞான சுவாமிகளது திருவாக்குக்களாற் 'சித்தாந்த மரபு' நூல் சூழறு படையான நூலென்பதும், அஃது அநாமதேயியாகிய எவராலோ எழுதப்பட்டதென்பதும், திருவாவடுதுறையாதீனத்து மரபு அன்று என்பதும் தெளிவாகும். ஆனால், ஸ்ரீமத்: மாதவச்சிவஞான சுவாமிகள் இச் 'சிந்தாந்த மரபு' நூலை மறுத்த 'சித்தாந்த மரபு கண்டன' நூலுக்குச் 'சிந்தாந்த மரபு கண்டன கண்டனம்' அருளிச் செய்தவாறு என்னை? என்னும் வினுப்பின் நிகழ்வதாகும். ஸ்ரீமத்: மாதவச் சிவஞானசுவாமிகள் கண்டன கண்டனத்தின் தொடக்கத்தில் 'இதன்கண் ஆண்டாண்டு ஆசங்கித்தற்குரிய தகுதியுடைய வாய் ஆசங்கிக்கப்படுவனவும் அவற்றிற்கு உத்தரமும் பலபல உள வாகவும், அவற்றுளொன்றாயினும் அறிந்தெடுத்து ஆசங்கிக்கமாட்டாது, சிறு பெண்கள் சிறு சோறட்டுண்டு தேக்கித் தம்மிலே களிக்குமாறுபோல ஆசங்கித்தற்குரியன அல்லாதவற்றை ஆசங்கித்து அங்ஙனம் குற்றம்போலச் சிலகூறி' என அருளிச்செய்வதால் ஆசங்கித்தற்குரியன அல்லாதவற்றை ஆசங்கித்துக் குற்றம் போலச் சிலவற்றைக் கண்டனநூலார் கூறினமையின் அவற்றின் பொருந்தாமையை அறிவித்தற்கு ஸ்ரீமத்: மாதவச் சிவஞான சுவாமிகள் 'கண்டன கண்டனம்' அருளிச் செய்தார்கள் என்க.

இனிச் சித்தாந்த மரபு கண்டனம் எழுதினவர் தருமபுரத்து ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர் மரபினருள் ஒருவராகிய ஸ்ரீமத்: சிதம்பர நாதத்தம்பிரான் என்பவர். சிந்தாந்த மரபு கண்டன கண்டனத்துள் 'மயங்கினீர்' 'கூறினீர்' 'நீர் சைவ சித்தாந்திகளல்லீர்' 'பிதற்றினீர்' 'என்றீர்' 'வினவினீர்' என்பனவாக முன்னிலையாற் கூறப்படுதலின், சிதம்பரநாதத் தம்பிரானும் ஸ்ரீமத்: மாதவச் சிவஞான சுவாமிகளும் ஒரு காலத்தவரென்பது விளங்குகின்றது. சிவஞான சுவாமிகள் காலம் சற்று ஏறக்குறைய இருநூறு ஆண்டுகள் ஆகிறது. தருமபுரத்தில் சற்று ஏறக்குறைய இருநூறு

ஆண்டுகளுக்குமுன் இருந்த ஞானசாரியர் ஸ்ரீ சிவஞான தேசிக ராவார். ஆகவே மேலே குறித்த சிதம்பரநாதத் தம்பிரானென் பவர் இந்த ஸ்ரீ சிவஞான தேசிகரிடம் உபதேசம்பெற்று, 'நித்திய கன்ம நெறி' என்னும் நூல் இயற்றியவராக இருத்தல் கூடுமெனக் கருதலாகும். சித்தாந்த மரபு கண்டன கண்டனத்து 57-ம் பகுதி யும் இதனை ஒருவாறு வலியுறுத்துகின்றது.

சித்தாந்த மரபு கண்டன கண்டனம் அருளிச் செய்தவர் திருக் கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீ-ல-ஸ்ரீ நமச்சிவாய தேசிக பரமாசாரிய சுவாமிகள் மரபில் ஸ்ரீ-ல-ஸ்ரீ பேரூர் வேலப்ப தேசிக சுவாமிகளிடம் அருளுபதேசம் பெற்றுத் திராவிட மகாபாடியம் முதலிய பலநூல்களை யியற்றியருளிய ஆசிரியர் ஸ்ரீமத்: மாதவச் சிவஞான சுவாமிகள் ஆவார்.

கண்டன நூல் என்ற மாத்திரத்தில் இக்காலத்தில் சிலருக்கு ஒருவகை வெறுப்பு ஏற்படக் காண்கின்றோம். அங்ஙனம் வெறுப்பு ஏற்படக் காரணம் இல்லாமலில்லை. இடைப்பட்ட காலத்தில் ஏகான்மவாதிகளும் வைணவர்களும் சைவதூஷணம் செய்த காலத்தில் அவர்கள் எழுதிய நூல்களிலும் அதற்கு மறுப்பாக எழுந்த நூல்களிலும் சில இடங்களில் நூலெழுதினோர்மீதும் நூலிற் கூறப்பட்டார்மீதும் வசைமொழியடுக்குகள் காணப்படுகின்றன. ஆனால் முற்காலத்துக் கண்டன நூல்களில் விஷயங்களின் பொருந் தாமை மட்டும் விளக்கப்படும். இங்ஙனம் இரண்டற்கும் வேற்றுமை பெரிதாகலான், முற்காலத்துக் கண்டன நூல்கள் போற்றத் தக்கனவேயாம். அன்றியும் அவற்றால் விளையும் பயன்களும் பல வுள. சித்தாந்த மரபு கண்டன கண்டன நூலால் விளங்கும் உண் மைகளிற் சில இங்குத்தாலிபுலாக நயம்பற்றிக் காட்டப்படுகின்றன.

1. மாயை கன்மங்கள் சிவவியாபகத்தின் வியாப்பியம்.
2. சடத்துவ சாதிக்கும் அறியாமைச் சாதிக்கும் வேற்றுமை.

3. இருவினையொப்பு என்பதற்குக் காரக சட்டியை விரிப்பினும், சமபுத்தி செய்வோன் அறிவின்கண் இருவினையும் ஒரு தன்மையவா யொத்தல் இருவினையொப்பெனப் பொருள் தருதல்.

4. சிவஞானமே அனுக்கிரகிப்பதன்றி ஆன்மா அனுக்கிரகிக்கமாட்டாது.

5. புண்ணிய பாவங்களைக் கழித்தலும் அனுக்கிரகத் தொழிலின் அடங்குவதன்றி மற்றொரு தொழிலினும் அடங்காது.

6. தூலாருந்ததி நியாயமாய்க் காணப்பட்டு நிகழும் நிகழ்ச்சி கொண்டு காணப்படாத பொருளைத் தெரிவித்தல் சிவாகமங்களின் துணிபு.

7. விட்டு நீங்கியபின் அன்றி அன்னியமாகக் காண்டல் கூடாது.

8. சத்தி சத்திமான்களுக்குத் தாதான்மிய சம்பந்தத்தால் வேற்றுமை உண்மை.

9. மென்மை வன்மைகள் நோக்கி, நிராகரணச் சுருதிக்கு ஏற்ப மதசங்கற்பத்திற் கூறியதற்கு இணங்கிவரும் சுருதிக்குப் போக்கு விடுவதன்றி, மதசங்கற்பச் சுருதிக்கேற்பச் சித்தாந்த முடிவில் நின்று நிராகரிக்கும் நிராகரணச் சுருதிக்குப் போக்கு விடுதல் பொருந்தாது.

இவ்வாறு விளங்கும் உண்மைகள் பல. இக்காரணம்பற்றி ஒரு சாரார் இந்நூல்களை எதிர்நூல் (Controversial Literature) எனப் போற்றுவாராயினர்.

இனிச் சித்தாந்த மரபு கண்டன கண்டனத்தில் பகுதி 8-ல் 'முகரோமம் முறுக்கிக்கொண்டு குற்றங்கூறப் புகுந்து' என வருகின்றதேயெனின், அது சித்தாந்த மரபு கண்டனத்திற் பகுதி 57-'சற்குரு சன்னிதான விசேடத்தாற் சற்சம்பிரதாயந் தெரியாதவர் சொன்னது' என வருவதனை நோக்கி வந்ததென்க.

இவ்வரிய நூல் முன் திருவாவடுதுறையாதீனத்துப் பதினேழாவது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் கட்டளைப்படி அவ்வாதீன வித்துவான் ஸ்ரீமத்: சபாபதிநாவலரவர்களால் விஜய-ஹூ கார்த்திகை-மீ (50 வருஷங்களுக்கு முன்) அச்சிட்டு வெளியிடப்பட்டது. பின் துந்துபி-ஹூ வைகாசி-மீ (20 வருஷங்களுக்குமுன்) இந்நூற் பதிப்பொன்று திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும் வெளிவந்தது. இவற்றுட் பின்னது முன்னதின் படிச் சந்தமேயாகும். இப்பதிப்புக்கள் இரண்டினும் சித்தாந்த மரபு கண்டனமும் சித்தாந்த மரபு கண்டனகண்டனமுமாகிய இரண்டும் விரவி வெளிவந்தன. அடியேன் அந்நூல்களை எனது ஆசிரியர் மேலகரம் ஸ்ரீ மே. சொ. சுப்பிரமணியக் கவிராயரவர்களிடம் பாடங்கேட்ட காலத்திற் பல பிழைகள் திருத்தப்பட்டன. பின் திருவாவடுதுறையாதீன கைங்கரியத்தை ஏற்று அங்குள்ள ஏட்டுப்பிரகளுடன் அச்சுப்பிரதிகளை ஆராயும்பொழுது அச்சுப்பிரதிகளில் விடப்பட்ட பகுதிகள் சில காணப்பட்டன. அவற்றையும் குறித்து நூல்களை என் அறிவு சென்ற அளவிற் செம்மை செய்து இப்பொழுது அத்திருவாவடுதுறையாதீனத்தில் இருபதாவது மகா சந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகளிடம் தெரிவித்தேன். அவர்கள் தங்கள் பரம்பரைக்குரிய பெருங்கருணையால் அந்நூலைக் குறிப்புகளுடன் வெளியிடல் வேண்டுமென்று கட்டளையிட்டருளினார்கள். அவர்களது ஆணையைச் சிரமேற்கொண்டு அரும்பதப்பொருள் எழுதியும், ஸ்ரீமத்: மாதவச்சிவஞான சுவாமிகள் எடுத்தாண்ட நூல்களைக் குறித்தும், ஆராய்ச்சிக்

குறிப்புக்கள் சேர்த்தும், கற்போருக்கு உண்மை விளங்கும் பொருட்டுச் 'சித்தாந்த மரபு' நூலை உடன் பதிப்பித்தும், நூல் மூன்றினும் வகுக்கப்பட்ட பிரிவுகளைக் காட்டியும் இப்பதிப்பு வெளியிடப்படுகின்றது. சித்தாந்த மரபு ஆராயுங்காலத்து (1888-ம் ஹூ) சர்வதாரி-ஹூ ஆவணி-மீ சென்னை ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்தில் காஞ்சீபுரம் சொக்கலிங்க சுவாமியவர்கள் ஆராய்ந்து பதிப்பித்த 'சித்தாந்த மரபு'ப் பிரதியும், 1934-ம் ஹூ சென்னை இராயபேட்டைச் சாது அச்சுக்கூடத்தில் சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாஜம் பதிப்பித்த 'சித்தாந்த மரபு'ப்பிரதியும் உடன் வைத்து ஆராயப்பட்டன. இவற்றுள் கோயிலூர்ப் பதிப்பே 'சித்தாந்த மரபு கண்டன'த்தின் ஏட்டுச்சுவடியிற் குறித்த எண்களுக்கும் 'சித்தாந்த மரபு கண்டன கண்டன'த்தின் ஏட்டுச் சுவடியிற் குறித்த எண்களுக்கும் முறைக்கும் வாக்கியங்களுக்கும் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. சென்னைப் பதிப்பு எண்களிலும் முறையிலும் வாக்கியங்களிலும் பெரிதும் மாறுபடுகின்றது. கண்டனத்திலும், கண்டன கண்டனத்திலும் குறிக்கப்பட்ட எண்களோடு சித்தாந்த மரபு எண்களையும் முறைப்படுத்தி முதலிற் சித்தாந்தமரபும், பின் கண்டனமும், பின் கண்டன கண்டனமும் இதிற் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

நுணங்குஞ் சமய நூற்றலைமை நுவலுந் தகைத்தாய் நந்திமுனி
கணங்கட் களித்த சிவஞான போதக் கதிநூ னெறிகாட்டிப்
பணங்கொளரவர்துறைசையில்வாழ் பஞ்சாக்கரதேசிகன் மலர்த்தாள்
வணங்க வழுத்த மனத்திருத்த வாய்த்த பிறப்பை வாழ்த்துவாம்.

திருவாவடுதுறை
சுபானு-ஹூ தை-மீ
24-உ

**வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை,**
ஆதீனவித்துவான்.

உ
சிவமயம்

# கண்டன கண்டனத்திற் காணப்படும் அரிய விஷயங்கள்

[எண்கள் பகுதிகளைக் குறிக்கின்றன.]

முன்னுரை :—மெய்கண்டதேசிகன் சந்தானத்தின் எய்தி மெய் கண்ட நூலை ஆராய்ந்து சித்தாந்த சைவப்பொரு ளுண்மையை உணர்தற்குரிய தவம்.

1. சடத்துவ சாதிக்கும் அறியாமைச்சாதிக்கும் வேற்றுமை.

2. முற்றுவமை ஒன்றற்குங் கூடாது.

11. இருவினையொப்பு என்பதற்கு வினைமுதற்பொருண்மை உணர்த்தும் காரகசட்டி விரித்துரைப்பின், அவ்விருவினை யொப்பு உண்டாயினும் அஃது ஒருவாற்றானும் முத்திக்குக் காரணமன்று............இனிக் காரகசட்டியை விரிப்பி பினும், சமபுத்தி செய்வோன் அறிவின்கண் இருவினையும் ஒரு தன்மையவாய் ஒத்தல் இருவினையொப்பு எனப் பொருள் தருதற்கு இழுக்கு என்னை?

12. மென்மை வன்மைகள் நோக்கி நிராகரணச் சுருதிக்கு ஏற்ப மத சங்கற்பத்திற் கூறியதற்கு இணங்கிவரும் சுருதிக்குப் போக்குவிடுவதன்றி, மத சங்கற்பச் சுருதிக்கு ஏற்பச் சித்தாந்த முடிவினின்று நிராகரிக்கும் நிராகரணச் சுருதிக்குப் போக்குவிடுதல் பொருந்தாது.

சிவஞானமே அனுக்கிரகிப்பதன்றி ஆன்மா அனுகிரகிக்க மாட்டாது.

சிவஞானம் வெளிப்பட்டு விளங்கிய ஆன்மாமாட்டு நிகழும் வியாபாரமெல்லாம் பேய் ஆவேசிக்கப்பட்டவன்மாட்டு நிகழும் வியாபாரம் போலுமென்பது 'பதார்த்தங்கள் பாரார்' 'பரமே பார்த்திருப்பார்' எனப்பட்ட மெய்ஞ்ஞானிகள் நிற்கும் நிலை.

18. புண்ணிய பாவங்களைக் கழித்தலும் அனுக்கிரகத்தொழிலின் அடங்குவதன்றி மற்றொரு தொழிலினும் அடங்காது.

21. ஆன்மாப் பெத்தத்திற் சிற்றறிவும் பாதந்திரமுமுடையன், முத்தியின் முற்றறிவுஞ் சுதந்திரமுமுடையன் என்னும் சுருதியும் முத்தியினும் சிற்றறிவும் பாந்திரமுமே யுடையன் என்னும் சுருதியும் தம்முள் முரணுதவாறு பொருளொருமையுணர்ந்து ஏக வாக்கியதை செய்துகொள்ள.

24. சைவ சித்தாந்தத்திற்கூறும் குணகுணி விவகாரம்.

25. முந்திய சிருட்டியில் விபுவாகிய ஆன்மாப் புரியட்ட சரீர பேதங்களைப் பற்றுதற்கே படிகமலை அக்கினிமலை யுவமை.

27. & 30. தூலாருந்ததி நியாயமாய்க் காணப்பட்டு நிகழும் நிகழ்ச்சி கொண்டு காணப்படாத பொருளைத் தெரிவித்தல் சிவாகமங்களின் துணிபு.

43. காலமும் காலத்தில் நிகழ்பொருளுமாகிய அவ்விரண்டிற்கும் வேற்றுமை பெரிது.

48. ஆண்டுப் பொருளென்றது உடம்புபோல் ஒற்றுமையுடைத்தாய்த் தன்னால் நுகராக்கிடந்த உடல்வினையேயன்றி, முன்பே தன்னால் துறக்கப்பட்டு ஒழிந்த புறப்பொருளன்று.

50. & 51. விஞ்ஞானகலர் பிரளயாகலர் கலையோடு கூடினும் துடக்குண்ணுமையின் அகலரோ யாவர்.

54. விட்டு நீங்கிய பின்னன்றி அன்னியமாகக் காண்டல் கூடாது. வியாபகப்பொருள் ஒன்றிற் கூடுமாறும் நீங்குமாறும் ஏக தேசப்பொருள் ஒன்றிற் கூடுமாறும் நீங்குமாறும் போலல்ல.

56. சத்தி சத்திமான்களுக்குத் தாதான்மிய சம்பந்தத்தால் வேற்றுமை யுண்மை.

57. சந்ததி யறிதற்கு மூந்திய அடையாளம் அவ்வச் சந்ததிபற்றி வரும் தீக்கை வேறுபாடு.

ஞானபாத முழுதும் உபதேசகலை.

மந்திர கலைக்கு மேற்பட்ட ஞானபாதம்.

முத்தி பஞ்சாக்கரத்தின் முறை சிவப்பிரகாசம், திருவருட் பயன், உண்மைவிளக்கம் முதலிய மெய்கண்ட நூல் களிற் கூறிய முறை.

சிவத்தில் அருள் வியாப்பியம்.

சிவத்துக்கும் சத்திக்கும் வஸ்துபேதமின்மை.

தற்கால சந்தி ஒரு தினம் தவறினும் பதிதத்துவமாம்.

சிவபூசையில் சாமானியார்க்கியநீர் ஆட்டும் அளவும் லிங்க சுத்தி; அதன்பின் ஆசன மூர்த்தி வித்தியாதேகம் ஆவா கனுதி; அதன்பின் அபிடேக முதலாயின.

சற்குரு சந்ததி என்பது பலவாற்றானும் எல்லார்க்கும் இனிது விளங்குதற்குரிய பெருந்தகைமையுடைய மரபு.

59. ஓரியல்புபற்றி ஒன்றற்குவமையாக எடுத்துக்காட்டியபொருளை மற்றோரியல்புபற்றிப் பிறிதொன்றற்கு உவமையாகவைத்து ஓதுதல் எல்லா நூல்கட்கும் துணிபு.

உ

சிவமயம்

## கண்டன கண்டனத்தில் எடுத்தாண்ட நியாயங்கள்

[எண்கள் பகுதிகளைக் குறிக்கின்றன.]

1. பிட்ட பேடண நியாயம்.

27–30. தூலாருந்ததி நியாயம்.

57. { கெதானுகெதிக நியாயம்.
கைமுதிக நியாயம்.

---

## கண்டன கண்டனத்தில் எடுத்தாண்ட உவமைகள்

[எண்கள் பகுதிகளைக் குறிக்கின்றன.]

சிறு பெண்கள் சிறுசோறட்டு உண்டு தேக்கித் தம்மிலே களிக்குமாறுபோல.

1. ஆகாசத்திலெழுதிய சித்திரம் போல.

5. குரங்கெறி விளங்காய் போல.

8. பிட்டுத் தின்று விக்கினாற் போல.

12. மசகக் கடிக்கு அஞ்சிப் புலியின்வாய் அகப்பட்ட கதை.

42. 'ஆனை யெருத்தம் பொலிய' என்புழிப் பொலிய என்பதற்குப் பொருளறியாது தமக்குத்தெரிந்த பொருளைப் பற்றிப் பாடம் பிழையெனத் தள்ளி, வேறு வேறு பாடங்கொண்டார் முறைமை.

---

## கண்டன கண்டனத்தில் எடுத்தாண்ட பழமொழி

[எண் பகுதியைக் குறிக்கின்றது.]

1. யானும் அறியேன் அவளும் பொய் சொல்லாள்.

உ

சிவமயம்

# கண்டன கண்டனத்திற் காணப்படும் அரும்பதங்களுக்கு உரை

[எண்கள் பகுதிகளைக் குறிக்கின்றன.]

முன்னுரை. வெள்ளறிவு—அறியாமை; ஆசங்கித்தல்-வினவுதல்; உத்தரம்-விடை; ஈர்த்தல்-இழுத்தல்; கூற்று-சொல்; நானம்—கத்தூரி; மதுகை—வலிமை.

1. வியாப்பியம்—வியாபிக்கப்படுவது; முரணுதல்—மாறுப்டுதல்; முதல்—தனிப்பொருள்; காலத்திரயம்—முக்காலம்; இருதலை—இரண்டிடம்.

2. தாற்பரியம்—கருத்து; அதிருசியம்—காணப்படாதது.

.4 சித்தசாதனம்—சித்தித்ததை மீளச் சாதித்தலென்னும் குற்றம்; சைதன்னியம்—அறிவுடைப்பொருள்.

5. ஒருப்படுதல்—தொடங்குதல்.

7. தனு—உடம்பு; தாட்டாந்திகம்—திருட்டாந்தத்தால் விளக்கப்படுவது; ஆரியன்-கடவுள்; குலாலன்-குயவன்.

8. அறுவை-ஆடை; கூறை-ஆடை; முகரோமம்—மீசை; துச்சகுனம்—தீயசகுனம்; பட்சபாதம்—ஒருபால்விழுதல்.

11. சத்தார்த்தம்—சொற்பொருள்.

12. மசகம்-கொதுகு.

13. குலிசப்படை-வச்சிராயுதம்.

21. சேட்டன்-மூத்தோன்; கனிட்டன்-இளையோன்.

25. விபு-வியாபகம்; சங்கேதம்-கொள்கை; பரிணமித்தல்-திரிபு அடைதல்.

29. யோகவிபாகம்-கூட்டிப்பிரித்தல்; விபாகயோகம்-பிரித்துக்கூட்டல்; கெணனை-எண்ணிக்கை.

31-33. வலித்தல்-இழுத்தல்.

42. ஆர்ச்சிப்பு-சம்பாதித்தல்.

48. அல்குல்-இங்கே இடக்காடக்கல்.

49. அநுகுணம்-பொருத்தம்; ஒலிமாலை-புராணம்.

55. எச்சம்-யாகம்; சென்னியம்-உண்டாகியது; தனந்தயன்-பாலுண்குழவிப் பருவத்து ஆண்மகன்; கூடத்தர்-தலைவர், முன்னோர்.

57. வெள்ளை-வெண்பா, அறியாமை; விவதானம்-தடை.

58. வரைவு-நீக்கம்.

உ

சிவமயம்

# கண்டனகண்டனத்தில் எடுத்தாண்ட நூல்கள்

இருபாவிருபது
உண்மை விளக்கம்
உண்மைநெறி விளக்கம்
கோயிற் புராணம்
சங்கற்ப நிராகரணம்
சிதம்பர புராணம்
சிதம்பர மும்மணிக்கோவை
சிவஞான சித்தியார்
சிவஞானபோதம்
சிவப்பிரகாசம்
சிவார்ச்சனா சந்திரிகை
சிற்றம்பலநாடிகள் அநுபூதி [விளக்கம்
,, கட்டளைக் கலித்துறை
,, வெண்பா
சுந்தரமூர்த்திகள் தேவாரம்
ஞானாமிர்தம்
தனிச் செய்யுள்
திருக்களிற்றுப்படியார்
திருக்குறள்
திருநாவுக்கரசர் தேவாரம்
திருவருட்பயன்
திருவாசகம்
திருவிசைப்பா
திருவுந்தியார்
நாலடியார்
நெஞ்சுவிடுதூது
பெரிய புராணம்
போற்றிப்பஃறொடை
பௌட்கராகமம்
வருணாச்சிரம சந்திரிகை
விருத்தாசல புராணம்

உ
சிவமயம்

# குருமரபு வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

"கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
காட்டும் வெண்ணெ
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான
பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி
வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ."

திருச்சிற்றம்பலம்

— ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்.



திராவிடமாபாடியகர்த்தராகிய

**ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள்.**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தமரபு

# சித்தாந்தமரபு கண்டனம்

# சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

---

## 1.

## சித்தாந்தமரபு

'ஏக னநேக னிருள்கரும மாயையிரண்
டாகவிவை யாறு நாதி யில்.'

ஏகன் என்பது சிவன். அநேகன் என்பது ஆன்மா. இருள் என்பது ஆணவமலம். கருமம் என்பது கன்மமலம். மாயை இரண்டு என்பது சுத்த மாயையும் அசுத்த மாயையும். இவ்வாறு பொருளும் ஒரு காலத்திலே யுண்டாகாமல் அநாதி யிலே யுள்ள பொருள்களாம். ஆறு பொருளையும் திரிபதார்த் தத்திலே அடக்கித் திரிபதார்த்தமாகச் சொல்லுதலுமாம்.

சிவனுக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணமுண்டு. அவற்றுள் இரண்டு குணம் சொல்லுகிறோம். அவையாவன:– ஒருவரும் அறிவியாமல் தானே அறிகிற குணமொன்று. ஆன் மாக்களுக்கு அறிவிக்கிற குணமொன்று ஆக இரண்டு. இதற்கு வசனம் சித்தியார் :—(V. 1.) 'பொறி புலன கரணமெல்லாம் என்றது.

ஆன்மாவுக்கும் எண்ணிறந்த தன்னியல்புக் குணமுண்டு. அவற்றுள் இரண்டு குணம் சொல்லுகிறோம். அவையாவன :- அறிவித்தால் அறிகிற குணமொன்று : பிறருக்கு அறிவிக்க மாட்டாத குணமொன்று ஆக இரண்டு. இதற்கு வசனம் :— சிவஞானபோதம் (VIII. 2. உதாரணவெண்பா 2.) 'அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்' என்றது.

ஆணவமலத்திற்கு எண்ணிறந்த தன்னியல்புக் குண முண்டு. அவற்றுள் இரண்டு குணம் சொல்லுகிறோம். அவை யாவன ;—ஆன்மாக்களுக்கு வேண்டுங் காரியத்தை மறைக்கிற குணம் ஒன்று : வேண்டாத காரியத்திலே விருப்பத்தைக் கொடுக்கிற குணமொன்று ஆக இரண்டு. இதற்கு வசனம்:— சிவப்பிரகாசம் (II. 18) 'அந்நியமா னவை யுணர்த்தி' என்றது.

கன்மமலத்துக்கு எண்ணிறந்ததன்னியல்புக்குணமுண்டு. அவற்றுள் இரண்டு குணம் சொல்லுகிறோம். அவையாவன ;- ஆன்மா மலத்தைப் பொருந்தினால் மலமாய்ப் போகிற குண மொன்று : சிவத்தைப் பொருந்தினால் சிவமாய்ப்போகிற குண மொன்று ஆக இரண்டு.

மாயைக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணமுண்டு. அவற்றுள் இரண்டு குணம் சொல்லுகிறோம். அவையாவன ;— ஆன்மா ஆணவ மலத்தைப் பொருந்தினால் மலமாய்ப் போகிற குணமொன்று : ஆன்மா சிவத்தைப் பொருந்தினால் சிவமாய்ப் போகிற குணமொன்று ஆக இரண்டு. இதற்கு வசனம் ;— சிவப்பிரகாசம் (VII. 2) 'மாயை மா மாயை' என்றது. இவை தன்னியல்பு.

## சித்தாந்தமரபு கண்டனம்

ஆன்மாவிற்குத் தன்னியல்பு எண்ணிறந்த குணஞ் சொல்லிய தில் இரண்டு குணம் விசேடஞ்சொன்னதில் பிறருக்கு அறிவிக்க

மாட்டாதென்றூர், பின்னொரு இடத்திலே மலந்தீர்ந்த உயிர் ஆன் மாக்களுக்கு அறியும் பகுதியும் அறிவிக்குமென்றூர். 'சிவன் சீவன்' (சித்தி. XI. 11) என்ற சுருதிக்கு விரோதிக்குமாகையால் இவர் சொன்னது மாறுபாடென அறிக. மலத்திற்குத் தன்னியல்பு சொன் னதில் ஆன்மாவிற்கு வேண்டுங் காரியத்தை மறைத்து வேண்டாத காரியத்தை விளக்குமென்றூர். மறைக்குங் குணமும் விளக்குங் குணமும் மலத்திற்கு உண்டென்பதற்குச் சுருதி சொல்ல வேண் டும். 'அங்நியமானவை யுணர்த்தி' (சிவப். II. 18) என்றிருக் கிறதேயெனில், அதற்குத் தாற்பரியம் வேறே. சைவசித்தாந்தி களை வழிபட்டுக் கேட்டால் மலைவறச் சொல்லுவார்கள். கன்மத் திற்கு ஆன்மா மலத்தைப் பொருந்தினுல் மலமாயும் சிவத்தைப் பொருந்தினுல் சிவமாயுமிருக்கும் குணம் இரண்டுண்டென்றூர். கன்மம் மலத்தையுஞ் சிவத்தையும் பொருந்துமோ? அப்படியா னுல் ஆன்மா கன்மத்தைப் புசிக்கும்முறை இல்லையாய்விடும். அன் றியும் கன்மம் மலமுஞ் சிவமுமானுல் கன்மமென்றொரு முதல் இல்லையாய்விடும், மாயைக்கு இரண்டு குணஞ் சொன்னதில் கன்மம் எப்படி நின்றதோ அப்படியென்றும் மாயை யிரண்டுங் கன்ம மிரண்டுமாக நாலுக்கு முதாரணம் 'மாயை மாமாயை' (சிவப். VII. 2.) என்றுஞ் சொன்னுர். அந்தச் சுருதிக்குத் தாற் பரியம் இருதலையும் மருள் என்று பாடமொப்பில் மற்றிரு மாயை யுங் கன்மமுமொப்பில் தாற்பரியமாம். அப்படிப் பாடம் போற்று வோம் யாமல்லம்: யாம் மருளாய் உயிரின் மேவும் மாயை மாமாயை மாயா வருமிருவினையின் வாய்மையெனில் இருளாயே நிற்குமென்றும், அருளாய் உயிரின் மேவும் மாயை மாமாயை மாயாவரு மிருவினையின் வாய்மையெனில் ஒளியாய் நிற்குமென் றும் பாடம் போற்றுவோமென்பீராகில், மாயையுங் கன்மமும் அவ்வுதா...............சடம் அறியாமையாயிருப்பதை நீர் அவ்வாறு கூறில் பிட்டபேடண நியாயமாகிய தோடம் வருமாகையால் அது கூடாது. பின், அருளாய் உயிரின் மேவும் மாயை மாமாயை மாயா வருமிருவினையின் வாய்மையெனில் ஒளியாய் நிற்குமெனில்,

சடம் அறியாமை எக்காலமும் ஒரு தன்மையாயிருப்பதை அவ்வாறு கூறின் காலத்திரயத்திலும் அவ்வாருகாது, பாடமிருக்கிறதேயெனில் உம்முடைய பாடத்திற்கு அனுபவமின்மையால் அது பாடமன்றென்பது இனியாகிலும் அறிந்துகொள்வீராக.

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

மெய்கண்டதேசிகன் சந்தானத்தினெய்தி மெய்கண்டநூலை யாராய்ந்து சித்தாந்தசைவப் பொருளுண்மையை உணர்தற்குரிய தவமுதிர்ச்சி யில்லாமையான், ஏனைப் பொதுநூல்களையே பாராட்டி மெய்கண்டநூலையும் அவற்ரோடொப்ப வைத்துப் பொது வகையாற் பாராட்டும் வெள்ளறிவுடைய வொருசாரார், "கற்றதூஉமின்றிக் கணக்காயர் பாடத்தாற், பெற்றதாம் பேதையோர் சூத்திரம்" (நாலடியார் அவையறிதல்–4.) என்னு முறைமைத்தாகக் * குழறுபாடா யகப்பட்டதொன்றனைத் தம்மாற் குறிக்கப்பட்டோர் கொண்ட மரபென மயங்கிக்கொண்டு, அதற்குத் தாமுங் குழறு

---

* 'குழறுபாடு,—குழறுபடை, குழறுதல், குழறல் என்பன வொருபொருட்சொற்கள். குழறுபாட்டுரை-எண்வகைத் தானத் தொடுபடுத்து நாவா னவிலப் பெருததோர் நகைபடு கிளவி. அது "காவியங்கண்ணுர் கட்டுரை யெட்டுக்கு, நாவொடு நவிலா நகைபடு கிளவியும்" எனச் சிலப்பதிகாரத்துட் கூறுமாற்ரு னுணர்க. இனி "வளைவாய்க் கூகை நண்பகற் குழறவும்" எனப்பட்டினப்பாலையுள்ளும், "பேராந்தை குழறும்" எனச்சிலப்பதிகாரத் துரையுள்ளும், 'கூகை குழறிப் பாராட்ட' எனச் சிந்தாமணியுள்ளும் வருதலின், இந்நகைப்படுகிளவி ஒருசார் கூகை முதலிய புட்களின் எழுத்தியல் கூடா வாயொலியைக் குறிக்குஞ் சொல்லாதலறிக. இனி "உரைகுழறி" "பரவுவாய்குழறி" என்றற்ருெடக்கத்தனவாக ஆன்ரோர் செய்யுட்கண் ஆண்டாண்டு வருதலின், அது தான்மாந்தர் தமெழுத்திய னிரம்பா வுரையை யுணர்த்துவதூஉமாம்.

பாடாகச் சில குற்றம்போலக்கூறினர். இதன்கண் ஆண்டாண்டு ஆசங்கித்தற்குரிய தகுதியுடையனவாய் ஆசங்கிக்கப்படுவனவும் அவற்றிற் குத்தரமும் பல பல வுளவாகவும், அவற்றுளொன்று யினும் அறிந்தெடுத்தாசங்கிக்கமாட்டாது, சிறுபெண்கள் சிறுசோ றட்டுண்டு தேக்கித் தம்மிலே களிக்குமாறுபோல ஆசங்கித்தற் குரி யனவல்லாதவற்றை யாசங்கித்து, அங்ஙனங் குற்றம்போலச் சில கூறிக் "கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து, சொல்லாடச் சோர்வு படும்" (திருக்குறள் 405). என்பதுபற்றி அதனைக்கற்று முதிர்ந்தோர்பாற் காட்டுதற்கஞ்சித், தம்மிலே நலங்கொள்ளுதலாற் போந்த பயன் தமக்கென வொன்றிலராகிய பேதைகளை மயக்கித் தம்மாட்டீர்த்துக்கொள்ளுதன் மாத்திரையே யன்றிப் பிறிதில்லை என்பதூஉம், இதனுள் உவமத்தின்மேல் வைத்து எழுதிய குற்றங்க

---

இதனை இக்காலத்துக் குளறுபாடு, குளறுபடை, குளறுதல், குளறலெனவும் வழங்குப. அற்றேலஃதங்ஙனமாக, மாபுகண்டன முடையார் வாக்கியங்கள் எழுத்திய னிரம்பிய நாவுரையேயாமாக லின், அவை தம்மை அதனோடொன்றென வைத்துக் குழறுபாட்டுரை யென் றங்ஙன மெள்ளுத லமையாதாம்பிறவெனின், அவர் வாக்கிய வுரைகள் அப்பெற்றியவாயினும், அவாய்நிலை முதலிய தழீஇ நெறிப் பட்டொழுகிச் சாத்திரப் பொருளை மாபுபட இனிதுணர்த்தாது பிறழ்ந்துகிடத்தலின், அக்குறைபற்றி அவற்றினை அதனோடொன் றெனவைத்து அங்ஙன மிகழ்ந்திட்டார்; ஆகலின், அஃதமையாமை யாண்டையதென்க. சமவாதகண்டனத்து ளிவ்வாறு கூறியதற்கும் இஃதொக்கும். அஃதேல், "உரைகுழறி" "பாவுவாய்குழறி" என்றலின் உண்மைநாயன்மார் திருவாக்குகளும் அவ்வாறிகழுரை யாம் போலுமெனின், அவர்க்கு ஆனந்த மேலீட்டினனே மொழிக் கருவி வசமறுதல்பற்றி நாத்தழுதழுத்து உரை நிரம்பாதெழுதலின் மற்றவை ஆனந்தவதீத மெய்ப்பாட்டடையாளமென வைத்தேத்தப் படுவனவல்லது, இதுபோல விகழுரையாகாவென் றொழிக.— ஸ்ரீ சபாபதி நாவலர்.

ளெல்லாம் ஆவிரம்பூப் பொன்னே டொக்குமென்றவழி அதுபோல் அடித்து நீட்டவருமோவென் ருசங்கிப்பார் கூற்றெடும் பொருண் மேல் வைத்தெழுதிய குற்றமெல்லாம் நானமென்பது மணங்கமழ் கின்ற பொருளென்றவழி அது நாவிலுண்பதுவோவென்ருசங்கிப் பார் கூற்றெடுமொப்ப வெறும் போலியேயாமென்பதூஉம், 'விளம் பிய வேது நோக்கிப்-பெருகிய வுவமை நான்கின் பெற்றியி னிறு விப் பின்முன்-றருமலே வொழியக் கொள்ளும்' (சிவப்பிரகாசம் உண்மை 50.) அறிவின் மதுகையின்மையின் அவ்வாறெல்லாங் குழறினரென்பதூஉம், நுண்ணுணர்வுடையார்க்கு இனிதுவிளங்கும். அவை யவ்வாருதல் சிறிது காட்டுதும்.

'பிறருக்கறிவிக்கமாட்டாது' என்றதேயன்றி, 'மலந்தீர்ந்த வுயிர் ஆன்மாக்களுக்கறியும் பகுதியு மறிவிக்கும்' என வோரிடத் துங் கூறியதில்லை. நீர் அவ்வாறு கொள்ளுவீர்போலும். 'அன்னிய மானவை யுணர்த்தி' (சிவப்பிரகாசம் உண்மை II. 18) எனவும், 'அறிவு முழுதினையு மறைக்கும்' (சிவப்பிரகாசம் உண்மை II. 2. எனவும், 'போத்திருத் துவத்தை நிகழ்த்தி' (சித்தி II. 80.) என வும் வரும் இத்தொடக்கத்துச் சுருதிகளின் ருற்பரியமே ஈண்டு மலத்தினியல்புகூறும் வசனங்களின்ருற்பரியமென்றறியமாட்டாது மயங்கினீர். சைவசித்தாந்திகளை வழிபட்டுக்கேட்டால் மலேவறச் சொல்லுவர்கள்' எனப் படர்க்கை வாய்பாட்டாற் கூறினீர். கூறவே, நீர் சைவசித்தாந்திகளல்லீ ரென்பதற்கு நீர் இங்ஙனம் கூறிய கூற்றே சான்ருயிற்று. யானுமறியே னவளும் பொய்சொல் லாள்' என்ற பழமொழியின் பொருளை நும்பாற் கண்டேம். மாயை கன்மங்கள் சிவவியாபகத்தின் வியாப்பியமெனச் சிவாகமங்க ளெல்லா முழங்கவும், அவற்ரேடு முரணிச் சிவசமவாதி மதத்தின் வீழ்ந்து, மாயை கன்மங்கள் சிவ வியாபகத்தோடொப்ப வேறு நிற் குந் தனிமுதலெனக்கொண்டு. 'அவை சிவத்தையும் மலத்தையும் பொருந்துமோ' என்றும், 'பொருந்துமாயிற் கன்ம மென்ருெரு

முத லில்லையாய்விடும், ஆன்மா வெதைப் புசிப்பான்' என்றும், ஆணவம்போ லறியாமைப் பொருள்' என்றும், 'அறியாமைப் பொருளாகிய மாயை கன்மங்களை இருளாய் நிற்குமென மீளவும் கூறுதல் பிட்டபேடண நியாயமாம்' என்றும், 'அறியாமைப் பொருளாகலிற் காலத்திரயத்திலும் ஒளியாய் நிற்குமாறு கூடாது' என்றும், 'இருதலையு மருளென்று பாடமொப்பில் அச்சுருதிக்குத் தாற்பரியமாம்' என்றும், 'வேருகப் பாடமொப்பில் அனுபவமில்லை என்றும், நுமக்கு வேண்டியவாறெல்லாம் பிதற்றினீர். இவை யெல்லாம் ஆகாசத்திலெழுதிய சித்திரம்போல வெறும் போலியேயாமென்பதூஉம், 'மாயை மாமாயை" (சிவப்பிரகாசம் VII 2.) என்னுஞ் சுருதி அவற்றியல்பு கூறும் வசனத்தின் பொருளன்றி வேறு பொருள்படாதென்பதூஉம், சிவஞானபாடியத்தி லினிது விளங்கும். 'கன்மம் மலத்தையுஞ் சிவத்தையும் பொருந்துமோ' என்ற நீர் "வருமலஞ் சார்ந்து" (சித்தி. II. 40) என்றற்றொடக்கத்துச் சுருதிகளையும் இவ்வாறு கூறி யிகழ்வீர்போலும். 'மலமுஞ் சிவமுமானுற் கன்மமென்ருெரு முதலில்லையாய் விடும்' என்றீர். 'அதுவதுவாய்ச் செறிவானுயிர்' (சிற்றம்பல. கட்டளைக் கலித்துறை 17) என்றதனுல் ஆன்மாவென்ருெரு முதலில்லை யென்று கொள்ளுவீர்போலும். 'இருதலையு மருள்' என்ற பாடங்கொண்டு தாற்பரியம் அதற்கேற்ப வேறுகொள்ளின், அது பொதுவுட் கூறிப் போந்தமையிற் பிட்டபேடணநியாய மென்னுங் குற்ற நுமக்கே வருமென் றறிக. மாயை கன்மங்கண் மலம்போல அறியாமைப் பொருளென்பார்க்கு, 'இரண்டும் சோதியிருளென வேரும்' (சித்தி II. 84.) எனவும், 'இகலிவரு மிவையுணரி னிருள்வெளியாந் தன்மை' (சிவப்பிரகாசம் II. 19.) எனவும், 'இருளிரிசுடர்—முரண்டா நின்ற முழுமல மாயை' (ஞானமிர்தம் 11.) எனவும் வருமித்தொடக்கத்துச் சுருதிகளெல்லா முரணுமாகலின், சடமெல்லா மறியாமைப் பொருளாமென்றல் பொருந்தாமையின், ஈண்டுப் பிட்டபேடணநியாய மென்னுங் குற்றமாதல் யாண்டையதென் ருெழிக. இன்னும் மாயை கன்மங்கள் ஆணவம்போல அறி

யாமைப்பொருளாயின், அதுபோலச் சிவத்துக்குப் பகைப்பொருளாய்ச் சிவசன்னிதியி னில்லாவெனப்பட்டுத், 'தந்திடுஞ் சிவனவன்றன் சன்னிதி தன்னி னின்றே' (சித்தி. I. 19.) எனவும், 'விமலனுக்கோர் சத்தியாய்' (சித்தி. I. 53) எனவும், 'சுத்ததத்துவஞ்சி வன்றன் சுதந்திர வடிவமாகும்' (சித்தி. I. 66.) எனவும் 'மருவு பசுகரணஞ் சிவகரணமாகி' (சித்தி. VIII. 34) எனவும், 'விருப்பு வெறுப்பென்று வேறுரைத்தா லெந்தை-யுறுப்பிற் குறையாதோ வுணர்வுடையோர் சொல்லுவரோ' (சிற்றம்பலநாடிகள் அநுபூதி விளக்கம் 25.) எனவும், 'பெற்றசிற் றின்பமே பேரின்பமாயெங்கே-முற்ற வரும்பரிசு' (திருவுந்தி. 33.) எனவும், 'உடம்புடைய யோகிகடாமுற்றசிற்றின்ப-மடங்கத்தம் பேரின்பத்தாக்கி' (திருக்களிற்றுப் 76.) எனவும், 'காணுங் கரணங்க ளெல்லாம்பேரின்பமெனப்-பேணுமடியார்' .(திருவாச. பண்டாய. 6) எனவும் வருமித்தொடக்கத்துச் சுருதிகள் பற்பலவு முரணுமாகலின், அங்ஙனம் குற்றங்கூறுதல் சடத்துவசாதிக்கும் அறியாமைச்சாதிக்கும் வேற்றுமையறியாதார் கூற்றே யாமென் றினியாகிலும் அறிந்து கொள்ளுவீராக. 'யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலின்' (சிவஞானபோதம் சூ. 7.) என்பதனுன் மாயை கன்மங்களும் ஒளிமுன்னிருள்போலச் சிவசன்னிதியினில்லாவென்பது பெறப்படுமாலோவெனின், ஈண்டெடுத்துக்காட்டிய சுருதிகள் பலவற்றோடு முரணுமாறு அங்ஙனம் பொருள் செய்தல் பொருந்தாமையால் அதற்குத் தாற்பரியம் வேறென் றறிக.

## 2.

## சித்தாந்தமரபு

ஆன்மாக்கள் அநாதியிலே ஆணவமலத்தைப் பிடித்தார்கள். ஆணவமலம் ஆன்மாக்களுக்குக்கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்தது. அந்தச் செய்தியைக் கர்த்தா இரக்கத்திலுலே அறிந்து விருப்பத்துக்கேற்ற தனுவைக் கொடுத்து

அந்தத் தநுவினிடமாகக் கன்மத்தைக் கூட்டிப் புசிப்பித்தார். இ∴து அநாதியிலே பிரபஞ்சம் உண்டான முறைமை. இவை பொதுவியல்பு.

ஆன்மாவுக்கு ஆணவமலம் இயற்கையோ? செயற்கையோ? இயற்கையானுல் பாலுக்கு வெண்மையும் கரிக்குக் கருமையும் ஒருகாலத்தும் நீங்காததுபோல ஆன்மாவுக்கு ஆணவமலம் ஒருகாலத்தும் நீங்காது ஆகையாலே இயற்கையன்று. செயற்கையானுல் வெள்ளைப் புடவைக்கு அழுக்கேறுகிறதுபோல மோக்ஷத்திலும் வந்து பொருந்தும். ஆகையினுலே செயற்கையுமன்று. ஆனுற் சித்தாந்தம் எப்படி? யென்னில், நெல்லுக்கு உமியும் செம்புக்குக் களிம்பும்போல அநாதி செயற்கை: அநாதி சையோகமென்பதுமாம். இதற்கு வசனம்:—சிவ ஞானபோதம் (II. 2. உதாரணவெண்பா 3.) 'நெல்லுக்குமியும்' என்றது.

ஆன்மாவுக்கு அநாதியிலேயே ஆணவமலத்தைக் கர்த்தா கூட்டினுனே? மலம் தானே வந்து பிடித்ததோ? கர்த்தா நின்மலராய்ச் சர்வாநுக்கிரக ராகையினுலே கர்த்தா கூட்டினதன்று. ஆணவமலம் சடமாகையால் தானே வந்து பிடிக்க மாட்டாது. ஆனுல் வேதாகமங்களில் எப்படி? யென்னில், ஆன்மாவே ஆணவமலத்தைப் பிடித்தானென்றறிக. இதற்கு வசனம்:—சிவப்பிரகாசம் (II. 1.) 'எண்ணரிதாய் நித்தமாயிருண்மலத்து ளழுந்தி' என்றது.

## சித்தாந்தமரபு கண்டனம்

'ஆன்மா வாணவமலத்தைப் பிடித்தான்; அது கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்தது;' என்ருர். 'ஆன்மா வாணவமலத்தைப் பிடிப்பானுகிற் பின்னெருகால் விடுவதுஞ் செய்குவன்: அதற்கொரு கர்த்தா வேண்டுவதில்லை. ஒருவ னின்புளதைப் பிடிப்பானெழியத் துன்புளதைப் பிடியான்; அன்றியும், மலத்தைப்

பிடித்தவன் சிவத்தையும் பிடிப்பானென்று சொல்லவும் வரும். ஆன்மா மலத்தைப் பிடிப்பதற்குமுன் என்னுகவிருந்தானென்று கேட்கவும் வரும். அன்றியும் கேவலத்தில் 'அறிவில னமூர்த்த னித்தன்' (சித்தி. IV 38.) என்றும், 'தானே மாட்டா தியானே செய்கில னீயோ செய்யாய் நின்மல னுயிட்டு' (இருபாவிருப:து 4) என்றும் சுருதியிருக்கையால், ஆன்மா மலத்தைப் பிடித்தானென் பது சித்தாந்திகட் கடாது. மலங் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுக்குமாகிற் காடாந்தகார நேத்திரத்திற்குப் பதார்த்ததரிசன மும், அதில் விருப்பமும் உண்டாக்கவேண்டும். அவ்வாறனுபவ மில்லாமையால், அது கூடாதென வறிக, திருசிய பதார்த்தத்திலே விருப்பமுண்டாவதொழிய அதிருசியத்திலே விருப்பமில்லை. ஆகை யால் அவ்வாறு கூறியது. அன்றியும் லட்சணத்திலே 'இருளொ ளிர விருண்ட' (**சிவப்பிரகாசம்** II 2.) என்று சுருதியிருக்கையால் அது சடமாகையால், அடாதெனவறிக. 'எண்ணரிதாய்' (**சிவப் பிரகாசம்** II. 1.) என்ற சுருதி யெடுத்துக் காட்டினுர். அதற்குத் தாற்பரியம் அவ்வாறு கூடாது. சித்தாந்திகளைக் கேட்டால் மலை வறச்சொல்லுவார்கள்.

## *சித்தாந்தமரபு கண்டன கண்டனம்*

*'பிடித்தான் என்றது பொருந்தாது'* என நமக்கு வேண்டிய *வாறெல்லாங்கூறி*, *'இருண்மலத்து எழுந்தி'* (சிவப். II. 1.) என் *றற்றொடக்கத்துச் சுருதிகட்குந் தாற்பரியம் வேறு'* என்றீர். ஆன் *மாவிலக்கண முள்ளவாறுணரமாட்டாமையின் அவ்வாறு கூறினீர். அம்முறைமை நமக்கு விளங்குமாறு விரிக்கற்பாலதன்று.* 'மலங் *கன்மத்திலே விருப்பத்தைக் கொடுக்குமாறில்லை'* என்றீர். 'போத் *திருத் துவத்தை நிகழ்த்தி'* (சித்தி. II. 80.) என்றற்றொடக்கத் *துச் சுருதிகளின் ருற்பரிய மறியாமையின் இவ்வாறு கூறினீர். ஈண்டு விரும்பப்படுங் கன்மமென்ற திதுவென்பதூஉம், முதற்கணு காமிய முண்டாமாறும் பிறவும் ஈன்றணியகுழவிதாய் முலைப்பாலை*

விரும்புமாறும் அறியமாட்டாமையின், அதிருசிய பதார்த்தத்தின் வைத்து விருப்பமுண்டாவதில்லை என்று நுமக்குத் தோன்றியவா றெல்லாங் குழறினீர்.

# 3.

## சித்தாந்தமரபு

ஆன்மாவுக்குச் செய்தியுண்டோ இல்லையோ? ஆன்மாச் சுதந்திரவீனனுகையாலே சிவனுக்கே செய்தியல்லாமல் ஆன் மாவுக்குச் செய்தியில்லையென்றால், ஆன்மாவுக்கு நரக தண்டனை யுண்டாகவேண்டுவதில்லை. வேதாகமங்களிலே விதிவிலக்குச் சொல்லவேண்டுவதில்லை. ஆன்மாவுக்கு நரக தண்டனை யுண்டாயிருக்கிறபடியினுலேயும் வேதாகமங்களிலே விதிவிலக்குச் சொல்லியிருக்கிறபடியினுலேயும் ஆன்மாவுக் குச் செய்தியுண்டு. இதற்கு வசனம்:—சித்தியார் (சுப. 123.) 'அருளினு லுரைத்த நூலின் வழிவரா ததன்மஞ் செய்யின்' என்றது.

## சித்தாந்தமரபு கண்டனம்

'மூன்றில் விசேடமில்லை'

# 4.

## சித்தாந்தமரபு

ஆன்மாவுக்குக் கன்மத்திலே யுண்டாகிய விருப்பம் சிவன் கொடுத்த விருப்பமோ? ஆன்மாவுக்குள்ள விருப்பமோ? சிவன் கொடுத்த விருப்பமானுல் தீவினை செய்வித்து நரகத் திலே போடார். நரகத்திலே போட்டுத் தண்டிக்கையினுலேயும் ஆன்மாவுக்குக் கன்மத்திலே நிவர்த்தி வந்த காலத்திலே கெடாதபடியினுலேயும் சிவன் கொடுத்த விருப்பமன்று. ஆன் மாவுக்குள்ள விருப்பமானுல், நல்வினை யிருக்கத் தீவினையைச்

செய்து நரகத்திலே போகையினுலே ஆன்மாவுக்குள்ள விருப்பமுமன்று. இனிச்சித்தாந்தம் எப்படி ? யெனில், ஆணவ மலமே ஆன்மாவுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத் தது. ஆணவமலமாகியசடத்துக்குச்செய்தியுண்டோ? என்னில் விடம் கள்ளுப் பாடாணம் காற்றுத் தீ நீர் முதலிய சடங்களுக் குச் செய்தியுண்டானுற் போல ஆணவமலமாகிய சடத்துக்குச் செய்தியுண்டு.

## சித்தாந்தமரபு கண்டனம்

'ஆன்மாவுக்குக் கன்மத்திலே விருப்பமுண்டாக்கினது ஆன் மாவினுடைய செயலுமல்ல. சிவன் செயலுமல்ல. மலங்கொடுத் தது. சடத்துக்கு வியாபாரமுண்டோ? வெனில், விடந் தீ நீர் கள்ளுப் போலுண் டென்ருர். விருப்பம் ஞானசெனகம்; விஷாதி பானுதி யினுல் ஞானவேற்றுமை கண்டோமெனில், தனுகரணுதி வியாபா ரத்தோடுங் கூடினவ னெடுத்துப் பருகல் முதலியன செய்யில் அங்ஙனஞ் சிறிது வியாபாரமுண்டானதுஞ் சைதன்னியத்தோடு கூடின பின்னதொழிய வேறில்லை. ஆகையாற் கன்மத்திலே விருப் பம் மலங் கொடுத்ததென்பது கூடாது.

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

*'விருப்பம் ஞானசெனகம்' என்றீர். அது சித்தசாதனம். ஈண்டெடுத்துக்கொண்டது விருப்பத்தைக் கொடுத்தற்கணெழுந்த வினுவிடையென்ப தாண்டே விளங்கிக் கிடப்பவும், அஃதறிந்து கொள்ளமாட்டாது அறிந்தவர்போலப் பிதற்றினீர். 'சடத்துக்கு வியாபாரம் விடந் தீ நீர் கள்ளுப் போலுண்டென்றல் சைதன்னியத் தோடு கூடின பின்னதொழிய வேறில்லை' என்றீர். அதுவுஞ் சித்த சாதனம். "விடம்படு மூன்றிரள் போன்றது"* (இருபாவிரு 4.) *என்னுஞ் சுருதியின் ருற்பரியமு மறிகிலீர் போலும்.*

## 5.

## சித்தாந்தமரபு

விருப்பத்தைக் கொடுத்த ஆணவமலமும் ஆன்மாவுக்குக் கன்மத்தை யறிந்து எடுத்துக்கொடுக்கமாட்டாது. விரும்பின ஆன்மாவும் கன்மத்தை அறிந்து எடுத்துக்கொண்டு புசிக்க மாட்டாது. விரும்பப்பட்ட கன்மமும் ஆன்மாவை அறிந்து வந்து பொருந்த மாட்டாது. இச்செய்தியைக் கருத்தா இரக்கத்தினலே அறிந்து விருப்பத்துக்கு ஏற்ற தனுவைக்கொடுத்து அத்தனுவினிடமாகக் கன்மத்தைக் கூட்டிப் புசிப்பிப்பார். ஆணவமலமே ஆன்மாவுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்ததென்பதற்குக் குழந்தை, பிணியாளன் முதலிய உவமைகள் வருமாறு :—

குழந்தைக்குப் பாலிலே யுண்டாகிய விருப்பந் தாய் கொடுத்த விருப்பமோ ? குழந்தைக்குள்ள விருப்பமோ ? தாய் கொடுத்த விருப்பமானல் தாயானவள் பால்கொடுத்த நேரமெல்லாம் குடிக்கவேண்டும். அப்படிக் குடியாதபடியினலே தாய்கொடுத்த விருப்பமன்று. குழந்தைக்குள்ள விருப்பமானல் எந்நேரமும் குடிக்கவேண்டும் அப்படிக் குடியாதபடியினலே குழந்தைக்குள்ள விருப்பமும் அன்று. ஆனல் எப்படி? யெனில்:- அப்பசியே குழந்தைக்குப் பாலிலே விருப்பத்தைக் கொடுத்தது. விருப்பத்தைக்கொடுத்த பசியும் குழந்தைக்குப் பாலை அறிந்து எடுத்துக்கொடுக்கமாட்டாது. விரும்பின குழந்தையும் பாலை யறிந்து எடுத்துக் குடிக்கமாட்டாது. விரும்பப்பட்ட பாலும் குழந்தை வாயிலே அறிந்து வந்து புகுதமாட்டாது. இந்தச் செய்தியைத் தாயானவள் இரக்கத்தினலே அறிந்து பாலை எடுத்துப் பாலடையிலே விட்டுக்கொடுப்பாள். குழந்தை யொன்று, பசியொன்று, பாலொன்று, பாலடையொன்று, தாயொன்று ஆக ரு. குழந்தையைப்போலும் ஆன்மா, பசியைப்போலும் ஆணவமலம், பாலைப்போலும் கன்மம், பாலடையைப்போலும் சரீரம், தாயைப்போலும் சிவன். பிணியாளனுக்கும் இப்படியே ஒட்டிக்கொள்க.

ஆன்மாவுக்குச் சரீரத்திலே யுண்டாகிய விருப்பம் சிவன் கொடுத்த விருப்பமோ? ஆன்மாவுக்குள்ள விருப்பமோ? சிவன் கொடுத்த விருப்பமானுல் அவர் சரீரம் கொடுத்தபோ தெல்லாம் பற்றவேண்டும். அப்படிப் பற்ருதபடியினுலே சிவன் கொடுத்த விருப்பம் அன்று. ஆன்மாவுக்குள்ள விருப்பமானுல் சரீரத்தில் இடைவிடாமல் பற்றிக்கொண்டிருக்க வேண்டும். அப்படிப் பற்ருதபடியினுலே ஆன்மாவுக்குள்ள விருப்பமுமன்று. ஆனுல் எப்படி? யென்னில் :—ஆணவமலமே ஆன்மாவுக்குச் சரீரத்திலே விருப்பத்தைக் கொடுத்ததென்பதற்குக் குருடன் முதலிய உவமை வருமாறு :—

குருடனுக்குக் கோலிலே யுண்டான இச்சை கோல் கொடுத்து இழுக்கிறவன் கொடுத்த இச்சையோ? குருடனுக் குள்ள இச்சையோ? கோல்கொடுத்து இழுக்கிறவன் கொடுத்த இச்சையானுல் அவன் கோல்கொடுத்தபொழுதெல்லாம் பிடிக் கவேண்டும். அப்படிப் பிடியாதபடியினுலே அவன்கொடுத்த இச்சையன்று. குருடனுக்குள்ள இச்சையானுல் கோலே இடை விடாமற் பிடித்துக்கொள்ளவேண்டும். அப்படிப்பிடியாதபடி யினுலே குருடனுக்குள்ள இச்சையன்று. ஆனுல் எப்படி?யென் னில் :—குருடே குருடனுக்குக்கோலிலே இச்சையைக்கொடுத் தது. இச்சையைக் கொடுத்த குருடும் குருடனுக்குக் கோலே அறிந்து எடுத்துக்கொடுக்கமாட்டாது, இச்சித்த குருடனும் கோலே அறிந்து எடுத்துக்கொள்ள மாட்டான். இச்சிக்கப் பட்ட கோலும் குருடன் கையிலே பரிந்துவந்து பொருந்த மாட்டாது. இந்தச் செய்தியைக் குருடனுக்கு உரிமையுள்ள வர்கள் இரக்கத்தினுலே அறிந்து கோலே எடுத்து அவன் கொண்டுபோய் விடச்சொன்ன இடத்திலே கோலேப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய்விடுவார்கள். குருடன் ஒன்று, குருடு ஒன்று, கோல் ஒன்று, கோலிழுக்கிறவன் ஒன்று, இடம் ஒன்று ஆக 5. குருடனேப்போலும் ஆன்மா, குருட்டைப்போலும் ஆணவம், கோலேப்போலும் சரீரம், கோல்கொடுத்திழுக்கிற வன்போலும் சிவன், இடத்தைப்போலும் புவனங்கள் ஆக 5.

## சித்தாந்தமரபு கண்டனம்

கன்மம் ஆன்மாவைப் பொருந்துமாறு இந்த விரண்டினாலுங் கூடாது; கர்த்தா விரக்கத்தினாலே இவன் விரும்பின சரீரத்தை விரும்பின புவனத்திலே கொடுத்து விரும்பின கன்மத்தைப் புசிப்பிப்பான் என்று, 'எண்ணரிதாய்' (சிவப்பிரகாசம் II. 1.) என்ற சுருதி யெடுத்துக் காட்டினார். அதற்குத் தாற்பரியம் அவ்வாறு கூடாது: அநாதியிலே ஆன்மாவுக்கு விருப்பமுண்டானதற்கு வகையுங் கன்மமுண்டானதற்கு வகையுஞ் சொல்லவேண்டும். அன்றியும், 'போகத்திற் கொள்கையில்லான்' (சித்தி. IV. 38.) என்றிருக்கிறதினாலே அவ்வாறு கூடாதெனவறிக. இதற்குக் குழந்தை பிணியாளன் குருடனுவமைகள் காட்டிக், குழந்தைக்குப் பசியே பாலில் விருப்பமுண்டாக்கினது என்றும், பிணியே மருந்தில் விருப்பமுண்டாக்கினது என்றும், குருடே கோலில் விருப்பமுண்டாக்கினது என்றும் சொன்னார். பாலுக்கும் பசிக்கும் சத்துரு; மருந்துக்கும் பிணிக்கும் அவ்வாறாகையாலும், குருடு அறியாமை கோலுஞ் சடமாகையாலும், விருப்பமுண்டாகாது. ஆகையாற் குருடன் குழந்தை பிணியாள னுவமையும் உவமேயம் போனவழியே போயினது.'

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

அநாதியி லான்மாவிற்கு விருப்பமுண்டானதற்கும் கன்மமுண்டானதற்கும் வகைசொல்லவேண்டும் என்றீர். பரிபாகமுடையார்க்கன்றிச் சித்தாந்த விரோதிகட்கு வகைசொல்லார்களென்ப தறிந்து வைத்தும், 'வகைசொல்லவேண்டும்' 'வகைசொல்லவேண்டும்' என்று குரங்கெறிவிளங்காய்போலக் கேட்பானெருப்படுகின்றீர். இதுநிற்க: "போகத்திற் கொள்கை யில்லான்" (சித்தி. IV. 38) என்றெடுத்துக் காட்டியது சித்தசாதனம். அஃதிவ் வசனத்தோடு முரணுதற்கு ஒருவாற்றானு மியைபில்லை. ஈண்டுக்கூறிய நுட்பப்

பொருள் வழிபடுமுறையில் வழிபட்டுக்கேட்டால் இனிது விளங்கும். 'பசி பிணி குருடுகள் பான் மருந்து கோல்கட்குப் பகைப்பொருள் களாகலானும், சடமாகலானும், அவையவற்றின் விருப்பமுண்டாக் குமாறில்லை' எனவும், 'இவ்வாறே மலமுஞ் சரீரகன்மங்களின் விருப்பமுண்டாக்குமாறில்லை' எனவும், கூறினீர். பனி மிகுதி யின் வெயிலை நாடுதற்கு ஏதுவாய்நின்ற தியாதெனச் சிறுமகாரைக் கேட்பினும் இப்பொரு ளுமக்கவ ரறிவுறுத்துவர். இன்ன காரிய நிகழ்ச்சிக்கு, இன்னது காரணம், இன்னது கரணம், இன்ன தேது வென்பன வறியாமையின், அறிவென்று மருள்கொண்ட நீர் கூறு வனவெல்லா நும்மனோர்க்கே யொப்பாம். இது நிற்க: பகைப் பொருளுஞ் சடமுமாதலைபற்றி ஈண்டிவ்வாறு கூறிய நீர், முத்தி நிலையில் "இன்பங்கொடுத்தலிறை யித்தைவினை வித்தன்மலம்" (உண்மைவிள. 50.) என்னுஞ் சுருதிக் கிவ்வளவினன்றிப் பெரி தங் குற்றங் கூறுவீர்போலும். அதன்முற்பரியந்தா னறிதற்கு நீர் யார்?

# 6.

## சித்தாந்தமரபு

ஆன்மா முதல்வனோ? சிவன் முதல்வனோ? சிவன் முதல் வனானால் ஆன்மாவுக்குத் தனுகரணாதியிலே விருப்பம் இருக் கையிலே மோக்ஷம் தருகிறோமென்று அழைத்தால் அவர்வழியே செல்லான். ஆகையினாலே சிவன் முதல்வன் அல்லன். ஆன்மா விரும்பினபடி தனுகரணாதிகளைக் கூட்டிக் கன்மத் தைப் புசிப்பிக்கிறபடியினாலே ஆன்மாவே முதல்வன். இஃது எப்படிப்போல? என்றால்:—குருடன் முதல்வனோ? கோல்பிடித் திழுக்கிறவன் முதல்வனோ? கோலைப்பிடித்து இழுக்கிறவன் முதல்வனானால், குருடனுக்குக் குளக்கரை போகவேண்டு மென்று இச்சை இருக்கையிலே கோல்காட்டி கோவிலுக்கு வா என்றழைத்தால் வாரான். ஆகையினாலே கோல்காட்டி

முதல்வன் அல்லன் ; குருடன் நினைத்தபடி குளக்கரையிலே கொண்டுபோய் விடுகையினாலே குருடனே முதல்வன்.

## சித்தாந்தமரபு கண்டனம்

இச்சித்த கன்மம் புசிக்கிறதற்குத் திருட்டாந்தம், குருடன் முதல்வனொழியக் கோல்கொடுத்தி ழுக்கிறவன் முதல்வனல்லன். அதுபோலஆன்மா முதல்வனொழியச் சிவன் முதல்வன் அல்லன் என்றார். ஒருவனுக்குப் புத்திரனுண்டாகவேண்டுமென் றிச்சை யிருக்கப்பெண்டாட்டி செத்துப்போ யழக்கண்டோம் ஆகையால் ஆன்மா முதல்வன் அல்லன்.

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

*இச்சித்தவாறே கூட்டுவன் என்ற வசனத்துக்குத் தாற்பரிய மறியாது, 'ஒருவனுக்குப் புத்திரன் வேண்டுமென் றிச்சையிருக்கப் பெண்டாட்டி செத்துப்போ யழக்கண்டோமாகையால், ஆன்மா முதல்வனல்லன்' என்றீர்.* "வேண்டுவார் வேண்டியதே யீவான் கண்டாய்" (திருத்தாண்டகம்–மறைக்காடு 1.) "கருத்தறிந்து முடிப்பான் றன்னை" (திருவாலவாய் 8.) "புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப்பெயர்த்து, *என்வழி நின்றன னெந்தை யன்றே*" (இருபாவிரு. 18.) *என்றற்றொடக்கத்துச் சுருதிகளையு மிவ்வாறு சங்கித்துக் குற்றங்கூற மறந்துவிட்டீர்போலும்.*

## 7.

## சித்தாந்தமரபு

சிவன் சரீரத்தைப் படைக்குமிடத்துத்தம்முடைய நினைவின் படி படைப்பாரோ? ஆன்மாக்களின் நினைவின்படி படைப்பாரோ? தம்முடைய நினைவின்படி படைப்பாரானால், ஒருவடிவாகப்

படைக்கவேண்டும். அப்படிப் படையாமல் பலவடிவாகப் படைக்கிறபடியினுலே தம்முடைய நினைவின்படி படைக்கிறவரல்ல. ஆன்மாக்களுடையநினைவின்படியே படைப்பார். இஃது எப்படிப் போல என்ருல் :—

குயவன் பாண்டங்களை வனையுமிடத்துத் தன்னுடைய நினைவின்படி வனைவானே? பிறருடைய நினைவின்படி வனைவானே? தன்னுடைய நினைவின்படி வனைவானேயாகில் ஒருவடிவாக வனையவேண்டும். அப்படி வனையாமற் பலவடிவாக வனைகிறபடியினுலே தன்னுடைய நினைவின்படி வனைவானல்லன் : பிறருடைய நினைவின்படியே வனைவான். குயவன் ஒன்று, மண் ஒன்று, பாண்டம் ஒன்று, பிறர் ஒன்று ஆக-4. குயவனைப்போலும்சிவன், மண்ணைப்போலும் மாயை, பாண்டத்தைப் போலும் சரீரம், பிறரைப் போலும் ஆன்மாக்கள்

## சித்தாந்தமரபு கண்டனம்

'சிவன் ஆன்மாவுக்குச்சரீரம் படைக்குமிடத்து, ஆன்மாக்கள் நினைவின்படியே படைப்பான்; குயவன் கொள்வோர் நினைவின்படி பாண்டம் வனைதல்போல' என்ருர். ஆன்மாக் கேவலியாயிருக்கையில் இன்ன கன்மஞ் செய்தேன், அதற்கின்னபுவனத்தில் இன்ன தனு வுண்டென் றெப்படி யறிவான்? அவனினைவின்படி சிவன தனை யுண்டாக்குவதெப்படி? அன்றியும் சிவனனேக விசித்திரங்களாயிருக்கிற தேகத்தை வெகுவாயுண்டுபண்ணி யோரிடத்திலே வைத்துக்கொண்டு இருக்க, ஆன்மாக்களெல்லாரும் போய்த் தங்களுக்கிச்சையான தேகத்தை எடுத்துக்கொண்டு போகிறதாயிருந்தாற் குயவன் றிருட்டாந்தங் கூடும்,

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

ஆன்மாவினினைவின்படி படைப்பான் என்றதற்குத்தாற்பரியமறியாது, இன்ன கன்மஞ்செய்தேன் அதற்கின்னபுவனத்திலின்ன

தனுவுண்டென்றறிவதே ஈண்டு நினைவென்றதற்குப் பொருளாகக் கொண்ட நும்மறியாமையின் பெருமை வியக்கற்பாலதேயாம். குயவன், பாண்டங் கொள்வோர்க்குரிய தன்மைகள், முழுவதுந் தாட்டாந்திகத்தி லின்மையிற் குயவன் றிருட்டாந்தமாதல் கூடாது என்றீர். நால்வகை யுவமங்களினியல்பு பகுத்துணரமாட்டாத நீர் இவ்வாறு பிதற்றுவதேயன்றி மற்றென்செய்வீர். இன்னுங் குயவன் றிருட்டாந்தங் கூடாதென்ற நீர் "ஆரியன் குலாலனுய்நின் றுக்குவ னகிலமெல்லாம்" (சித்தி I. 18.) என்றற்றொடக்கத்துச்சுருதிகளை யுமிகழ்வீர் போலும். முற்றுவமையொன்றற்குங் கூடாதென்ப தினியாகிலு மறிக.

## 8.

## சித்தாந்தமரபு

வண்ணானவன் புடைவையிலே யுள்ள அழுக்கை உவர் சாணியூட்டிப் போக்குகிறது போலச் சிவஞானவர் ஆன்மாவி னிடத்திலேயிருக்கிற ஆணவமலத்தை மாயா கருவிகளைக் கூட்டிப்போக்குவார்.

### சித்தாந்தமரபு கண்டனம்

'எட்டாவது சரி'

### சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

'எட்டாவது சரி' என்றீர். எட்டாவதெனக்கொண்டது முன் னும் பின்னு நோக்குங்காற் "செழுநவை யறுவை சாணி யுவர் செறி வித்தழுக்கை, முழுவதுங் கழிப்பன் மாயை கொடுமல மொழிப்பன் முன்னோன்" (சித்தி. II. 52.) என்ற சுருதிப்பொ ருள் போலும். ஏனையவற்றிற்கெல்லா மொருவாற்றானு மியை பின்றிக் குற்றம்போலச் சில குழறிய நீர், ஈண்டும் 'உவர்சாணிக

ளைத்தனை செறிவித்துங், கூறையிற்சேங்கொட்டை காட்டாமணக் குப்பான் முதலிய கறைபட்ட வழுக்குக் கழியாதிருக்கக், கூறை யுடையவர்கள் பார்த்து, இப்படிக் கறையிருக்கக் காரணமென்னை என்று வண்ணானை அடித்து அபராதமும் வாங்கின தூர்தொறுங் கண்டதில்லையோ? முழுவதுங் கழிப்பனென்றதெப்படிக்கூடும்? என்றும், 'இந்தக் கறையழுக்கைப் போக்கமாட்டாத வண்ணான் அடையாளம் போட்டிருக்கவுந் தெரியாமலேகதேசத்திற் புடவை மாறிக்கொடுத் தூர்தொறு மிழுப்புப்பட்ட வண்ணாக்கு மூத்தவனே யாம்' என்றும், 'எல்லாம்வல்ல முதல்வனுக்குக் கறையழுக்குப் போக்கமாட்டாத வண்ணானை ஒப்புரைக்கலாமோ' என்றும், முன் னோன் மாயைகொண்டு மலமொழிப்பனாயின், ஞானமேதுக்கு? தீக்கை எதுக்கு? என்றும் பின்னு மிங்ஙிகரனவாகக் குற்றங்கூற வறிந்திலீர் போலும். இதற்கு மிவ்வாறெல்லா மூகரோம முறுக் கிக்கொண்டு குற்றங்கூறப்புகுந்தே, நடுவே துச்சகுனம்போலச் சுருதி வந்து நேரிட்டது கண்டு, பேசமாட்டாமற் பிட்டுத்தின்று விக்கினாற்போ னின்றுவிட்டே மென்பீராகில், ஏனையவற்றிற்கு மிவ்வாறே சுருதி யுண்டென்ப தறிந்துகொள்ளமாட்டாது, நும் மறியாமையை வெளிப்படுத்தினீர். இன்னும், சுருதிகண்டவழிக் குற்றமில்லையெனக்கோடலுஞ், சுருதிகாணாதவழிக் குற்றமெனக் கோடலுமேயன்றி, இதுதகும்; இது தகாது; தக்கவற்றிற்கெல் லாஞ் சுருதியுமிருக்கும்; அஃதெங்குள்ளதோ? நமக்குத் தெரிய வில்லை யென்றறிந்துகொள்ளு நடுவுநிலைமையின்றி, நீரறிந்த சுருதி மாத்திரையிற் பட்சபாதம்பண்ணி, நும்மறிவுக்குப் புலப்படாத வற்றை யிகழ்தல் நுமக்கே தகும். இவ்வாறே யின்னு மாண்டாண் டுச் சிலவற்றைச் 'சரி' யென்றும், சிலவற்றை 'விசேடமில்லை' என்றும், சிலவற்றைப் 'பசையில்லை' என்றும், நீர் கூறுங் கூற் றெல்லா நும்மறியாமைப் பசையேயாம்.

## 9

### சித்தாந்தமரபு

மலபரிபாகமாவது : மலம்—ஆணவமலம், பரி—உபசர்க்கம், பாகம்—திரிவு ; கெடுதலுமாம். ஆன்மாவுக்குப் பக்குவம் வந்த காலத்திலே மலசத்தியானது ஆன்ம ஞானத்தை மறையா திருத்தலாம்.

### சித்தாந்தமரபு கண்டனம்

'மலபரிபாகமாவது ஆன்மாவுக்குப், பக்குவம் வந்தகாலத்தில் மலசத்தி ஆன்மஞானத்தை மறையாதிருத்தல். பரி உபசர்க்கம், பாகந் திரிவு' என்றார். திரிவாவதொன்றென்றுகிறது. அந்த லட்சண மலத்தினிடத்திலே காணேம். ஆகையால் இவர் சொன்ன மலபரிபாக லட்சணங் கூடாது.

### சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

மலபரிபாகம் என்புழிப் பாகந் திரிவென்று பொருள் கூறிய தாக வெழுதினீர். அவ்வாறொருவருங் கூறார். நீர் சொல்லக் கேட்டோம். அன்றியும் அங்ஙனம் பொருள் கொள்ளினும் அத ஞற்போந்த விழுக்கென்னை? மூன் "அறிவுமுழுதினையுமறைக்கு" (சிவப். II. 2.) மெனப்பட்ட மலசத்தி பின் மறைக்கமாட்டாதாய் வேறுபடுமென்பது நும்மனோர்க்குக் கருத்தன்று போலும்.

## 10.

### சித்தாந்தமரபு

சத்திநிபாதமாவது : சத்தி—சிவசத்தி, நி—உபசர்க்கம், பாதம்—விழுதல் ; பதிதலுமாம், மலம் நீங்கின உயிரிலே சிவ சத்தி விளங்கித் தோன்றுதல்.

## சித்தாந்தமரபுகண்டனம்

'சத்திநிபாதமென்பது மலநீங்கின வுயிரிலே சிவசத்தி விளங்கித் தோன்றல்' என்றார். சத்திநிபாதத்திலேதானே சிவசத்தி விளங்கித் தோன்றுமாகில், இருவினையொப்பு, மலபரிபாகம், ஆசிரியர் வருதல், சிரவண முதலிய வேண்டாவாகையால், அது கூடாதென வறிக.

## சித்தாந்தமரபுகண்டன கண்டனம்

*'சினமருவு திரோதாயி கருணை யாகித் திருந்தியசத் திநிபாதந்திகழும்''* (சிவப். II. 30.) என்னுஞ் சுருதிபற்றிச் *சிவசத்தி விளங்கித் தோன்றுமென்றதன் றூற்பரியமுணராது நுமக்கு வேண்டியவாறே கூறினீர்.*

## 11.

## சித்தாந்தமரபு

**இருவினை யொப்பாவது: உலகத்தார் திரணம் பதர் முதலான பதார்த்தங்களை விருப்பு வெறுப்பின்றிக் கண்டாற்போலப் பக்குவ ஆன்மாவானவன் நல்வினையிலுந் தீவினையிலும் விருப்பு வெறுப்பின்றிக் காண்டல். உலகத்தில் எல்லாரும் விரும்பப்பட்ட பதார்த்தங்கள்: பொன் வெள்ளி செல்வம் பெண் பால் தயிர் நெய் சந்தனம் முதலியன. வெறுக்கப்பட்ட பதார்த்தங்கள் புலி கரடி பாம்பு தேள் நட்டுவக்காலி தரித்திரம் வியாதி முதலாயின. இருவினை யொப்புக்கு இன்னம் ஒரு உவமை வருமாறு:— ஒருவன் வைப்பாட்டிக்கு வேண்டிய ஆடையாபரணங்களும் வீடும் புசிப்பும் கொடுத்து அவள் வீட்டிலேயே பதினைந்து நாளும், குடியிலுள்ளாளுக்கு வேண்டிய ஆடையாபரணங்களும் புசிப்புங் கொடுத்துத் தன் வீட்டிலே பதினைந்து நாளும் இருந்துவருகையில், இல்லறநூல் கேட்டுக் கற்புடைய**

மனைவியுடனே கூடியிருந்து இல்லறஞ் செய்கிறதே முக்கிய மென்றறிந்து வைப்பாட்டியை இழந்து, அவள்மேலே முன் ஒரு ஈ இருக்கப்பொருதவன் அவளைப் பள்ளர் முதலியோர் பிடித்து இழுத்தவிடத்தும் விருப்பு வெறுப்பின்றி விட்டு நீங்கி, இல்லா ளொடும் கூடி இல்லற தருமம் நெடுநாட் செய்துகொண்டு வரு கிற நாளிலே துறவறநூல் கேட்டுத் துறவறமே முக்கியமென்று அறிந்து, குடியிலுள்ள இல்லாளையும் வைப்பாட்டியைப்போலக் கண்டு விட்டுநீங்கி, அவ்விருவரையும் விருப்பு வெறுப்பின்றிக் காண்டல் போல, ஒருவன் பாவமும் புண்ணியமும் செய்து கொண்டு வருகையிலே அறநூல் கேட்டுப் புண்ணியமே முக் கியமென்றறிந்து பாவத்தைத் தீங்கென்று அறிந்து விட்டுநீங்கி நெடுங்காலம் புண்ணியமே செய்துகொண்டு வருகையிலே ஞானசாத்திரத்தைக்கேட்டு ஞானமே முக்கியமென்று அறிந்து புண்ணியமும் ஜனன மரணத்தைக் கொடுக்கையினலே அது வும் பாவத்தைப் போலத் தீங்கென்று அறிந்துவிட்டு நீங்கி அவ்விரண்டினையும் விருப்பு வெறுப்பின்றிக் காண்டல்.

## சித்தாந்தமரபு கண்டனம்

" இருவினையொப்புக்கு லட்சணமாவது பதர் திரண முதலிய வற்றுள் விருப்பு வெறுப்பின்றி உலகர் அறிவதுபோல விரும்பப் பட்ட பதார்த்தம் வெறுக்கப்பட்ட பதார்த்தம் இந்த விரண்டு மில்லாத பதார்த்தமாகிய நல்வினை தீவினையிரண்டினும் விருப்ப மற்றிருப்பதொருவழி, மற்ரெருவழிவைப்பாட்டி இல்லாளி ரண்டும் விட்டதுபோலப் பாவ புண்ணியங்களைப் பற்றற விடுதல்" என்ருர். இதற் கிருவினை யொப்பென்னுஞ் சத்தார்த்தம் விளங் குதலுஞ் சுருதி சம்மதமுமில்லை ஆகையால் அது கூடாதென வறிக.

## சிந்தாந்தமரபு கண்டன கண்டனம்

'இருவினையினுஞ் சமபுத்தி நிகழ்தல்' என்றதனல், இருவினை யொப்பென்னுஞ் சத்தார்த்தம் விளங்காது என்றீர். நும்முடைய

வெள்ளறிவிற்கு விளங்காதுதானே. சுருதி சம்மதியுள்ளது நீரறியீர். "இருவினையொப்பென்பதற்கு வினைமுதற் பொருண்மையுணர்த்துங் காரகசட்டி விரித்துரைப்பின், அவ்விருவினை யொப்புண்டாயினும், அஃதொருவாற்றானு முத்திக்குக் காரணமன்று" என விரித்தோதி மறுத்த பவுட்கரத்துச் சுருதியோடும், 'இருவினை தூக்க வருவினை நில்லா-வொருவினை புரிகாவிருவினை யாகா-வொப்புற மாறு செப்புக' (சங்கற்ப நிரா. சைவவாதி சங்கற்ப நிராகரணம் 22-24) என்ற சுருதி முதலியவற்றோடு முரணி ஈண்டைக்குப் பயன்படாமை யறிக. இனிக்காரகசட்டியை விரிப்பினும், சமபுத்தி செய்வோ னறிவின்க ணிருவினையு மொருதன்மையவாயொத்தல் இருவினை யொப்பெனப் பொருடருதற் கிழுக்கென்னை?

## 12.

## சித்தாந்தமரபு

சிவன் தானே ஆசாரிய மூர்த்தமாய்த் திருமேனிகொண்டு வருவார் என்பதற்குப் பல குற்றங்கள் உள. அவையாவன:— ஆசாரியராகிய ஒருவரது ஆன்மாவானது பிதாவினுடைய உதரத்திலே இரண்டுமாசமிருந்து, பிதாவானவன் தன்னுடைய மனைவியுடனே சையோகம் செய்கிற காலத்திலே யோனி வழியே புகுந்து மாதாவினுடைய வயிற்றிலே கருப்பாசயத்திலே பத்துமாசங் கட்டுப்பட்டுக் கிடந்து, பிறகு பூமியிலே பிறந்து, மலமூத்திராதிகளை அளைந்து கிடந்து, வளர்ந்து ஒரு வாத்தியாரை அடைந்து தண்டனைப்பட்டு, அக்ஷராப்பியாசம்பண்ணிப் பின் வித்துவானிடத்திலே அவனுக்கு ஏவல்செய்து வித்தியாப்பியாசம் பண்ணிப், பின்பு ஒரு ஆசாரியரை அடைந்து சமய விசேட நிருவாண அபிடேகம் பண்ணிக்கொண்டு, இன்னான் மகன் இன்னானென்றறிந்து க்ஷயம் குட்டம் முதலாகிய வியாதிகளை அடைந்து மரணமுறுதலன்றியும், 'மாயா வொருவன் மாயா வுருவினை, யேயா னேய்ந்தவ ரெம்ம னோரே' (சங்கற்ப

நிராகரணம் : சைவவாதிநிராகரணம் 26, 27.) என்றும், 'பிறவா முதல்வன் பிறந்து' (போற்றிப்பஃறொடை 38.) என்றும், 'உணர்வாய் நின்ற ஞானக்கூத்தனொரு மூர்த்திகொடு குறுகி' (சிவப்பிரகாசம் II. 30) என்றும், 'முன்ன, மீட்டிய தவத்தினாலே யிறையரு ளுருவாய் வந்து' சிவப்பிரகாசம் VI. 1.) என்றும், 'மன்னுமருட்குருவாகி' (சிவஞான சித்தி VIII. 1.) என்றும், இருக்கிற வசனங்களுக்கெல்லாம் விரோத முண்டென்னிற் கூறுதும். கர்த்தா ஆசாரியமூர்த்தமாய்த் திருமேனிகொண்டு வருதலாவது, மலம் நீங்கின உயிரிலே சிவஞானம் வெளிப் பட்டு விளங்கித் தோன்றுதல்.

## சித்தாந்தமரபு கண்டனம்

கர்த்தாக் குருமூர்த்தியாய்த் திருமேனிகொண்டு வருதலுக்குப் 'பிறவா முதல்வன் பிறந்து' (போற்றிப்ப: 69.) என்று வெகு வசனஞ் சொல்லிப், பின்னும் 'மாயா வொருவன் மாயாவுருவினை யேயான்' (சங்கற்பநிரா. சைவவாதி சங்கற்பநிராகரணம் 26. 27.) என்ற வசனத்துக்குப் போக்குவிடமாட்டாமற், கொசுகுக் கடிக்குப் பயந்து புலியின் வாயகப்பட்ட கதைபோல 'மலநீங்கின வுயிரிலே சிவஞானம் வெளிப்பட்டு விளங்குதலாலே அதுவே யாசிரியன்' என்றார். சூரியகிரணத்தாலே யிருணீங்கின கண் மற்றொரு கண்ணுக்கு இருளை நீக்குமாகில்' அது கூடும். அன்றியும், 'துறந்தோர் துறப்போர் தொகை' (திருவருட்பயன் உயிரவை நிலை 1.) என்றபடிக்கு மலநீங்கின வுயிர்களுக்கு மளவில்லை. ஆகை யால் ஒரு ஆன்மாவுக்கு ஒரு ஆன்மா வனுக்கிரகஞ் செய்யும். சிவன் வேண்டாம். பஞ்சகிருத்தியத்திலே அனுக்கிரக கிருத்தியம் ஆன் மாவுக்காக வேண்டும், ஆகையால் அது கூடாதென வறிக.

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

*'அருளுரு மன்னவ னணைந்து'* (சங்கற்பநிரா. சைவவாதி சங்கற்பம். 8) என்றது *மதத்துட் கூறியது.* "*மாயா வொருவன் மாயா வுருவினை-யேயா னேய்ந்தவ ரெம்ம னேரே*" (சங்கற்ப

நிரா. சைவவாதி சங்கற்பம் 26. 27.) என்றது ஏனையபோலன்றிச் சித்தாந்த முடிவினின்று உண்மையா னிராகரிக்கு நிராகரணத்தி னுட் கூறியதாகலின், அவற்றின் மென்மை வன்மைகணோக்கி நிரா கரணச் சுருதிக்கேற்ப மதசங்கற்பத்திற் கூறியதற் கிணங்கிவருஞ் சுருதிக்குப் போக்குவிடுவதன்றி, மதசங்கற்பச் சுருதிக்கேற்பச் சித்தாந்த முடிவினின்று நிராகரிக்கு நிராகரணச் சுருதிக்குப் போக்குவிடுதல் பொருந்தாதென் றறியாது 'அருளுரு மன்னவ னணைந்து' (சங்கற்ப நிரா சைவவாதி சங்கற்பம். 8) எனக்கூறி யதே முக்கியப்பொருளெனக்கொண்டு, 'மாயா வொருவன் மாயா வுருவினை-யேயா னேய்ந்தவ ரெம்ம னோரே' (சங்கற்ப நிரா. சைவவாதி சங்கற்பம் 26. 27.) எனக்கூறுஞ் சுருதிக்குப் போக்கு விடுதலே பொருத்தமுடைத்தென மாறிக்கொண்ட நீரே, சுருதி கட்குத் தம்முட் பிரபல துர்ப்பலங்களறிய மாட்டாது, மசகக்கடிக் கஞ்சிப் புலியின் வாயகப்பட்ட கதைக்கிலக்காயினீர். 'சிவஞானம் வெளிப்பட்டு விளங்குதலாலே யதுவேயாசிரியன்' எனவே, அங்ங னம் வெளிப்பட்டு விளங்கிய சிவஞானமே யனுக்கிரகிப்பதன்றி, ஆன்மா வனுக்கிரகிக்க மாட்டாதென்னும் பொருள் எல்லார்க்கு மினிது விளங்கக்கிடந்தது. நுமக்கு மாத்திரந் தெரியாது போதற் கேதுவாய்ப் பொதிந்து நின்ற நும்மறியாமையின் பெருமை வியக் கற்பாலதேயாம். சிவஞானம் வெளிப்பட்டு விளங்கிய வான்மா மாட்டு நிகழும் வியாபாரமெல்லாம் பேயாவேசிக்கப்பட்டவன் மாட்டு நிகழும் வியாபாரம்போலும் என்பது, 'பதார்த்தங்கள் பாரார்' 'பரமே பார்த்திருப்பர்' (சித்தி XI. 2.) எனப்பட்ட மெய்ஞ்ஞானி கள் நிற்குநிலை யறியமாட்டாமல் அஞ்ஞான விகற்பத்தான் மாறு கொண்டு பிணங்குகின்ற நீர் அறிதற்கு யார்?

## 13.

## சித்தாந்தமரபு

சீடனுக்கு ஆசாரியர் சந்நிதானத்திலே வந்தபின் மல நீக்கமோ? வருமுன் மலநீக்கமோ? வந்த பிறகு மலநீக்கமா

ஞல் வந்தவருக்கெல்லாம் மலம் நீங்கவேண்டும். அப்படி நீங்காதபடியினுலே வருமுன்னே மலம் நீங்கினதாம். வருமுன்னே மலம் நீங்கிஞல் ஆசாரியர் வேண்டுவதில்லையென்னில், அது கூடாது. படலம் நீங்கின கண்ணுக்கு ஆதித்தன் காட்டுவது போல் மலம் நீங்கின பக்குவான்மாவுக்கு ஆசாரியர் அறிவிப் பாராகையினுலே நீ சொன்னது கூடாது.

## சித்தாந்தமரபு கண்டனம்

'சீடனுக்கு ஆசாரியர் வருமுன் மலநீங்கும். பின் ஞசிரியர் வந்து பதார்த்ததரிசனம் பண்ணுவிப்பர். படலம் நீங்கின கண்ணுக்கு ஆதித்தன் காட்டுமாறுபோல' என்ருர், படலம் நீங்கின கண்ணுக்கு ஆதித்தன் காட்டவேண்டிய தென்னை? அத்தகைமை ஆசிரியர் மலநீங்கினபின் வந்து செய்யவேண்டிய தென்னை? இதற்குச் சுருதி சம்மதியில்லை. அன்றியும், 'ஐம்புலவேடரின்' (சிவஞானபோ சூ. 8.) என்றும், 'மன்னவன்றன்மகன்' (சிவஞான சித்தி. VIII. 1.) என்றும், 'அன்றுமுதலின்றளவும்' (துகளறுபோ. 35.) என்றும், 'படைத்தளித்தா ரென்றன் பாசம்' (சிற்றம், கட்டளைக் கலித்துறை 8.) என்றும், 'மற்றிவர் வடுப்படுமுன்' என்றும், 'நெருப்பிலிடு வெண்ணெய்' என்றும், இவை மூதலியன வின்னுமனேக வசனமிருக்கையால், அது கூடாதென வறிக.

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

'படலநீங்கின கண்ணுக்கு ஆதித்தன் காட்டவேண்டிய தென்னை'? 'அத்தகைமை யாசிரியர் மலநீங்கினபின் வந்து செய்ய வேண்டிய தென்னை'? என்றீர். எனவே, மலநீங்காத வுயிர்மாத் திரமே அறிவிக்க வறியுமியல்பிற்றெனச் சிவசமவாதி கூறுமதமாக லின், இது சித்தாந்தசைவத்திற் கடாது. குருடன் ஆதித்தனில்லை யென்பதுபோல நீரிதற்குச் சுருதி சம்மதியில்லை யென்றது நும்மறி

வின்மைக்குத் தரும். கண்ணுடையோர் ஆதித்தனுண்டெனக் காண்பதுபோல அறிவுடையோர் இதற்குச் சுருதியுண்மை யறிந்து கொள்வர். இன்னுங் கலையுண்மைக்கும் வித்தையுண்மைக்கும் பிரமாணங்கூறிய பவுட்கரவாக்கியத்தின் ரூற்பரிய மறியவல்லார்க்கு இவ்வுண்மையு மினிது விளங்கும். அன்றியும், 'ஐம்புலவேடரின்' (சிவஞானபோ. சூ. 8.) என்றற்றொடக்கத்தான் நீர் காட்டிய சுருதிகளே *விருத்திரன் வாய்மொழிபோல நும்முரணை யறுக்குங் குலிசப்படையாம். இது நிற்க. சத்தி நிபாத நால்வேறு வகைப்பட நிகழ்வதற்கேது வென்னையெனச்சத்தி பதிக்குந்தாமுமாராய்ந்தறிந்தவரல்லீர். இவையெல்லாம் வழிபட்டுக் கேட்டா லினிது விளங்கும்.

# 14, 15.

## சித்தாந்தமரபு

சுருதி குருவாக்குச் சுவாநுபவம் மூன்றனுள் முதன்மை யாது என்னில், சுருதியும் குருவாக்கும் சுவாநுபவத்திற்குக் கருவியாதலின் சுவாநுபவமே முதன்மை.

ஆன்மா நித்தியனாயிருக்கப் பிறந்தான் இறந்தானென்று சொல்லுகிறது எப்படியென்றால், ஆன்மா மாயா கருவியைப் பற்றி ஆன்மபோதம் பிறந்தால் பிறப்பு; மாயா கருவியை நீங்கி ஆன்மபோதம் பிறவாமையே இறப்பு.

## சித்தாந்தமரபு கண்டனம்

பதினான்கு பதினைந்தில் விசேடமில்லை.

---

* ஏட்டுப்பிரதியிலும் முன்னுள்ள அச்சுப்பிரதியிலும் விருத்திரன் வாய்மொழிபோல என்பது காணப்படினும், பொருளை நோக்கும்வழி விசுவரூபன் வாய்மொழிபோல என்றிருப்பது உசிதம்.

## 16.

### சித்தாந்தமரபு

பஞ்ச கிருத்தியம் நித்தியமோ? அநித்தியமோ? சித்தியார் 5-ம் சூத்திரத்தில் (V. 8.) 'உயிர்கட்கெல்லாம், விரிந்திடு மறிவுங் காட்டி வீட்டையு மளிப்பன் மேலோன்' என்று திருவுளம் பற்றியிருக்கையினாலே பஞ்சகிருத்தியம்நித்தியம்.

### சித்தாந்தமரபு கண்டனம்

பதினாறில் பஞ்சகிருத்திய நித்தியமென்பதற் கெடுத்துக்காட்டுதாரணம் பிசகு.

### சிந்தாந்தமரபு கண்டன கண்டனம்

*பதினாறில் பஞ்சகிருத்திய நித்தியமென்பதற் கெடுத்துக் காட்டிய சுருதி பிசகு என்றது பெரும்பிழை.*

## 17.

### சித்தாந்தமரபு

பஞ்ச கிருத்தியம் ஆன்மாவுக்கோ? சரீரத்துக்கோ? பஞ்ச கிருத்தியம் ஆன்மாவுக்கென்றால் ஆன்மா நித்தியமானபடியினாலே சிருட்டியும் திதியும் சங்காரமும் கூடாது. ஆகையினாலே ஆன்மாவுக்கன்று. சரீரத்துக்கென்றால் சரீரம் சடமாகையினாலே திரோபவமும் அனுக்கிரகமும் கூடாது. இனிச் சித்தாந்தம் எப்படியென்னில் 'அழிப்பிளைப் பாற்ற லாக்கம்' (சித்தியார் I. 37.) என்கிற வசனத்தினாலும், சிருட்டி திதி சங்கார மூன்றும் சரீரத்துக்கு உண்டாயிருந்தாலும் அம்மூன்றினாலே யுண்டாகிய சுக துக்கங்களும் திரோபவ அனுக்கிரகங்களும் ஆன்மாவுக்கே உண்டாகையினாலும் ஆன்மாவைக் குறித்தே பஞ்ச கிருத்தியமென்று அறிக.

## சித்தாந்தமரபு கண்டனம்

பதினேழில் விசேடமில்லை.

# 18.

## சித்தாந்தமரபு

ஆன்மா பஞ்ச கிருத்தியம் அடைவதாவது :— ஆன்மாவுக்கு அறிதற்றொழில் உண்டானதே சிருட்டி. ஆன்மாவுக்கு அறிதற்றொழில் நிற்றலே திதி. ஆன்மாவுக்கு அறிதற்றொழில் நீங்கினதே சங்காரம். ஆன்மா இன்ப துன்பங்களைப் புசித்தலே திரோபவம். புண்ணிய பாவங்களைக் கழித்தலே அனுக்கிரகம்.

## சித்தாந்தமரபுகண்டனம்

பதினெட்டில் பஞ்சகிருத்தியத்துக்கு அர்த்தம் பண்ணினதில் 'அநுக்கிரகம் புண்ணியபாவங் கழித்தல்' என்றார். அது அருத்தமல்ல.

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

பதினெட்டில் 'பஞ்சகிருத்தியத்துக்கு அர்த்தம் பண்ணினதில் அநுக்கிரகம் புண்ணியபாவங் கழித்தல் என்றார்' என்றீர். அனுக்கிரகத்துக்கு ஈண்டவ்வாறு பொருள்கொள்வார் யாருமில்லை. இனிப் புண்ணிய பாவங்களைக் கழித்தலும் அனுக்கிரகத் தொழிலினடங்குவதன்றி மற்றொரு தொழிலினு மடங்காதென்பது 'மூயங்கிரண்டு போகத்-திறமதனால் வினையறுக்குஞ் செய்தியாலே சேருமனுக் கிரகமெலாங் காணுதுநாஞ் சிவற்கே' (சித்தி VII. 17.) என்னும் சுருதியான் விளங்கக்கிடத்தலின், ஆண்டிழுக்கென்னையென்றொழிக.

## 19.

## சித்தாந்தமரபு

ஒளியும் இருளும் ஓரிடத்திற் கூடியிராததுபோல் ஆன்மாவினிடத்திலே ஆணவமலமும் சிவமும் கூடியிராதே. கூடியிருக்கிறது எப்படியென்னில் :—ஒரு மரத்தினிடத்திலே வேர் தொடுத்து நுனி பரியந்தம் ஈரமும் அக்கினியும் கூடியிருத்தல் போலும்.

## சித்தாந்தமரபு கண்டனம்

பத்தொன்பதில் விசேடமில்லை.

## 20.

## சித்தாந்தமரபு

ஆன்மா நரகத்திலே கிடந்து துன்பம் அனுபவிக்குமிடத்து அந்த நரகவேதனை ஆன்மாவை விட்டு நீங்காத சிவனுக்கும் உண்டு என்னில் அது கூடாது. எப்படி? யெனில், ஆதித்தப் பிரகாசம் படிகவொளியிலே கலந்து வர்ணங்களையறிவித்துத் தான் பற்ருதவாறு போலும், ஆதித்தப் பிரகாசம் கண்ணெளியிலே கலந்துநின்று விஷயங்களைக் காண்பித்துத்தான் காணுதவாறு போலும். ஒருவன் வயிற்றிலே கிடக்கிற புழுப்படுந் துன்பமெல்லாம் அவனுக்கு இல்லாததுபோலும்.

## சித்தாந்தமரபு கண்டனம்

'ஆன்மா நரகவேதனைப் படும்போது விட்டுநீங்காத சிவனுக்குமுண்டாமாறில்லை ; ஒருவன் வயிற்றிற்கிடக்கிற புழுப்படுந்துன்பம் அவனுக்கில்லாததுபோல' என்ருர். வயிற்றுக்கும் புழுவுக்குஞ் சம்பந்தமொழியப் புழுவுக்கு மான்மாவுக்குஞ் சம்பந்தமில்லை.

அன்றியும் புழுவை யான்மா வறியாது. ஆன்மாவைப் புழுவறியாது. சிவனுன்மாவை யறிவான். ஆகையால் அஃது அர்த்தமல்ல என்றறிக.

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

ஒருவன் வயிற்றுட்கிடக்கும் புழுப் படுந்துன்பம் அவனுக்கில்லாததுபோல ஆன்மாப் படுந்துன்பஞ் சிவனுக்கில்லையெனக்காட்டிய வொருபுடையுவமையை முற்றுவமையெனக் கொண்டு நமக்கு வேண்டியவாறெல்லாங் கூறினீர். 'உன்னுதாத்தேகிடந்த கீடமுறுவதெல்லாம்' (திருக்களிற்றுப். 87.) என்ற சுருதியையும் இவ்வாறிகழ்வீர் போலும். நும்மறிவிருந்தவாறழகிது!

## 21.

## சித்தாந்தமரபு

ஆன்மா கிஞ்சிக்ஞனே? சுதந்திரவீனனே? கேவலம் கிஞ்சிக்ஞனெனில், மின்மினிப் புழுவுக்குப் பிரகாசிக்குஞ் சுதந்திரம் சிறிதுண்டானாற்போல ஆன்மாவுக்குத் தானே அறியும் சுதந்திரம் சிறிதுண்டாகவேண்டும். அப்படியில்லாதபடியினாலே கேவலம் கிஞ்சிக்ஞன் அல்லன். கேவலம் சுதந்திரவீனனென்றால் சிவன் உபதேசித்த ஆகமமெல்லாவற்றையும் ஏககாலத்திலே அறிந்துகொள்ளவேண்டும். அப்படியில்லாதபடியினாலே கேவலம் சுதந்திரவீனன் அல்லன். ஆகையினாலே ஆன்மா கிஞ்சிக்ஞத்துவத்தை யுடைய சுதந்திரவீனனும்.

## சித்தாந்தமரபு கண்டனம்

'கிஞ்சிக்ஞ னான்மா' என்றது கொண்டு கொஞ்சவறிவென்றர்த்தம்பண்ணி, 'அதைக்கொண்டு, சிவத்தை யறியலாமே' என்றும், 'சுதந்திரவீனனென்றால் அச்சுதந்திரமுள்ள சிவன் அறி

வித்ததையெல்லா மேக காலத்திலே யறியவேண்டும்' என்றும் 'அஃதில்லாததினுலே கிஞ்சிக்ஞத்துவத்தையுடைய சுதந்திரவீனன்' என்றும் சொன்னூர். 'கொஞ்சவறிவுகொண்டு சிவத்தை யறிவ னென்னிற், 'பாசஞானத்தாலும்' (சித்தி. IX. 1.) (என்கிற சுருதியறியாராகிலும், சுதந்திரமுள்ளவன் அறிவித்ததையெல்லா மேக காலத்திலே யறியவேண்டு மென்பதற்குக் காமியத்துக் கேயக்கை கான்மூதலா' (போற்றிப்ப: 33, 34 ) என்ற சுருதி யறியாராகிலும், கிஞ்சிக்ஞன் சுதந்திரவீன னென்கிற சத்தார்த்த வேறுபாடு நன்ருக விசாரித்தவரல்லர். அன்றியும், விரிந்திடு மறிவுங் காட்டி வீட்டையுமளிப்பன்' (சித்தி. V. 8.) என்ற சுருதிப்படிக்கு முத்திக்காலத்திலே சர்வவியாபகமாயிருக்கிற சிவனே யறிவானுகை யால் இவர் கொஞ்ச வறிவென்றதெப்படிக் கூடும் ?

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

'ஆன்மாப் பெத்தத்திற் சிற்றறிவும் பாதந்திரமு முடையன்; முத்தியின் முற்றறிவுஞ் சுதந்திரமு முடையன்' என்னுஞ் சுருதியும், 'முத்தியினுஞ் சிற்றறிவும் பரதந்திரமுமே யுடையன்' என்னும் சுருதியும் தம்முண் முரணுதவாறு பொருளொருமையுணர்ந் தேக வாக்கியத்தைச்செய்துகொள்ளமாட்டாது, ஒருபாற்கோடி முரணுஞ் சிவசமவாதிகள் மதத்தில் வீழ்ந்து, 'முத்திக்காலத்திலே சருவவியா பகமாயிருக்கிற சிவனே யறிவானுகையாற் சிற்றறிவானது கூடாது' என் றிவ்வாறு கூறி மறுப்பவே, 'ஆன்மாத் தன்னறிவு கொண்டே சிவத்தை யறிவன்' என்றும், அறிவித்த தெல்லா மேக காலத்திலே யறியாமை 'காமியத்துக்கேய' (போற்றிப்ப: 33, 34) எனவே 'அல்லுழியெல்லா மொருங்கே யறியும் தன்மையனே யாம்' என்றும் 'முத்தியிற் சருவவியாபகமாய் நின்றறிதலே பற்றிச் சிற்றறி வனென்பது கூடாது' என்றும் பிதற்றினீர். இதற்கேற்ப முன் னும் 'படலநீங்கின கண் காண்டற் காதித்த னுபகாரம் வேண்டாம் (கண்டனம் பகுதி. 13.) என்றீராகலான், நீர் சிவசமவாதிக்குச்

சேட்டரோ கனிட்டரோ வாதல் வேண்டுமென்ப தறிந்தோம். 'தன்னறி வதனு லேதுந் தனக்கறி வில்லையேனும்' (சிவப்பிர. VIII. 2) என்றும், 'சிவமுதலே யன்றிமுத லில்லை' (திருக்களிற்று 64.) என்றும், 'பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்கு' (திருவருட்பயன். 2, 5) என்றும், 'தன்னைநான் காணிற் றனித்த * முதலல்லனே' (சிற்றம்பலநாடிகள் வெண்பா 59.) என்றும், இவ்வாறு வருஞ் சுருதிகளின் ருற்பரிய மறியமாட்டாத நீர், மற்றென் செய்வீரென்ருெழிக. 'சிற்றறிவுகொண்டு சிவத்தையறியும்' எனக் கூறுவார் ஈண்டியாருமில்லை.

## 22.

### சித்தாந்தமரபு

ஆன்மா மோக்ஷத்தை அடையுமிடத்துக் கெட்டுக் கூடுமோ? கெடாது கூடுமோ? ஆன்மா கெட்டாலும் கூடமாட்டாது. கெடாதிருந்தாலும் கூடமாட்டாது. இனிச் சித்தாந்தம் எப்படி யென்னில், விடயங்களிலே செல்லும் ஆன்ம போத நிகழ்ச்சி கெட்டுக் கூடுமெனக் கொள்க.

### சித்தாந்தமரபு கண்டனம்

'ஆன்மா மோட்சத்தைக் கெட்டுங் கூடான்; கெடாமலுங் கூடான். பின்னையெப்படியென்னில், விடயங்களிலே செல்லுகிற ஆன்மபோத நிகழ்ச்சி கெட்டுக்கூடும்' என்ருர். 'அப்படியாகில் விடயங்களிலே செல்லுகிற ஞானம் வேறு; அருளோடுங் கூடி நிற்கிற ஞானம் வேருக வேண்டும். ஆகையால் அது அர்த்தமல்ல,'

* முதலல்லவே யென்பதூஉம் பாடம்.

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

'விடயங்களிற்செல்லு மான்மபோத நிகழ்ச்சி கெட்டுக்கூடும்' என்றுரென்றும், 'அப்படியாகில், விடயங்களிற்செல்லு ஞானம் வேறு, அருளோடு கூடிநிற்கு ஞானம் வேருதல் வேண்டும்' என்றும் கூறினீர். விடயங்களிற் செல்லு மான்மபோத நிகழ்ச்சி கெட்டுக் கூடுமென்ருலும், அதுபற்றி விடயங்களிற்செல்லு ஞானம் வேறு, அருளோடு கூடிநிற்கு ஞானம் வேறெனப் பொருள்படுதற்கு ஒரு வாற்ருனு மியைபில்லையென்ப தறியாது, நமக்கு வேண்டியவாறே கூறினீர்.

# 23.

## சித்தாந்தமரபு

வியாபகம், வியாத்தி, வியாப்பியம் ஆக-3. வியாபகம் நிறைவு. வியாத்தி சம நிறைவு. வியாப்பியம் ஒன்றிலே ஒன்று அடங்கிநின்ற நிறைவு. ஒன்றிலே ஒன்று அடங்கியிருத்தல் எப்படியென்னில்:—சமுத்திரம் வியாபகம். தண்ணீரும் உப்பும் கலந்திருத்தல் வியாத்தி. சமுத்திரத்திலே தண்ணீரும் உப்பும் அடங்கியிருத்தல் வியாப்பியம். சிவனுடைய வியாபகத்திலே சிவசத்தி வியாப்பியம். சிவசத்தியிலே ஆன்மாவும் மலமும் வியாப்பியம், ஆன்மாவிலே ஆன்மசத்தி வியாப்பியம். மலத்திலே மலசத்தி வியாப்பியம். ஆன்ம போதத்திலே மாயை வியாப்பியம். மாயையிலே மாயா காரியம் வியாப்பியம். மாயா காரியத்திலே கன்மம் வியாப்பியம். கன்மத்திலே கன்ம காரியம் வியாப்பியமென அறிக. சிவனுடைய வியாபகம் சமுத்திர வியாபகம் போலும். ஆன்மாவும் ஆணவமலமும் வியாத்தியாயிருத்தல் தண்ணீரும் உப்பும் வியாத்தியாயிருத்தல் போலும். சிவனுடைய வியாபகத்திலே ஆன்மாவும் ஆணவமலமும் வியாப்பியமாயிருத்தல் சமுத்திர வியாபகத்திலே தண்ணீரும் உப்பும் வியாப்பியமாயிருத்தல் போலும்.

## சித்தாந்தமரபுகண்டனம்

'இருபத்துமூன்று சரி'.

# 24

## சித்தாந்தமரபு

ஆன்ம வியாபகத்துக்குக் கண்ணொளி முதலிய உவமைகள் வருமாறு :-கண் ஒன்று, கண்ணொளி ஒன்று, கண்ணொளிக்குக் காணும் குணம் ஒன்று, கண்ணொளிக்குக் காணுந் தொழில் ஒன்று, இருள் ஒன்று, பதார்த்தம் ஒன்று, விளக்கு ஒன்று, விளக்கையுண்டாக்கினவன் ஒன்று ஆக-8. கண்ணைப்போலும் ஆன்ம ஞானம், கண்ணொளிக்குக் காணும் குணத்தைப் போலும் ஆன்ம குணத்துக்கு அறியும் குணம். கண்ணொளிக்குக்காணுந் தொழில் போலும் ஆன்ம ஞானத்துக்கு அறியுந் தொழில். இருளைப்போலும் ஆணவ மலம். பதார்த்தங்களைப் போலும் சுகதுக்கங்கள். விளக்கைப்போலும் மாயா சரீரம். விளக்கையுண்டாக்கினவனைப் போலும் சிவன். விளக்குப் போனவிடத்துக் காணும் தொழில் ஒன்றுமே போனது. போன பொருள் இரண்டு, இருக்கிற பொருள் ஆறு ஆக-8.

## சித்தாந்தமரபு கண்டனம்

'ஆன்மவியாபகத்துக்குக் கண்ணை உவமையாக விரித்துக்கூறினார். கண்ணுக்குச் சூரியகிரண முதலிய வாலோக சகாயத்தினாலே காணுங் குணமொழிய ஆன்மாவைப்போல விபுவல்ல வெனவ'றிக.

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

'கண் ணான்மாவைப்போல விபுவல்லவாகலாற் கண்ணுவமை கூடாது' என்றீர். சூரியனுஞ் சிவனைப்போல வியாபகமன்மையாற்

சிவனுக் குவமையாதல் செல்லாதெனல் வேண்டும். சூரியன் தன் கிரணம் வியாபிக்குமிடமளவும் வியாபகமாதல் கூடுமாகலின், ஒருபுடையொத்தல்பற்றிச்சிவனுக்குவமையாதல் கூடுமெனின், கண்ணுமவ்வாறே கண்ணொளிசென்று வியாபிக்குமிடமளவும் வியாபகமாதலின், ஒருபுடையொத்தல்பற்றி ஆன்மாவிற் குவமையாதலமையுமென் றறிந்துகொள்ள மாட்டீராயினீர். சைவசித்தாந்தத்திற் கூறும் குணகுணி விவகாரமறிந்தீராயின், இவ்வாறு குழறுவீரல்லீர்.

## 25.

## சித்தாந்தமரபு

ஆன்மா வியாபகமாயிருந்து சரீரத்தைப் பற்றுதற்குப் படிகமலை அக்கினிமலை முதலிய உவமைகள் வருமாறு;—படிகமலை ஒன்று படிகமலைக்கு ஒளி ஒன்று, படிகமலையொளிக்குப் பற்றுங் குணம் ஒன்று, படிகமலையொளிக்குப் பற்றுந் தொழில் ஒன்று, வர்ணம் ஒன்று, வர்ணத்தைக் காண்பிக்கிறவன் ஒன்று ஆக-6. படிகமலையைப்போலும் ஆன்மா. படிகமலைக்கு ஒளியைப்போலும் ஆன்ம ஞானம் படிகமலை யொளிக்குப் பற்றுங் குணத்தைப்போலும் ஆன்ம ஞானத்துக்கு அறியுங் குணம். படிகமலை யொளிக்குப்பற்றுந்தொழில் போலும் ஆன்ம ஞானத்திற்கு அறியுந் தொழில், வர்ணத்தைப் போலும் மாயா சரீரம், வர்ணத்தைக் காண்பிக்கிறவன் போலும் சிவன். படிகமலை எந்தப்புறத்திலே வர்ணத்தைக் கொடுத்தாலும் பற்றிக்கொள்ளும். அதுபோல எல்லா புவனங்களிலும், வியாபகமாயிருக்கிற ஆன்மா கர்த்தா எந்தப் புவனத்திலே சரீரத்தைக் கொடுத்தாலும் அந்தப் புவனத்திலே பற்றிக்கொள்ளும்.

அக்கினி மலை ஒன்று. அக்கினி மலைக்கு ஒளி ஒன்று. அக்கினி மலைக்குச் சுடுங் குணம் ஒன்று, அக்கினி மலைக்குச் சுடுந் தொழில் ஒன்று, பஞ்சு ஒன்று, பஞ்சைப் பற்றுவிக்கிறவன் ஒன்று ஆக-6. முன் படிகமலைக்குச் சொன்னவாறு இதற்கு

ஒட்டிக்கொள்க. அக்கினி மலையானது எந்தப் புறத்திலே பஞ் சைக்கொடுத்தாலும் பற்றிக்கொள்ளும். அதுபோல எல்லா புவனங்களிலும் வியாபகமாயிருக்கிற ஆன்மா கர்த்தா எந்தப் புவனத்திலே சரீரத்தைக் கொடுத்தாலும் அந்தப் புவனத்திலே பற்றிக் கொள்ளும்.

## சித்தாந்தமரபு கண்டனம்

'ஆன்மா விபுவாகவிருந்து பற்றுதற்குப் படிகமலை அக்கினி மலை திருட்டாந்தமாம்' எனச் சொன்னார். 'படிகமலைக்குப் பற் றுங்குணமும் அக்கினி மலைக்குச் சுடுங்குணமும் பிரகாசகுணமு மொழிய அறியுஞானமில்லை.' அன்றியும், படிகமலை எந்தத்திசை யிலே வன்னம் வந்தாலும் பற்றுதல்போலவும், அக்கினிமலை எந்தப் புறத்திலே பஞ்சைக்கொடுத்தாலுஞ் சுடுதல் போலவும், ஆன்மா எல்லாப் புவனங்களிலும் வியாபகமானதினாலே எந்தப்புவனத்திலே சரீரம் வந்தாலும் அங்கே யறியும்' என்றார். 'சிருட்டிகாலமுதற் சங்கார காலமட்டும் புரியட்டக தேகநிட்டமாக வான்மஞானமி ருந்து கேவலஞ் சுவர்க்க நரக பாடாண முதலியனஅனுபவப்படும்' என்று சுருதி யிருக்கையால், இவர் மாறுபாடாகச் சொல்லுகைக் குச்சுருதி யில்லை. ஆகையால், அது கூடாதென வறிக.

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

*முந்திய சிருட்டியில் விபுவாகிய வான்மாப் புரியட்டக சரீர பேதங்களைப்பற்றுதற்கே படிகமலை யக்கினிமலை உவமை சொன்ன தென்ப தாண்டே விளங்கிக்கிடப்ப, அஃதறியாமையான் நுமக்கு வேண்டியவாறெல்லாங் கூறினீர். அன்றியும், 'படிகமலை யக்கினி மலைக்குப் பற்றுங்குணமுஞ் சுடுங்குணமும் பிரகாசகுணமுமொழிய அறியுங்குணமில்லை. ஆதலால், ஈண்டைக்குவமையாதல் கூடாது' என்றீர். பற்றுதற்கேயன்றி யறிதற்கு மவை யுவமையெனக்*

கொள்ளினும், ஆண்டிழுக்கென்னே? உவமான உவமேய சாதாரண தன்மங்களினியல்பும் விம்பப்பிரதிவிம்பபாவமென் றலங்காரநூலார் கொண்ட சங்கேதமு மறியமாட்டீராயினும், 'ஓரிடத்துணரு முண்மை யொளிதரு முபலம் போலும்' (சிவப்பிர. III. 8.) என் றற்றொடக்கத்துச் சுருதிப்பொருளு மறியமாட்டாத நும் அறி யாமை அறிவுபோலப் பரிணமித்து நும்மை இவ்வாறெல்லாம் பிதற் றுவித்தால் நீரென்செய்வீரென் றொழிக.

## 26.

### சித்தாந்தமரபு

ஆன்மா சார்ந்ததன் வண்ணமாயிருக்குமென்பதற்கு ஆகாய முதலிய உவமைகள் வருமாறு :—ஆகாயமானது இருளோடு கூடினுல் இருளாய் இருக்கும்: ஒளியோடு கூடினுல் ஒளியாயிருக்கும். அதுபோல ஆன்மா மலத்தோடு கூடினுல் மலமாய் நிற்கும்: சிவத்தோடு கூடினுல் சிவமாயிருக்கும்.

### சித்தாந்தமரபு கண்டனம்

'இருபத்தாறு சரி.'

## 27, 28, 29, 30.

### சித்தாந்தமரபு

எண்ணிறந்தகோடி புவனங்களிலே இருக்கிற எண்ணிறந்தகோடி ஆன்மாக்களுக்கும் அறிவும் தொழிலும் கொடுக்கிறதினுலே சிவன் வியாபகரென அறிக.

எண்ணிறந்தகோடி ஆன்மாக்களுக்கும் அறியாமை இருக்கையினுலே ஆணவமலம் வியாபகமென்று அறிக.

எண்ணிறந்தகோடி ஆன்மாக்களுக்கும் எண்ணிறந்த கோடி புவனங்களிலே தனுகரணாதிகள் இருக்கையினாலே மாயை வியாபகமென்று அறிக.

எண்ணிறந்தகோடி ஆன்மாக்களுக்கும் எண்ணிறந்த கோடி புவனங்களிலே புசிப்பு இருக்கையினாலே கன்மம் வியாபகமென்று அறிக.

## சித்தாந்தமரபு கண்டனம்

'சகலபுவனத்திலிருக்குமான்மாக்களுக்கும் அறிவுந் தொழிலுங் கொடுக்கிறதினாலே சிவன் வியாபகன்' என்று சொன்னார். 'சர்வசங்காரகாலத்திலே சகலபுவனங்களு மொடுங்கிப் போகையால், ஆன்மா வெங்கே தங்கும்? சிவனுக்கு வியாபகமுமில்லையாய் விடும். இப்படி வெகுதோடமிருக்கையால், அது கூடாதென வறிக.

'அளவில்லாத வான்மாக்களுக்கும் அறியாமை இருக்கையினாலே ஆணவமலம் வியாபகமாம்' என்றார். 'முத்தியடைந்தபேர் வெகுவானதினாலே அவர்களுக்கு மலபந்தமில்லாததினாலே மலத்துக்கு வியாபகத்துவங் கூடாதென வறிக.

'எண்ணிறந்தகோடி புவனத்திலிருக்கும் எண்ணிறந்தகோடி யான்மாக்களுக்குந் தனுகரணாதி யிருத்தலால், மாயை வியாபகம்' என்றார். எனவே, புவனம் வேறாயிற்று. அன்றியும் முத்தருக்கில்லை. அதுவன்றியும், சங்காரகாலத்தில் மாயையில்லை அன்றியும், புவனத்திற்கும் அளவில்லை. ஆன்மர்க்களும் அவ்வாறாகையால், ஒருபுவனத்துக் கோரான்மா விருக்குமென்றாயிற்று. அன்றியும், அத்துவாசோதனை பண்ணுமிடத்துக் *கெணனையி லடங்காதாகையால், இது முதலியன தோடமிருக்கையால், அது கூடாதென வறிக.'

---

*கெணனை—எண்ணுதல்.

எண்ணிறந்தகோடி யான்மாக்களுக்கு மெண்ணிறந்தகோடி புவனத்திலே புசிப்பிருக்கையினுலே கன்மம் வியாபகம்' என்ருர். 'முத்தியடைந்த வான்மாக்களுக்குக் கன்மமும் புவனமு மில்லை. அன்றியும், 'அத்துவாவாறு' என்றும், 'புவனமதற்குளடங்கும்' என்றும், 'சர்வான்மாக்களுடைய கன்மம் அதிற் கட்டுப்படும்' என்றும், 'அதிற் சுத்திபண்ணப்பட்ட வான்மாவுக்குக் கன்ம பந்தமில்லை' என்றும், 'மந்திரங்கள் முதலைந்துங் கலையைந்தில் வியாப்தி (சித்தி. VIII. 7.) என்றும் வெகு வசனமிருக்கையால், எண்ணிறந்தகோடி புவனமென்பதற்கும், அத்துவசுத்தியி லந்தப் புவனம் எல்லா மடங்கிச் சுத்திபண்ணுகைக்கும், சுருதிகாட்ட வேண்டும். அப்படி யில்லாதபடியால், அது கூடாதென வறிக.'

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

'சகல புவனங்களு மொடுங்கிப் போகையில் ஆன்மா வெங்கே தங்கும்?' என்றீர். சகல புவனங்களு மொடுங்கி எங்கே போம்? சற்காரியவாதமு மறியீர். அன்றி யசற்காரிய வாதங் கொள்ளினும் அதனுல் ஈண்டிழுக் கென்னை? 'சகல புவனத்திலிருக்கு மான்மாக் களுக் கறிவுந் தொழிலுங் கொடுக்கிறதினுலே சிவனுக்கு வியாபகம் என்றது முதல் 'எண்ணிறந்தகோடி யான்மாக்களுக்கு மெண்ணி றந்தகோடி புவனத்திலே புசிப்பிருக்கையினுலே கன்மம் வியாபகம்' என்பது வரையுந் தூலாருந்ததி நியாயமாய்க் காணப்பட்டு நிகழு நிகழ்ச்சிகொண்டு, காணப்படாத பொருளைத் தெரிவித்தல் சிவாக மங்களின் றுணிபென்னு முறைமைபற்றிக் கூறியதென்றறியமாட் டாது, ஏதேதோ குழறிய நீர், 'இலதென்றலி னுன்மா வுளது' 'எனதுடலென்றலி னுன்மாவுளது' (சிவஞானபோதம் சூ. 3) என் ருற் போல்வனவற்றையும், 'சகக்கரு மத்தின் மிகத்திக ழிறையை யாராய் பென்ன வணிகிள ருலக-மோருபா தான மின்றெனி னின்று......வியாபி-யன்றெனின் வினைமற் றெங்கணு மார்தல்— கூறுதி' (ஞானமிர்தம் 14.) என்றற்றொடக்கத்தனவற்றையும், இவ்

வாறு குற்றங்கூறி இகழ்வீர் போலும். இன்னும் இவ்வெள்ளறிவு கொண்டு, புகையுண்மையாற் றீயுண்டென்றவழிப், பின்னர்ப் புகை மாறிப்போதலின், அப்பொழுது தீயில்லையாதல் வேண்டுமாகலின், அனுமானவளவையே கூடாதென உலகாயதனுக்குத் துணையாய்க் கூடிநின்று குற்றம்கூறவும் வல்லீர்போலும்.

'முத்தருக்கு மலமில்லாததுகொண்டு மலத்துக்கு வியாபகத் துவங் கூடாது' என்றீர். '†ஒளிவற நின்றக் கண்ணும் விளிவுறு-தன்னுடைக் காலந் துன்னிற் பின்னிடும்-வலியின் றெருகுதித்து' என்றதன் முற்பரியமு மறியீர் போலும்.

'எண்ணிறந்தகோடி புவனங்களிலேயிருக்கிறவெண்ணிறந்த கோடி யான்மாக்களுக்குத் தனுகரணாதி யிருத்தலாலெனவே, புவனம்வேறாயிற்று' என்றீர். யோகவிபாகம்விபாகயோகமென்னு முறைமைகள் அறிந்துகொள்ளமாட்டாமையின், அவ்வாறு குழறினீர். 'புவனங்களுக்கு மளவில்லை; ஆன்மாக்களுக்கு' மளவில்லை; ஆகையால், ஒரு புவனத்துக்கோ ரான்மா விருக்குமென்றதாயிற்று' என்றீர். 'எண்ணீங் குயிரு-மளவி லண்டமு முளையின்றி விளைத்து' (ஞானமிர்தம் பாயிரம் 1.) என்புழியும் இவ்வாறேகுற்றம்கூறுவீராயினீர். சொற்குறிப்பறியவல்லார் நும்போல யாரையும் கண்டிலம்.

'அத்துவாசுத்தியிற் கெணனையில் அடங்காதாகையால் எண்ணிறந்தகோடி புவனமென்பது கூடாது; சுருதியுமில்லை' என்றீர். சுருதி மேற்காட்டினும். இன்னும் பற்பலவுள. அவ்வெண்ணிறந்த கோடிகளுங் கெணனையிலடங்கிச் சுத்திபடுமாறு வழிபடுமுறையில் வழிபட்டுக்கேட்டால் விளங்கும். நும்மடமை முழுவதும் வெளிப்படுக்கு மிக்குழறுபடை கிடக்க.

---

†ஒழிவறவென்பதூஉம் பாடம். உயிர்தொறு மென்பது அச்சுப் பிரதியிற் கண்ட பாடம்.

# 31, 32, 33.

## சித்தாந்தமரபு

எண்ணிறந்தகோடி ஆன்மாக்களுக்குச் சிவனொருவனு யிருந்து அறிவிக்கிறது எப்படி? யென்னில் :— எண்ணிறந்த கோடி கண்களுக்கும் ஆதித்தன் ஒருவனாக இருந்து காட்டுதல் போலும்.

எண்ணிறந்தகோடி ஆன்மாக்களையும் மலம் ஒன்றுயிருந்து மறைக்கிறது எப்படி? யென்னில், எண்ணிறந்த கோடி கண்களை யும் இருள் ஒன்றுயிருந்து மறைத்தல் போலும்.

எண்ணிறந்த கோடி ஆன்மாக்களுக்கும் எண்ணிறந்த கோடி கன்மங்களைச் சிவன் ஒருவராயிருந்து அறிந்து கூட்டி முடிக்கிறது எப்படி? யென்னில், ஒரு வண்ணானவன் ஒரு ஊரிலே யிருக்கிற பலபேருடைய புடைவையையும் வாங்கி வெளுத்து அவரவர் புடைவையை அவரவர்க்கு அறிந்தெடுத் துக்கொடுத்தல் போலும், ஒரு இடையனானவன் பலபேருடைய மாட்டையும் மேய்த்து அவரவர் வீட்டிலே அறிந்துகொண்டு போய் விடுத்தல் போலும்.

## சித்தாந்தமரபு கண்டனம்

'சர்வான்மாக்களுக்குஞ் சிவனொருவனு யிருந்தறிவிக்கிறதற் குவமை' சகலமான கண்ணுக்கும் ஆதித்த னொருவனுயிருந்து காட் டுதலாம்' என்றார். குருடு கூகை முதலியவற்றின் கண்ணுக்கு ஆதித்தன் காட்டவில்லை, ஆகையால் அது கூடாதென வறிக.

எண்ணிறந்தகோடி யான்மாக்களையு மலமொன்றுயிருந்து மறைக்கிறது. எண்ணிறந்தகோடி கண்களையும் இருளொன்று யிருந்து மறைத்தல் போலும்' என்றார். 'பூனை எலி முதலிய வற்றின் கண்ணை இருள் மறைக்கவில்லை. அன்றியும், சூரியவுதய

மானவுடனே ஒரு கண்ணுக்கு இருள் நீங்கும்பொழுது எண்ணிறந்தகோடி கண்களிடத்திலேயும் இருக்கிறவிருள் விட்டு நீங்குகிறது போல, ஓரான்மாவிடத்திலிருக்கும் மலநீங்கும்பொழுது சர்வான்மாக்களிடத்திலிருக்கும் மலநீங்க வேண்டும். அஃதில்லை. ஆகையால், கூடாதென வறிக.

'எண்ணிறந்தகோடி யான்மாக்களுக்கு மெண்ணிறந்தகோடி கன்மங்களைச் சிவனொருவனுயிருந்து அறிந்து கூட்டி முடிக்கிற தெப்படியெனில், ஒரு வண்ணுன் அவன் ஊரிலுள்ள பல பெயருடைய புடைவைகளையும் வாங்கி வெளுத்துப் பின் கொடுத்தல் போலும்; ஊர்க்காலி ஆயனுனவன் பலபெயருடைய வாக்களை மேய்த்துப் பின் சாயங்காலம் அவரவர் வீட்டில் விடுவது போலும்' என்ருர். 'அந்த வண்ணுன் சேங்கொட்டைப்பாலால் அடையாளம் போட்டிருக்கவும், ஒருவர் புடைவையை மற்றொருவருக்குக் கொடுத்து, மற்றொருவர் வந்து தம்புடைவையைக் கேட்டவிடத்து, இவர் புடைவையென்று முந்தினவர் புடைவையைக் கொடுக்க, இஃதெம் புடைவை யன்றென்று சொல்லி, வண்ணுனும் புடைவைக்காரரும் இழுப்புப்பட்டது ஊர்தொறுங் கண்டதில்லையா? அன்றியும், இடையன் சில மாடு தப்பிப்போனது தெரியாதிருக்க, அந்த மாட்டுக்காரர் வந்து இடையனைக்கேட்க, இடையன் தேடியோடி மூலைக்குமூலை யவதிப்படுவது ஊர்தொறுங் கண்டதில்லையா? அன்றியும், திருவாவடுதுறைக்குச்சமீபத்திற் சாத்தனுர் ஊர்க்காலி ஆயன் மரித்ததறிந்து, திருமூலர் நிரைமேய்த்த கதையும் இதனை யறிவிக்கும். ஆதலால், அது கூடாதென வறிக.'

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

குருடு கூகை முதலியவற்றின் கண்ணுக்கு ஆதித்தன் காட்டவில்லை. ஆகையாற் 'கண்கட் கெல்லா-மிருளினை யொளியா வோட்டு மிரவியைப் போலவீசன்' (சித்தி. V. 9.) உயிர்கட்கெல்லா

மறியாமை நீக்கி யறிவிப்பான் எனச் சூரியனைச் சிவனறிவித்தற் குவமை கூறுதலும், பூனை எலி முதலியவற்றின் கண்ணையிருண் மறையாமையானும், சூரியனுதயமான வழி யொருகண்ணுக்கு இருணீங்கும்பொழுதே எண்ணிறந்தகோடி கண்களுக்கும் இருணீங்குவதுபோலத் தாட்டாந்திகத்திற் கூடாமையானும், இருளை மறைத்தற் குவமை கூறுதலும், வண்ணான் அடையாளம் போட்டிருக்கவும் அறியமாட்டாமற் புடைவையை மாறிக்கொடுத்து ஊர்தொறு மிழப்புண்ணவும், இடையன் சிலபசுக்கடப்பிப்போனது தெரியாமல் ஊர்தொறுந் தேடியலையவும், திருமூலர் மேய்த்த நிரை தாமே யவ்விடங்களிற் செல்லவுங் காண்டலால் வண்ணா னிடையனைச் சிவன் அவரவர் கன்மங்களையறிந்து கூட்டி முடித்தாற் குவமை கூறுதலும், கூடா' என்றீர். இவ்வாறே 'இரும்பைக் காந்தம் வலித்தாற்போல்' (சித்தி. XI 12.) என்புழியும், 'காந்த மிரும்பை வலித்துக் கோடல் வேறொருவன் நேரொக்கப் பிடித்தாலன்றிக் கூடாது. அதுபோல உயிரை ஈர்த்துக்கோடற்குச் சிவனை வேறொருவரெடுத்து நேரொக்கப் பிடிப்பாருண்டோ? அன்றியும், காந்தமுமிரும்பு மேகதேசப் பொருளாய் வேறு நிற்றலின் வலித்தல் கூடும். அவ்வாறு சிவனு மான்மாவு மேகதேசப் பொருளாய் வேறு நிற்குமோ? இன்னும் காந்தமிரும்பை வலித்துக்கொள்ளுது மென்றறியமாட்டாது. அதுபோலச் சிவனுக்கறிவில்லையோ? இன்னும் காந்தமிரும்பை வலித்துக்கொள்ளுதன் மாத்திரையேயன்றி அதன் கறையைப் போக்கமாட்டாது, அதுபோலச் சிவ னியைதன்மாத்திரையே செய்வதன்றி ஆன்மாவின்கண்ணதாகிய வஞ்ஞானத்தைப்போக்குமாறில்லையோ? அன்றியும், காந்தத்தை யுவமை கூறுதன் மாயாவாதி முதலியோர் மதமாகவைத்து, 'மன்னயக் காந்த மெனவுடல் பிரம-சன்னிதி யளவிற் சலித்திடு மாயி-னகண்டிதன் சன்னிதி யலதில தெவையுனி -நடந்திட வேண்டுங் கிடந்திடப் பெறுதே-காந்தத் திரும்பு காட்டுநர்ப் பெறிலயஞ்-சேர்ந்திடு நீக்குஞ் செயலதற் கிலதே' (சங்கற்ப நிரா. மாயாவாதி மத நிராகரணம். 127-132) என்றிவ்வாறுண்

டாண்டு மறுத்திருப்பவும், அதனை யீண்டுவமை கூறுதல் பொருந் துமோ?" என் றிவ்வாறே யின்னும் பலவாக வாசங்கித்து, இது போல வேனை யுவமைகட்குங் குற்றங்கூறி, 'இரும்பைக் காந்தம் வலித்தாற் போல்' (சித்தி. XI. 12.) என்ற திருவிருத்த முழுவ வதையும் 'காந்தங் கண்ட பசாசத் தவையே' (சிவஞா. போ. சூ. 5) என்றாற்போல்வனவற்றையும் மறுத்துச், 'சித்தாந்தத்திற் கடா' எனத்தள்ளுவீர்போலும். கண்கட்குக் காட்டும் என்ற சூரியன் முதலிய வுவமைகளோடு இவற்றிடை வேற்றுமை யின்மையின், அவற்றை மறுத்த நீர் இவற்றையு மறுப்பீரே யாவிர். ஆகலின், அருணந்திசிவாசாரியார் முதலியோர் அறிவினையுங் கடந்து மேற் பட்ட நும்மறிவின் பெருமை வியக்கற்பாலதேயாம்.

## 34.

## சித்தாந்தமரபு

வினைவேறே கன்மம் வேறே. வினையாவது ஆணவமலத் தினாலே ஆன்மாவுக்குக் கன்மத்திலே யுண்டாகிய விருப்பம். கன்மமாவது புண்ணிய பாவங்கள். இதற்கு வசனம் :— தேவாரம் (திருநாவுக்கரசர் கோயில் குறுந்தொகை 4) 'அல்ல லென்செயு மருவினை யென்செயுந், தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்'

## சித்தாந்தமரபு கண்டனம்

'வினைவேறு, கன்மம் வேறு. வினையாவது அனாதியிலே ஆணவ மலத்தினாலே ஆன்மாவுக்குக் கன்மத்திலே யுண்டாய விருப்பம். கன்மமாவது புண்ணிய பாவங்கள்' என்றார். 'அனாதியிலே ஆண வமலத்தினாலே மறைபட்டு ஓரறிவு மில்லாமலிருக்கிற ஆன்மா வின்கட் கன்மம் எங்கேயிருந்தது? அதில் விருப்பம் எவ்வாறுண் டாயிற்று? 'ஆன்மா விச்சாஞானக் கிரியா சொருபியாகையாலே

அந்த விச்சை பண்டபதார்த்தங்களிலே சென்று பற்றும்' என்று சுருதியிருக்கையினுலே, கூடுமென்று சொல்லுவீராகில், அநாதியிலே இச்சா ஞானக் கிரியையைத் தானே மலமாவரித்திருக்கிறதினுலே பண்டபதார்த்த விடயமெப்படியாம்? அன்றியும் சுத்தமாயா சிருட்டியான பிறகு, அசுத்தமாயா சிருட்டியாயதன் பின், பிரகிருதி சிருட்டியுண்டான பிறகு, கலையாதி தத்துவங்களினுலே யத்கிஞ்சிது ஞானக்கிரியைகளுக்கு விளக்கமாய்த், தேகேந்திரியாந்தக்கரணத் துவாரா விடயங்களிலே சென்றறிந்த காலத்துக் கன்மமென்பதொழிய, அநாதியே யுண்டாமென்று சைவசித்தாந்திகள் சொல்லார்கள். இன்னும், 'அல்ல லென்செயும்' (திருநா. திருக்குறுந்தொகை கோயில் 4.) என்ற சுருதி காட்டினதும் 'கனகமிரணியம் (சங்கற்ப. பாயிரம் 21.) என்னுமது போலக் கன்மத்துக்குத்தானே வேறு பெயராம். 'மாயை முதலென வினையின் பான்மை முதலென' (சிவப் பொது. II. 17.) என்னுஞ் சுருதியினுலு மறிக.'

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

'வினையாவது அநாதியிலே ஆணவமலத்தினுலே ஆன்மாவுக்குக் கன்மத்திலுளதாம் விருப்பமென்ருர்' என்றீர். அவ்வாறு கூறுவா ரீண்டு யாருமில்லை. எவரோ குழறுபடையாக எழுதி வைத்த தொன்றனைக் கைப்பற்றிக் குற்றங் கூறப் புகுந்தீர். 'பொய்யர்க்குப் பொய்யாய பொய்யினுன்' (நெஞ்சு. விடு. 14.) என்றது போல நும்மறிவின் குழறுபடைக்கேற்பவே அதுவுங் குழறுபடையாய் நுமக்கு வந்து வாய்த்தது. அற்றேல் நீர் கூறுவது மவ்வாறே பொருள்படுமோவெனின், மயக்கறிவுடையார்க்கு அவ்வாறு பொருள்படும். யாம் வேறெனக்கொண்ட வினை, மூன்று குற்ற மூன்று குண மூன்றுமல மூன்றவத்தை-யென்று நின்று செய்யு மிருவினை (நெஞ்சு விடு 37, 38) ஆதலின் அவ்வினையினியல்பறிதற்கு நீர் யார்? 'இருவினைப்பாசமும் மலக்கலார்த்தலின்' (பெரிய புரா.

திருநாவுக். 129) என்றற் ஞெடக்கத்துச் சுருதிகளைக் கேட்டு மறிந் திலீர் போலும்.

## 35, 36.

### சித்தாந்தமரபு

கன்மமாவது தூலகன்மமென்றும் சூக்குமகன்ம மென்றும் அதிசூக்கும கன்மமென்றும் மூன்று விதமாக இருக்கும். தூலகன்மமாவது ஆகாமியம். ஆகாமியமாவது ஆன்மா பிராரத்துவம் புசிக்கையிலே நிகழாநின்ற இதாகிதங்கள். இதாகிதங்களாவன மனவாக்குக் காயங்களினுலே செய்யப்பட்ட நல்ல தொழிலும் தீய தொழிலுமாம். சூக்கும கன்மமாவது சஞ்சிதம். சஞ்சிதமாவது மாயையிலே கட்டுக்கிடையாகிய புண்ணிய பாவங்கள். அதி சூக்கும கன்மமாவது பிராரத்தம். பிராரத்தமாவது எடுத்த தேகத்திலே புசித்துத் தொலைவதாகிய சுகதுக்கங்கள். சுகதுக்கங்களுக்கு இருப்பிடமாவதுசத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தமாகிய விடயங்கள். இந்த விடயமும் விருப்புச் சத்தம் வெறுப்புச் சத்தம் விருப்புப் பரிசம் வெறுப்புப் பரிசம் விருப்பு ரூபம் வெறுப்பு ரூபம் விருப்பு ரசம் வெறுப்பு ரசம் விருப்புக்கந்தம் வெறுப்புக்கந்தமென்று பத்து விதமாயிருக்கும்.

ஆன்மாவினுடைய பிராரத்த கன்மத்தைச் சிவனும் அறிவார்; ஆன்மாவும் அறிவான். இரண்டும் சரியோவென்ருல் அச்சிவன் அறிகிறது மாத்திரம்: ஆன்மா அறிந்து அழுந்துவான்.

### சித்தாந்தமரபு கண்டனம்

முப்பத்தைந்து முப்பத்தாறு பசையில்லை.

## 37.

## சித்தாந்தமரபு

ஆன்மா பிராரத்தம் புசிக்கிறதற்குச் சிவன் நல்வினை தீவினை யிரண்டையும் கருவியாகக் கூட்டினார். கூட்டின தொழிலை ஆன்மா மலத்தினாலே தன்னுடைய தொழிலாக நினைத்துக்கொண்டான். ஆகையினாலே அந்த இரண்டு தொழிலும் ஆன்மாவுக்கு ஆகாமியமாயிற்று.

## சித்தாந்தமரபுகண்டனம்

'ஆன்மாப் பிராரத்தம் புசிக்கிறதற்குச் சிவன் நல்வினை தீவினை யிரண்டையுங் கருவியாகக் கூட்டினான்' என்றார். 'கருவியென்பது சககாரி. நல்வினை தீவினையிரண்டுங் கருவியானால் புசிக்கிறதெத்தை?' 'இதைத் தன்னுடைய தொழிலாக நினைந்தபடியினாலே இந்த விரண்டு தொழிலும் ஆகாமியமாயின' என்றார். 'பிராரத்தந் தானே ஆகாமிய மாகாதென வறிக.'

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

*'நல்வினை தீவினை யிரண்டுங் கருவியானாற்புசிக்கிறதெத்தை?' என்றீர். நல்வினை தீவினைகட்கும் பிராரத்தத்திற்கும் தம்முள் வேற்றுமை பெரிதாகவும், அஃதறியாது நுமக்கு வேண்டியவாறே குழறினீர். அவ்வேறுபாடறிந்தீராயின், இவ்வாறு குழறவீரல்லீர்.*

## 38.

## சித்தாந்தமரபு

கன்மமானது சாதி ஆயுப் போகமென மூன்றுவிதமாயிருக்கும். இவை மூன்றும் நல்லசாதி தீயசாதி யெனவும் தீர்க்

காயுசு அற்பாயுசு எனவும் வெகுபோகம் அற்பபோகமெனவும் ஆறுவிதமாயிருக்கும்.

## சித்தாந்தமரபு கண்டனம்

முப்பத்தெட்டுப் பசையில்லை.

## 39.

## சித்தாந்தமரபு

ஆன்மாவுக்கு முன் ஆர்ச்சித்த கன்மம் பின்னும் பின் ஆர்ச்சித்த கன்மம் முன்னுமாக மாறிவரும். அது எப்படி? யென்னில். ஒரு பனை விதையை மண்ணிலே முன்னேபோட்டுத் தண்ணீர்விட்டான். அதன்பின்னே வாழை வைத்தான். அதன் பின்னே கத்திரி நட்டான். அதன்பின்னே கீரை விதைத்தான். அவனுக்குக் கீரை பதினைந்து நாளில் பலனுய்வரும். கத்திரி ஒரு மாதத்திலே பலனுய்வரும். வாழை ஒரு வருஷத்திலே பலனுய்வரும், தென்னம்பிள்ளை அஞ்சு வருஷத்திலே பலனுய் வரும். பனை முப்பதுவருஷத்திலே பலனுய்வரும். அதுபோலக் க்ன்மமும் மென்மை வன்மைகட் கீடாகப் பாகப்பட்டு மாறிப் பலனுய்வரும். இதற்கு வசனம்(சிவப்பிரகாசத்தில் II. 11.) 'தொடங் கடைவி னடையாதே தோன்றுமாறி' என்றது.

## சித்தாந்தமரபு கண்டனம்

'ஆன்மாவுக்கு முன்செய்த கன்மம் பின்னும்பின்செய்த கன்ம முன்னு மாறி மாறி வன்மை மென்மைக்கீடாக நுகர்ச்சி வரும்; பனை தென்னை வாழை கத்தரி கீரை போல' என்றுர். அது தானே நியமமன்று; மென்மை வன்மையாகச்செய்திருந்தால் நேரே வரும் அப்படியாகில், சுருதி 'தொடங்கடைவி னடையாதே தோன்று மாறி' (சிவப், பொது II. 11.) என்றிருக்கிறதே யென்னில் உத்தி யுத்தஞ் சோத்திராதிகம். நேரே செய்யாமல் வன்மை மென்மை

யாற் செய்கிற கன்மத்துக் கவ்வசனமொழிய மற்றப்படி கூடா தென வறிக' என்றீர்.

## சிந்தாந்தமரபு கண்டன கண்டனம்

'தொடங்கடைவி னடையாதே தோன்று மாறி' என்ற சுருதியின் ரூற்பரியமே அவ்வசனத்திற்குத் தாற்பரிய மென்பது இனிது விளங்கிக்கிடப்பவும், எவ்வாறாயினுங் குற்றங்கூறினேமெனப் பெயரிடுதுமென்னுஞ் செருக்கால் ஏதேதோ தெரிந்தவர் போலப் பிதற்றி, *'மலக்குச்சொற் றேடுவர் வன்க ணாளர்கள் என்பதனை விளக்கினீர்.

---

*'இலக்கணக் கவிஞர்சொல் லின்பந் தேடுவர்
மலக்குச்சொற் றேடுவர் வன்க ணாளர்க
ணிலத்துறு கமலத்தை நேரும் வண்டதீ
தலக்குறை கமலத்தைச் சாருந் தன்மைபோல்'
— தனிச்செய்யுள்.

## 40, 41.

## சித்தாந்தமரபு

ஆன்மாவுக்குப் பிராரத்த கன்மம் வருமிடத்துத் தைவிகம் பௌதிகம் ஆன்மிகமென்று மூன்றுவிதமாக வரும். அவற்றுள் தைவிகமாவது சென்ன மரணம் நரை திரைகள் முதலாகக் கர்த்தாவினால் வருவது. பௌதிகமாவது மின்னல் இடி காற்று மழை முதலாயினவற்றால் வருவது. ஆன்மிகமாவது ஆன்மாக்களால் வருவது. இப்படி வரும் பிராரத்தம் தானிச்சைப்பட்டு வருகிறதுமுண்டு. தானிச்சைப்படாமல் அநிச்சையாக வருகிறதுமுண்டு.

மாயா காரியத்திலே போகமென்று சொன்னது லட்சணையாகப் பொருள் கொள்க. கன்ம லக்ஷணத்திலே போகமென்றது சுபாவமாகிய சுக துக்கம்.

## சித்தாந்தமரபு கண்டனம்

நாற்பது, நாற்பத்தொன்றில் விசேடமில்லை.

## 42.

## சித்தாந்தமரபு

ஆன்மாக்களுக்குக் கன்ம ஆர்ச்சிப்புக் கேவலாவத்தையில் இல்லாமல் சகலாவத்தையில் கூடாது. சகலாவத்தையில் ஆர்ச்சிப்பாளுகில் சிவன்பேரிலே தோஷம் வரும். ஆகையிலுலே சகலாவத்தையிலே ஆன்மாக்களுக்கு ஆர்ச்சிப்பு இல்லை.

## சித்தாந்தமரபு கண்டனம்

'ஆன்மாக்கன்ம மார்ச்சிப்பது சகலாவத்தையிலில்லை. கேவலாவத்தையிலுண்டு. சகலாவத்தையிலுண்டெனிற், சிவன்பேரிலே தோடமேறும்' என்ருர். கேவலாவத்தையிற் றேகேந்திரிய வியாபார மில்லாததினுலே கன்ம மார்ச்சிப்பது கூடாதென வறிக.

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

ஈண்டுக் கேவலஞ் சகலமென் றவற்றிற்குப்பொருள் வேறென்பதறியாமையாற் கேவலந் தன்னுண்மையெனக் கூறிய கேவலமே ஈண்டுக்கூறிய கேவலமெனக்கொண்டு, கேவலத்தி லார்ச்சிப் பெவ்வாறு கூடுமென மயங்கி, நும்மறியாமையை எமக்குத் தெரிவித்தீர். அடுத்த வசன மெற்றிற்கெழுந்த தென்ருயினு நோக்கிலீர். இங்ஙனம் பொருள் காணுது நமக்குத் தெரிந்தவாறுபற்றிப் பொருள் கொண்டு, குற்றங்கூறிய நும்மறிவு 'ஆனை யெருத்தம் பொலிய' (நாலடியார்–செல்வ நிலையாமை 3.) என்புழிப், 'பொலிய' என்பதற்குப் பாடம் பிழையெனத் தள்ளி, வேறு வேறு பாடங் கொண்டார் முறைமைத் தாகலின், அம்முறைமைபோல நகையாடி விடுக்கற்பாலதன்றி மறுக்கற்பாலதன்று.

# 43.

## சித்தாந்தமரபு

ஆணவமல்மானது இராக்காலம் போலும். கேவலம் இருள் போலும். கேவலத்திற்குப் பொருள் மறைப்பு.

## சித்தாந்தமரபு கண்டனம்

'ஆணவமல மிராக்காலம் போலும். கேவலமிருள் போலும். கேவலாவத்தைக்குப் பொருள் மறைப்பு' என்றீர், 'இருளுக்கும் இராக்காலத்துக்கும் வேற்றுமை சொல்லவேண்டும்.'

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

'இருளுக்கும் இராக் காலத்திற்கும் வேற்றுமை சொல்ல வேண்டும்' என்றீர். காலமுங் காலத்தில் நிகழ்பொருளுமாகிய வவ்விரண்டிற்கும் வேற்றுமை பெரிதென்பது வழிபடுமுறையில் வழிபட்டுக் கேட்டாற் சொல்லலாம்.

# 44.

## சித்தாந்தமரபு

ஆன்மாவுக்குக் கேவல சகல சுத்தமென மூன்று அவத்தையுண்டு. அவற்றுட் கேவலமாவது காரணகேவலமென்றுங் காரியகேவலமென்றும் இருவகைப்படும். அவற்றுட் காரண கேவலமாவது அநாதி தொடுத்து மோக்ஷபரியந்தமுள்ள எண்ணிறந்த சிருஷ்டியாத்மா அறிவுகெடாமல் ஆணவமலத்திலே அழுத்திக் கிடத்தல். எப்படி? யென்னில். கண்ணுனது இராக்காலத்திருளிலே ஒளி கெடாமல் விழித்திருத்தல் போலும். காரிய கேவலமாவது அறிகருவிகள் நீங்கிச் சாக்கிர முதல் அஞ்சவத்தைப்படுதல். *

---

*காரிய கேவலமாவது நித்தம் கருவிகள் நீங்கி நித்திரை கொள்ளுதல் (பி-ம்).

காரண சகலமாவது அநாதி சிருட்டி காலங்களிலே யுண்டாகிய மாயா சரீரங்களைப்பற்றி முப்பத்தாறு தத்துவங்களையும் பொருந்திநின்று சுக துக்கங்களை அறிதல் †எப்படி? யென்னில் இராக்காலத்திருளிலே அழுந்திக்கிடந்த கண்ணனது விளக்கினாலே இருள் நீங்கிப் பல பதார்த்தங்களைக் காண்டல்போலும். காரிய சகலமாவது லலாடத்தானத்திலே தானே துரீயாதீத முதல் சாக்கிர மீருகவுள்ள மத்தியாவஸ்தை ஐந்தையும் அடைதல்.

காரண சுத்தமாவது ஆன்மா பஞ்ச மலங்களையும் நீங்கி அருளைப்பொருந்திச் சிவானந்தத்தை அனுபவித்தல். எப்படி? யென்னில், இராக்காலத்திலே இருளோடும் விளக்கோடும் கூடியிருந்த கண்ணனது ஆதித்தன் உதயஞ்செய்தவிடத்து இராக்காலத்தையும் இருளையும் விளக்கையும் விட்டு நீங்கி, ஆதித்த கிரணத்தினாலே ஆதித்தனைக் காண்டல் போலும். காரிய சுத்தமாவது நின்மல சாக்கிரம் முதல் ஐந்தவத்தையுமாம்.

## சித்தாந்தமரபு கண்டனம்

நாற்பத்துநாலில் விசேடமில்லை.

## 45.

## சித்தாந்தமரபு

மல நிவர்த்திக்குக் காரணமாவது அநாதி சிருட்டி தொடுத்து மோக்ஷபரியந்தம் ன்ஆமாவாலுண்டாகிய சிவ புண்ணியங்களாம். சிவ புண்ணியங்களாவன புத்தி பூர்வ சிவ புண்ணியம், அபுத்தி பூர்வ சிவ புண்ணியம், உபாயச் சரியை,

† *காரண சகலமாவது அநாதி கேவலத்தில் அழுந்திக்கிடந்த ஆன்மா மாயா கருவிகளினாலே மறைப்பு நீங்கிச் சத்தாதி விடயங்களை அறிதல் (பி-ம்).*

உபாயக் கிரியை, உபாய யோகம், உபாய ஞானம், உண்மைச் சரியை, உண்மைக்கிரியை, உண்மை யோகம், உண்மை ஞான மென்று பத்துவிதமாயிருக்கும். இப்பத்தில் முந்திய ஒன்பதும் மருள் நிலை : பின் சொன்ன உண்மை ஞானம் ஒன்றும் அருணிலை. அந்த உண்மை ஞானம் ஒன்றும் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி. ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவ ரூபம், சிவதரிசனம், சிவ யோகம், சிவ போகமென்று பத்துவிதமாயிருக்கும், இந்தப் பத்தையும் சுத்தாவத்தையின் காரியமாகிய நின்மலசாக்கிர முதலிய ஐந்தவத்தையில் அடக்கி ஆசிரியர் பக்குவனான சீடனுக்கு நிருவாண தீக்ஷையைப்பண்ணி அறிவிப்பார்.

இப்பத்தும் நின்மல சாக்கிர முதலிய ஐந்தவத்தையில் அடங்கும் முறைமையாவது :—தத்துவ ரூபம், தத்துவ தரிசனம் தத்துவ சுத்தி, ஆன்ம ரூபமாகிய நான்கும் நின்மல சாக்கிரத்தில் அடங்கும். ஆன்ம தரிசனமும் சிவ ரூபமும் நின்மல சொப்பனத்தில் அடங்கும். நின்மல சுழுத்தியில் தேசகாலாதியாய் அடங்குவதொன்றுமில்லை : ஆன்மா அருள் செய்யும் பஞ்ச கிருத்தியத்தை யான் செய்வேனென்று கருதல் மாத்திரம். ஆன்ம சுத்தியும் சிவ தரிசனமும் சிவ யோகமும் நின்மல துரியத்தில் அடங்கும். சிவ யோகம் மூன்றும் நின்மல துரீயாதீதத்தில் அடங்கும்.

## சித்தாந்தமரபுகண்டனம்

'மல நிவிர்த்திக்குக் காரணம் அனாதி சிருட்டிதொடுத்து மோட்சபரியந்த மான்மாவாற்செய்யப்பட்ட சிவபுண்ணியம்' என்றார். சிவபுண்ணியமாவது புசிக்கப்படும் கன்மம். அது மல நிவிர்த்திக்குக் காரணமாவது கூடாது.' அன்றியும், 'அதுவும் அபுத்தி பூருவும் புத்திபூருவமென் றிருவகையாய் உபாயச்சரியை முதல் நான்கும் உண்மை முதனான்குமாகிப் பத்துவிதமாம். இப் பத்தில் உண்மைஞான மொன்றும் அருணிலை, மற்றை யொன்ப

தும் மருணிலே' என்றும், 'உண்மை ஞானமொன்றுந் தச காரியம் பத்துவிதமாம்' என்றும், சொன்னார். 'அந்த உண்மை ஞானம் எப்படித் தத்துவரூப முதலியவாம்?' அன்றியும், தச காரியம் பத்து நின்மலாவத்தையி லடக்கினார்.' அதில்] 'தத்துவ ரூபமுத லான்மரூப மட்டும் நின்மலசாக்கிரத்திலடங்கும்' என்றார். 'அது கூடாது' அன்றியும், 'சிவபோகமாவது ஆன்மா சிவ ஞானத்தைப் புசித்தல்' என்றார், 'அது அர்த்தமன்று.'

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

சிவபுண்ணியத்தினியல்புந் தசகாரியத்தின் கூறுபாடு முண்மையினின்றறிதற்பாலவாகலின், அது நீரறிதற்கு யார்? அது நிற்க, அபுத்திபூருவம் புத்திபூருவங்கட்குஞ் சரியை முதலியவற்றிற்குந் தம்முள் வேற்றுமைதான் என்னை? சிவபுண்ணியஞ் சரியை முதற் பலதிறப்படுவதற்கு ஏதுதான் என்னை? காரியம்பத்தென்னு நியமத்திற்குத்தான் ஏதுவென்னை? தத்துவ முதலியன மூன்று முருவந் தரிசனஞ் சுத்தியென முத்திறப்படுதற்குத்தான் ஏது என்னை? ஐவகைமலங்களுண் மாயையொன்றின் காரியமாகிய தனுமுதலிய நான்கனுட் டத்துவமொன்றற்குமாத்திர முருவந் தரிசனஞ் சுத்தி சொல்லி, ஏனையவற்றிற்குச் சொல்லாதொழிந்ததுதான் என்னை? இவை நிற்க, 'தேசுற மருவு மான்ம தெரிசன மான்ம சுத்தி—யாசிலா வான்ம லாப மாகமூன் றாகும்' (சிவப். உண். VII. 1.) என மூன்றே யெடுத்தோதியது என்னை? இன்னோரன்ன வாசங்கைகளு ளொன்றாயினு மறியமாட்டாத நீர் கூறியவற்றுள், ஒன்றாயினு மாசங்கைக்குரித்தன்றென்பதறிக. 'சிவபோகமாவது ஆன்மாச் சிவஞானத்தைப் புசித்தல்' என்றார் என்றீர். ஈண்டவ்வாறு கூறுவார் யாருமில்லை.

# 46.

## சித்தாந்தமரபு

சிவஞான போதத்தில் இரண்டாஞ் சூத்திரத்தில் தத்துவ ரூபமொன்றும் சொல்லப்பட்டது. ஐந்தில் தத்துவ தரிசனமும் ஆறில் தத்துவ சுத்தியும், ஏழில் ஆன்ம ரூபமும், எட்டில் ஆன்ம தரிசனமும், சிவரூபமும், ஒன்பதில் ஆன்ம சுத்தியும் சிவ தரிசனமும், பத்தில் சிவயோகமும், பதினொன்றில் சிவ போகமும் சொல்லியிருக்கின்றன.

## சித்தாந்தமரபு கண்டனம்

'நாற்பத்தாறில் மேற்றசகாரியவனுபவஞ் சொன்னவர் சிவ ரூபஞ் சிவதரிசனஞ் சிவயோக மூன்றையும் பிசகாக அர்த்தங் கொண்டார்.'

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

*நீர் நாற்பத்தாறெனக்கொண்ட திதுவென்றெழுதிலீர். யாங் கொண்டவற்று ளில்லை. அதனை யறிந்தா லிறுப்பாம்.*

# 47.

## சித்தாந்தமரபு

சிவஞானபோத முதற் சூத்திரத்தில் சங்கார கர்த்தாவே முதன்மையான கர்த்தாவென்று சொன்னது இரண்டிலே மல மும் கன்மமும் மாயையும் ஆன்மாவும் சிவனுமாகிய ஐந்து பொருளும் அத்துவிதமாயிருக்கும் என்றது. மூன்றில் அநுமா னத்தினாலே ஆன்மா உண்டென்று சாதித்தது நான்கில் ஆன் மாவுக்கு அநாதியிலே கேவல சகல சுத்தமென்று மூன்றவத் தையும் உண்டென்று சொன்னது. ஐந்தில் ஆன்மா தன்னைப்

பிரமமென்று கருதல் அல்லவென்று மறுத்தது. ஆறில் சத்தும் அசத்தும் பகுத்துச் சொன்னது. ஏழில் ஆன்ம இலக்கணமும் முன் சொன்ன சத்து அசத்திற்குப் புறனடையும் சொன்னது. எட்டில் சிவஞானத்தை அறியும் முறைமை சொன்னது. ஒன்பதில் ஆன்ம சுத்தி சொன்னது. பத்தில் பாசக்ஷயம்சொன்னது. பதினொன்றில் பரமேசுரன் சீபாதங்களை அணையும் முறைமை சொன்னது, பன்னிரண்டில் மனவாக்குக் காயங்களினாலே அறியப்படாத சிவனை மனவாக்குக் காயங்களினாலே அறிந்து வழிபடும் முறைமை சொன்னது.

## சித்தாந்தமரபு கண்டனம்

நாற்பத்தேழில் விசேடமில்லை.

## 48.

## சித்தாந்தமரபு

ஞானவானுக்குப் பிராரத்த கன்மம் இல்லையென்பதற்குப் பழைய மணியகாரன் முதலிய உவமைகள் வருமாறு:-ஒருவன் ஒரு ஊரிலே வெகுநாள் மணியம் பண்ணிக்கொண்டிருந்து வேண்டிய நெற்களும் வாழைகளும் கரும்பு முதலிய பயிர்களும் உண்டாக்கிக்கொண்டிருக்கும் நாளில் மணியம் மாறிப் புது மணியகாரன் வந்தான். வந்த இடத்திலே பழைய மணியகாரனாலே உழக்கு நெல்லும் கொடுக்கப்படாது; ஒரு இலையும் அறுக்கப்படாது. பழைய மணியகாரனைப்போலும் ஆன்மா. புது மணியகாரனைப் போலும் சிவன் ஊரைப்போலும்சரீரம். பதார்த்தங்களைப்போலும் பிராரத்தம்.

## சித்தாந்தமரபு கண்டனம்

'ஞானவான்களுக்குப் பிராரத்தமில்லை யென்பதற்குச் சிறிதுவமானஞ் சொல்லுகிறதிற், 'பழைய மணியகாரன் சகல ஓஷதி

பதார்த்தங்களுண்டாக்கி வைத்திருக்கிறதைப் புதுமணியகாரன் கையாளுகிறதொழியப் பழைய 'மணியகாரன் கையாளப்படாது' என்றார். 'பழைய மணியகாரன் ஆன்மா, புதுமணியகாரன்சிவன். சரீரம் ஊர், பதார்த்தங்கள் பிராரத்தங்கள்' என்றார். எனவே, ஞானி பிராரத்தஞ் சிவன் புசிப்பானென்றாயிற்று, புது மணியகார னூருக்கு எசமானன்போலத் தனுவுக்கு எசமான்னன் சிவனும். புது மணியகாரன் வந்தநாண்முதல் அந்தவூரனுபவம் அவனது போல ஞானம்வந்தநாண்முதல் அந்தத் தனுவுக்குச் சீவன் சிவன். அத் தனுவுக்குள்ள பிராரத்தஞ் சிவனநுபவிக்கவேண்டும். அதற்குப் பூர்வம் சிவனிப்படி நடுவுபாதியிலே ஒரு ஆன்மாவுடைய தேகத் தைத் தனக்குத் தனுவாகக் கன்மானுபவம் பண்ணுமாயின், முன் னிருந்த வான்மா எங்கே யிருப்பன்? என்ன புசிப்பன்? இவைக் கெல்லாம் வகை சொல்லவேண்டும். அன்றியும், முன்னே 'கன்மஞ் சஞ்சித பிராரத்த மாகாமியமென மூவகைப்பட்டிருக்கும்' என் றும், 'அதிற் பிராரத்தந் தேகமுள்ளமட்டும் புசித்துத் தொலைவது' என்றுஞ் சொன்னவர், இவ்விடத்தில் இப்படி மாறுபாடாகச் சொன்னார். இந்த அர்த்தத்திலே தோடம் வெகுவாக விஸ்தரித்து எழுதலாம். விரிவாகுமென்பதினால் எழுதவில்லை. ஆகையால் இவர் நிரம்ப மயங்கின வேளையிலே இது சொன்னதென வறிக.

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

'என்னதோவிங் கதிகாரம்' (திருவாச தலைத்த. 8.) என்ற சுருதியின் றாற்பரியமு நோக்காது, 'புதுவதிகாரியை ஈண்டுவமை கூறினதுபோல ஞானம்வந்த நாண்முதல் அந்தத்தனுவிற்குச் சீவன் சிவன்; அந்தத் தனுவிற்குள்ள பிராரத்தஞ் சிவனுக் கனுபவமென வேண்டும்; அதற்குச் சிவன் இப்படி நடுவுபாதியிலே ஒரு ஆன்மா வினுடைய தேகத்தைத் தனக்குத் தனுவாகக் கொண்டு கன்மானு பவம் பண்ணுமாயின், முன்னிருந்த வான்மா வெங்கே யிருப்பன்? என்ன புசிப்பன்? இவைக்கெல்லாம் வகை சொல்லவேண்டும்'

என்றீர். வழிபடுமுறையிலே வழிபட்டுக்கேட்டால் இவற்றிற்கெல்
லாம் வகை யினிது விளங்கும். 'அன்றே யென்ற ஞவியு முடலு
முடைமை யெல்லாமுங்-குன்றே யனையா யென்னை யாட்கொண்ட
போதே கொண்டிலையோ' (திருவாசகம் குழைத்த பத்து 7.)
'இறைவனே நீயென் னுடலிடங் கொண்டாய்' (திருவாசகம்
கோயிற்றிருப்பதிகம் 5.) 'என்றவுடற் கன்மம்' (சிவஞானசித்தியார்
VIII. 10.) 'என்றவுடற் பழவினைகள்' (சிவப். உண். 39) 'என்று
கொண்டா யென்னை' (திருநா. திருகச்சி. திரு விருத்தம்) 'தந்ததுன்
றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா வார்கொலோ சதுரர்–
அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன் யாதுநீ பெற்றதொன்
றென்பால்' திருவாச. கோயிற்றிரு. 10.) 'நாதனிவ னுடலுயிரா
யுண்டுறங்கி நடந்து நானுபோ கங்களையுந் தானாகச் செய்து'
(உண்மைநெறி வி. 6) 'அடியே-னுண்டவூணுனக்காம் வகையென
து:ள்ள முள்கலந் தெழுபாஞ் சோதி' (திருவிசைப்பா கருவூர்த்.
கங்கை. 6.) 'ஈண் டிவ்வான்மாக்க ளவனையின்றி யமைந் தொன்
றையும் வி:டயியா வாகலான், அவனுமவற்றது விடயத்தை யுணரு
மென்றது' (சிவஞானபோ. XI. 1.) 'பட்டதே மூலவினை
பாறிற்றே யெறும்வினை-விட்டதே யிவ்வுடம்பின் மிக்கவினை-நட்
டதே-சிற்றறிவிற் பேரறிவு சிற்றம் பலநாடி-பொற்கழல்வைத்
தாட்கொண்டபோது' (சிற்றம்பலநாடி வேண். 44.) 'நஞ்சுவீற்
றிருந்த பேரானந்தப் புணரியோ ராங்குப் படிதலுடைய ரீண்டே'
(ஞானமிர்தம் 41.) என வருமித்தொடக்கத்துச் சுருதிகளைக் காது
கொண்டு கேட்டு மறியீர் போலும். இது நிற்க, உலகத்துப்பேயா
வேசிக்கப்பட்டவனையாகிலுங் கண்டிலீர் போலும். துரபிமானங்
கொண்டலைவோர்க் கெத்துணை யறிவுறுத்தினும் பயன் என்னை?
உடல் பொரு ளாவி மூன்றும் ஞானதீக்கையின் முதல்வனுக்கெனப்
பூநீரொடுந் தானஞ்செய்தளித்தலான் முன்செயற்கையாற் றன்னு
டைமையாய் நின்ற விம்மூன்றுந் தானஞ்செய்தபின்னர்த் தனக்
கின்றிச் சிவனுக்குடைமையாயவாறு பெற்றும். பெறவே,

ஆண்டுப் பொருளென்ற துடம்புபோ லொற்றுமையுடைத்தாய்த் தன்னுனுகாக்கிடந்த உடல் வினையேயன்றி, முன்பே தன்னுற் றுறக்கப்பட்டொழிந்த புறப்பொருளன்றென்பது தானே போதரு தலானும், அவ்வாறன்றி, ஆண்டுப்பொருளென்றது எல்லாவற்றிற் கும் பொதுவெனக்கொள்ளினும், உடல்வினையும் அவற்றுளடங்கு தலானும், அன்றி, உடல்வினையை யொழித்தொழிந்த புறப் பொருண்மாத்திரையே யாண்டுத் தானஞ் செய்யப்படுமெனக் கொள்ளின், அஃதல்கு லுறுப்பொழித்து மகட்கொடை கொடுப் போர் கூற்ருயும், பாலொழித்துக் கோதானஞ்செய்வோர் கூற்ருயு முடியுமாகலின், அது பொருந்தாமையானும், அங்ஙன முதல்வனுக் கீந்த வுடல்வினையை மீளவுந் தனக்கெனக்கொண்டு நுகாக் கருது வோன் அவ்வாறு தானஞ்செய்தளித்த வான்மாவைமீளவுஞ் சுதந்திர ணுகக்கருதுஞ் சிவசமவாதிகளோடொப்பச் சிவத்திரவிய வபகாரி யாய்ச் சிவத்துரோகியாவனுகலின், அங்ஙனம் பரம சற்பாத்திரத் திற் ருனஞ் செய்தபொருளை மீளவும் அபகரிக்குந் தெத்தாபகாரிக ளாகிய கொடிய பாவிகளோடு பேசினேர்க்கு மூய்தியில்லதோர் கொடிய பாவந் தலைப்படும். அதனுல், இவ்வாறு பிணங்காநின்ற நம்மோடு பேசினும் பெரியதோர் இழுக்கேயாம்.

## 49.

## *சித்தாந்தமரபு*

**சிவன் அநாதி கேவலத்திலே கிடக்கிற ஆன்மாவை அநாதி சிருட்டி செய்கிற காலத்திலே தாம் தலமாகவும் தீர்த்த மாகவும் மூர்த்தியாகவுமிருந்து திருமேனிகொண்டு ஆன்மாக் களுக்குச் சிவபுண்ணியங்களைக்கொடுப்பார். அஃது எப்படி? யென்னில், சிவஸ்தலத்திலே புல் முதலான சரீரங்களாய்ச் செனித்தாலும் வசித்தாலும் மரித்தாலும் சிவபுண்ணியத்தைக் கொடுப்பர் தீர்த்தத்திலே மீன் முதலானவை செனித்தாலும் வசித்தாலும் மரித்தாலும் மனுஷ்யர் முதலாயினவர்கள் முழுகி**

னுலும் குடித்தாலும் திவலைதெறித்தாலும் அந்தத் தீர்த்தம் பாய்ந்து விளைந்த நெல் முதலாகிய பதார்த்தங்களைப் பறவை முதலானவைகள் புசித்தாலும் சிவபுண்ணியம் உண்டாம். சிவ லிங்கத்திலே செய்யும் அர்ச்சனை, அபிடேகம், நைவேத்தியம் முதலானவைக்கு உரித்தாகிய விருக்ஷங்களாகவும் நெல் முத லான பயிர்களாகவும் பசு முதலான மிருகங்களாகவும் பணி விடைக்குரிய சரீரங்களாகவும் செனிப்பித்துச் சிவபுண்ணியங் களைக் கொடுப்பர்.

## சித்தாந்தமரபு கண்டனம்

'பரமசிவன், அனுதிகேவலியாகிய வான்மாவுக்கு, அனுதிசக சிருட்டி செய்யும்பொழுது, தானே தலமுந் தீர்த்தமு மூர்த்தியுமா கித், திருமேனிகொண்டு வசிக்கிறதினுலேயும், தலவாசத்தினுலே யும், தீர்த்தப் பரிசமுதலியவற்ருலேயும், அனேகம் பிரகாரமாக வுப கரித்துச் சிவபுண்ணியங்களைக் கொடுப்பான்' என்ருர். 'ஆன்மாக் கள் அனுதிசிருட்டியிலே இவைகளிலே வசிக்கிறது முதலாகிய கன் மங்கள் எங்கே செய்திருந்தன? ஆன்மாக்களுடைய கன்மானு குணமாகவல்லவா தலந் தீர்த்த மூர்த்தியாய்வருதல்வேண்டும். அன்றியும், சிவன்ருனே இப்படி வருவனென்பதால், இவர் பெரிய மாயாவாதியுடைய தமையனுரென்ருயிற்று.'

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

*'அனுதிசிருட்டியில் வசிப்பது முதலிய கன்மங்கள் எங்கே செய்திருந்தன? ஆன்மாக்களுடைய கன்மானுகுணமாகவன்றே சிவன் மூர்த்தி தலந் தீர்த்தங்களாய் வருதல் வேண்டும்' என்றீர். அனுதிசிருட்டிதான் எவ்வாறு வந்தது? கன்மானுகுணமாகவன்றி வருமா? என்ருராய்ந் தறியலுறுவார்க்கு, அனுதியே தலந் தீர்த்த மூர்த்தியாய்த் திருமேனி கொண்டுவருமாறு மினிது விளங்கும்.*

இன்னும், 'தேசமலி பொதுஞானச் செவ்வொளியுந் திகழ்பதியா மீசனது நடத்தொழிலு மிலங்குபல வுயிர்த்தொகையும்-பாசமுமங் கதுகழியப் பண்ணுதிரு வெண்ணீறு-மாசிறிரு வெழுத்தஞ்சு மனுதி யிவை யாருக' (கோயிற்புரா பாயி 20.) என்னுந் திருவாக் குங் கேட்டறியீர் போலும். அன்றியும், 'சிவனே யிப்படி வரும்' என்றன் 'மாயாவாதி கூற்றும்' என்றீர். 'வருக தேவர் முது குன்ற நமக்கு வடிவ முத்தநதி சத்தியின் மேனி' (விருத்தாசல புரா. நிருத்தச் சருக்கம் 9) 'எங்கு மிடையற நிறைந்த பராம் பரனுர் தீர்த்தவடி வெய்தி நின்ற-பொங்குபுனற் சிவகங்கை' (சிதம்பர புராணம் நியமச் சுருக்கம் 54.) என்றற்றொடக்கத்துச் *சூதஞெலிமாலையு நமக்குப் பிரமாணமன்று கொலாம். இவை நிற்க: 'சிவனெனவே தேறினன்யா னென்றமையா லின்று-சிவ னவனி வந்தபடி செப்பில்-அவனிதனில்-உப்பெனவே கூர்மை யுருச்செய்யக் கண்டமையா, லப்படியே கண்டா யவன் (திருக் களிற்றுப், 91.) என்றற்றொடக்கத்துச் சாத்திரங்களும் நுமது வெள்ளறிவிற்கு மாயாவாதி கூற்றேயாம்போலும். இவை நிற்க: 'உலகமே யுருவமாக' (சித்தி V. 7) என்றதூஉம், சிவப்பிர திட்டையிற் சடத்துவநியாசமுதலிய நியாசங்கள் விதித்ததூஉம், 'அட்டமூர்த்தி' (சுந்தரர்தே. தக். திருவா. 2.) என்பதூஉம், 'பார் பத மண்ட மனைத்துமாய் முளைத்து (திருவாச கோயிற்றிருப்பதி கம் 8.) என்பது முதலாயினவும், முழுமாயாவாதம்பற்றிக் கூறிய தெனக் கொள்ளுவீர் போலும். சித்தாந்த சைவாகமங்களின் கோட்பாடே யறியமாட்டாத நும்பழித்துரையெல்லாம் எமக்கணி கலமேயாம். திருமேனி வழக்கறிந்தால் எவ்வழியுஞ் செவ்வழியாய் விளங்கும்.

---

* சூதஞெலிமாலை = புராணம்.

## 50, 51.

## சித்தாந்தமரபு

விஞ்ஞானகலருக்கு ஆணவமலம் ஒன்றுமே பந்தம். கருமமும் மாயையும் இல்லாதிருந்தால் பந்தம் நீங்காது. ஆகையிஞலே சுத்த கன்மமும் சுத்த மாயா தனுவுமுண்டு. அப்படியுண்டாயிருக்கையிலும் இல்லையென்றது அந்த இரண்டிஞலும் அவர்களுக்கு மயக்கமின்மையின்.

பிரளயாகலருக்கு ஆணவமலமும் கன்மமுமேபந்தம். சரீரம் இல்லாதிருந்தால் கன்மம் புசிக்கப்படாதாகையிஞலே அசுத்த மாயா தனுவுண்டு. அப்படியுண்டாயிருக்கையிலும் இல்லையென்றது அவர்களுக்கு அதஞலே மயக்கமின்மையின்.

## சித்தாந்தமரபு கண்டனம்

'விஞ்ஞானகலருக்கு ஆணவமலமொன்றும்பந்தமாஞல்,மாயையுங் கன்மமு மில்லாதிருந்தால் பந்தநீங்காதாகையால், மாயையிலே சுத்ததனுவுஞ் சுத்த கன்மமுமுண்டு' என்றும், சொன்ஞர். 'கன்மமனுபவிக்குமிடத்து மயக்கம் எப்படி யில்லாதிருக்கும்? அஞதி சிருட்டியில் சுத்தமாயா பிராத்திக்குக் கன்மம் எப்படி யுண்டாம்? ஆகையாற் கூடாதென வறிக.'

'பிரளயாகலருக்கு மனமுங் கன்மமும் பந்தமாஞல் கன்மம் புசிக்கப்படாதாகையால், சரீரம் வேண்டும். அதஞல், அசுத்த தனுவுண்டு' என்ருர். 'இல்லையென்றது மயக்க மின்மையால்' என்ருர். 'கன்மானுகுணமாகவல்லவா தனுவுண்டாகிறது, தனுவில்லாமற் கன்மம் புசிக்கப்படாதாகையால், தனுவேண்டுமென்றது எப்படி? கன்மமனுபவித்துக்கொண்டு மயக்கமில்லாமல் எப்படி யிருக்கும்? அன்றியும், அஞதி சிருட்டியில் அசுத்த மாயைபிராத்தி எப்படியுண்டாம்? ஆகையால், அது கூடாதென வறிக.'

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

விஞ்ஞானகலர் பிரளயாகல ரியல்புகூறிய வசனம் யார் கொண்டதோ? அங்ஙனமாயினும், அவற்றிற் கிழுக்கு என்னை? 'விஞ்ஞானகலர் பிரளயாகலர் கலையோடு கூடினுந் தடக்குண்ணுமையின், அகலரேயாவர்' என்னும் பவுட்கராகமத்தின் பொருளே அவ்வசனத்தின் பொருளாகலின், அதன் குற்பரிய முணரமாட்டா திகழ்தல் அறியாமை. இனி உண்மையா னேக்குங்கால், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென மூவகைப்படுமியல்பு, எண்ணிறந்த வான்மாக்களுக்கும் இலக்கணத்தாற் றம்முட் டனித்தனியுளதாகிய வேற்றுமை யுணரவல்லார்க்கன்றி அறியக்கூடாதென்றறிக.

## 52, 53.

## சித்தாந்தமரபு

கருமபரிபாகி நடையாவது சரீரப் பற்று விடாமல் வேதாகமங்களை ஓதி யுணர்ந்து அறுதியிட்டறிந்து நித்திய கன்மாநுட்டானங்களை வழுவாது அநுட்டித்தல்.

மலபரிபாகி நடையாவது சரீரப் பற்று விட்டு ஞானசாஸ்திரங்களை ஓதிக்கேட்டல் சிந்தித்தல் தெளிதலை அடைந்து நிட்டையைப் பொருந்துதல்.

## சித்தாந்தமரபு கண்டனம்

ஐம்பத்திரண்டு ஐம்பத்துமூன்று விசேடமில்லை.

## 54.

## சித்தாந்தமரபு

ஞானவான்களுக்குத் தேகம் விழுதலாவது தத்துவசுத்திப் படுதல்.

## சித்தாந்தமரபு கண்டனம்

'ஞானிகளுக்குத் தேகமில்லையென்றது தத்துவசுத்திப்படுதல்' என்றார். 'தத்துவத்தை அன்னியமாகக் காண்பதொழிய, விட்டு நீங்குகிறது எப்படி ? வகை சொல்லவேண்டும்.'

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

'தத்துவத்தை அன்னியமாகக் காண்பதொழிய விட்டு நீங்குவது எப்படி, என்றீர். விட்டு நீங்கியபின்னன்றி யன்னியமாகக் காண்டல் கூடாதென்பது அநுபவமுடையோர்க்கன்றி நமக்குத் தெரியாதாயினும். 'காய நின்னி–லன்னியமாகு முன்னை யறிந்து நீ பிரிந்து பாரே' (சித்தி. IV. 26.) என்றற்றொடக்கத்துச் சுருதிகளின் றாற்பரியமு மறிந்திலீர். பேய் பிடியுண்டானொருவன் பேய் தனக்கன்னியமென் றறிவது எப்பொழுது? உலகச் செய்தியில் வைத்தறியவுங்கில்லீர். வியாபகப்பொரு ளொன்றிற் கூடுமாறு நீங்குமாறும் ஏகதேசப்பொருளொன்றிற் கூடுமாறு நீங்குமாறும் போலல்லவென்பது, ஏகதேசப் பழக்கமேயுடைய நமக்குத் தெரிவதரிதுதான். 'விட்–டன்னியமின்மையி னரன்கழல் செலுமே' (சிவஞான போ. சூ. 8.) என்பதற்கும், 'இவ்வான்மாத் தன்னை யிந்திரியத்தின் வேறுவான் காணவே' (சிவஞா. வார்த். சூ. 8. 4.) என்னுங் கண்ணழித்துரைக்கும், 'பாசமொருவத்–தண்ணிழ லாம் பதி' (சிவஞான போ. சூ. 9.) என்பதற்கும், 'அசத்தாயுள்ள வன்னபேதங்களை யசத்தென்று காண' (சிவஞான. வார்த். 9. 2.) என்னுங் கண்ணழித்துரைக்கும், இன்னு மிவைபோல்வனவற்றிற்கும், பொருளொருமை கண்டீராயினும், இவ்வாறு மயங்கி கூறுவீரல்லீர்.

## 55.

## சித்தாந்தமரபு

ஞானவானுக்கு அந்தியேட்டியாவது சிவஞானத்தினாலே அடைந்த சுத்தாவத்தையும் நீங்கிச் சிவானந்தத்திலே அழுந்துதல்.

## சித்தாந்தமரபுகண்டனம்

'ஞானவானுக்கு அந்தியிட்டியாவது சிவஞானத்தினுலே யடைந்த சுத்தாவத்தையு நீங்கி ஆனந்தத்திலே யழுந்தல்' என்ருர். 'அந்தியிட்டி யொருவர் பண்ணுகிற கிரியையாமே. ஆனந்தத்திலே யழுந்துகிற கிரியையை எப்படிப் பண்ணுவார்?' அப்படியானுல் எல்லாரையும் அப்படியடைவிக்கலாமே. அன்றியும், அந்தியிட்டிக்குச் சத்தார்த்தம் என்னே? இப்படித் தோடமிருக்கையால், அது கூடாதெனவறிக.'

## சிந்தாந்தமரபு கண்டன கண்டனம்

'அந்தியிட்டி' என்ற வசனத்துக்குத் தாற்பரியமறியமாட்டாமையின் நுமக்குத் தெரிந்தவாறே பிதற்றினீர். ஈண்டு அந்தியிட்டி என்பதற்குச் சத்தார்த்தமில்லை' என்றீர். ஐவகையெச்ச மென்றவற்றுட் சில வெச்சங்களையும் இவ்வா றெச்சமல்லவெனக்கூறி, இகழ்வீர் போலும்.

## 56.

## சித்தாந்தமரபு

சிவன் சத்தியோடு கூடினுற் பிரபஞ்சம் உண்டாம்; சத்தி சிவத்தோடு கூடினுற் பிரபஞ்சம் ஒடுங்கும். ஆன்மா ஆன்ம போதத்திற் கூடினுல் பிரபஞ்சம் உண்டாம்: ஆன்ம போதம் ஆன்மாவில் ஒடுங்கினுல் பிரபஞ்சமும் ஒடுங்கும்.

## சித்தாந்தமரபு கண்டனம்

'சிவன் சத்தியோடுங் கூடினுற் பிரபஞ்சமுண்டாம்: சத்தி சிவத்தோடுங் கூடினுற் பிரபஞ்சமொடுங்கும்' என்ருர். 'பின்ன வஸ்து ஆகாதபடியினுலே தோடமுண்டு. ஆன்மாவுக்குச் சொன்னதும் அப்படித்தான்.

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

சத்தி சத்திமான்களுக்குத் தாதான்மிய சம்பந்தத்தால் வேற்றுமையுண்மை யறியாது, பின்னப்பொருளல்ல' என்றுவைத்துக் குற்றங்கூறினீர். 'சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்றும் (சித்தி II. 77.) என்னுஞ் சுருதியின் ரூற்பரியமுமறிந்திலீர் போலும்.

# 57.

## சித்தாந்தமரபு

ஆன்மாவுக்கு மலப்பிணியினுலே சரீரமுண்டானது. சிவனுக்கு ஆன்மாவினுடைய மலப்பிணியைத் தீர்க்கும் திறமையுண்டாகையினுலே திருமேனியுண்டானது. ஆன்மாவினுடைய மலப்பிணியைத் தீர்க்கும் மருந்தாவது பிராரத்தம். அந்த ஆன்மா தன்னுடைய பிராரத்தத்தைச் சிவனுக்குக் கொடுத்தால் தன்னுடைய மலப்பிணி நீங்கும். ஆன்மா பிராரத்தத்தைத் தானே புசித்தால் மலப்பிணி நீங்காது.

## சித்தாந்தமரபு கண்டனம்

'ஆன்மாவுக்கு மலப்பிணியாற் சரீரமுண்டாயிற்று' என்றும், 'அதைத் தீர்க்கைக்கு இச்சையாற் சிவன் றிருமேனி கொண்டது என்றும், 'அந்தப்பிணிக்கு மருந்து பிராரத்தம்' என்றும், 'அதைச் சிவனுக்குக் கொடுத்தால் அப்பிணி நீங்கும்' என்றும், 'அதை யான்மாப் புசித்தாற் பிணி நீங்காது' என்றும்சொன்னுர். கன்மத்தை இவன் எப்படிக் கொடுப்பன்? அவன் எப்படி வாங்குவன்' கன்மம்புசிப்பன ஆன்மாக்கள், அதுவு மனவாக்குக்காய சென்னியம். அதைச் சிவன்தான் செய்யாமலிருக்க வாங்கி எப்படிப் புசிப்பன்? ஆகையால், அது அர்த்தமன்று. ஞானிக்குப் பிராரத்தமுண்டென்பதும், ஒருவாற்ரு னில்லையென்பதும், சற்குரு சன்னிதான

விசேடத்தாற் சற்சம்பிரதாயந் தெரியாதவர் சொன்னதென வறிக. அன்றியும், பிணியாளன் மருந்து தின்றாற் பிணி தீருவதொழிய, அன்னியன் மருந்துதின்றால் தீராதெனில், மாதா மகவுக்குவந்த வியாதி நிமித்தம் மருந்து தின்னக்கண்டோமெனில், *தனந்தயனுக் கொழிய வேறில்லை.

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

'கன்மத்தை இவன் எப்படிக் கொடுப்பன்? சிவன் எப்படி வாங்குவன்? கன்மம் புசிப்பன வான்மாக்கள். அதுவும், மன வாக்குக் காய சென்னியம். அதனைச் சிவன் தான் செய்யாமலிருக்க எப்படி வாங்கிப் புசிப்பன்' என்றீர். கிரியாபாதத்திலேதானே நித்தநித்தஞ் சிவபூசையிற் செபத்தையுங் கன்மத்தையு மான்மா வையுஞ் சிவனுக்குத் தத்தம்பண்ணுக' எனச் சொன்ன சுருதி எப்படிச் சொல்லிற்றென்றறியீர் போலும். இன்னும், கிரியா பாதத்திற் போசனவிதியிற் 'குண்டலியிற் சிவாக்கினியை யெழுப்பி அன்னத்தை யதன்கட் செய்யுமாகுதியாகப் பாவித்துக் கவளந்தோறு மந்திரஞ்சொல்வி யருந்துக' என்று சொன்னவிதி எப்படி விதித்தது? இன்னும், சிவார்ச்சனசந்திரிகையட் சைவர் புசிக்கும் போசனத்திற் பாவனை மூவகைப்படுமென்றவற்றுண், முன்னைய விரண்டும் எப்படி விதித்தன? என்றிவையெல்லா மறிய மாட்டீர். கிரியாபாதத்தி னித்தியவிதியின் றாற்பரியமே யறிய மாட்டாத நீர் ஞானபாதத்தின் றாற்பரியமறிதற்கு யார்? கன்ம வழக்கே நுமக்குத் தெரியாது. அன்றியும், 'மாதா மகவுக்கு வந்த வியாதிநிமித்த மருந்துதின்னக் கண்டது தனந்தயனுக்கொழிய வேறில்லை' என்றீர். அங்ஙனங் கூறிய தெமக்கே துணையாயிற்று. அம்மையப்பராகிய சத்தி சிவங்களை நோக்கி உயிர்களெல்லாந் தனந் தயரேயாகலின், சிவ னேன்றுகொண்டாலன்றி மலப்பிணி நீங்கா

* தனந்தயன் = பாலுண்குழவிப் பருவத்தாண்மகன்

தென்பது தெற்றெனவறிக. 'பாலுண் குழவி பசுங்குடர் பொறு தெனநோயுண் மருந்து தாயுண் டாங்கு' (சிதம்பர மும்மணிக்கோவை. 1.) எனத் தருமபுரத்தில் வழங்கு மகவலின் பொருளு மறியீர் போலும். 'சற்குரு சன்னிதான விசேடத்தாற் சற்சம்பிரதாயந் தெரியாதவர் சொன்னது' என வாய்கூசாது புறன்பழித்தீர். நமக்குச் சற்குரு யார்? அந்தக் குருவிடத்தில் விளங்குஞ் சற்சம்பிரதாயம் யாது? என்றறியலுறுவார்க்கு, நமக்குச் சற்குருவாவார் இவரென்பது யாங் கூறவேண்டா. நம்முடைய † கூடத்தர் கூறிய வாக்குகளே வெளிப்படையாய் முழக்கும். அதுவும், 'மெய்கண்ட தேசிகன் சந்ததி' என்றெருட்டுவீராகில், அதற்குச் சான்று என்னை? சந்ததியறிதற்கு முந்திய வடையாளம் அவ்வச்சந்ததிபற்றி வருந் தீக்கை வேறு பாடாமன்றே! அதுவு நமது சந்ததி மெய்கண்ட சந்தியோடு மாறுபட்ட சந்ததியென்பதற்குச் சான்றும். அது காட்டுதும். 'விரும்பிய மந்திராதிகார மர்ச்சனாதிகார மேவும்யோகாதிகார மெனச்சமய விசேடம், வரும்' (சிவப். 9.) என்னும் மெய்கண்ட நூற் சுருதியோடு முரணி, யோகாதிகாரம் விசேட தீக்கையில் அடங்காதென்று மறுத்து அதற்கு வேறு தீக்கை கொண்டீர். இன்னும் சமயாசாரியர் சந்தானாசாரியர் முதலியோர் குருபூஜை நக்ஷத்திரம்பற்றிச் செய்கின்ற நீர் தாமே நுமது சந்ததியின் வருமாசிரியர் குருபூசை நுஞ்சந்ததிக்கேற்பத் திதிபற்றிச் செய்கின்றீர். இன்னும், 'பிணுதிமா றின்றிப்பேண றந்திர மந்திரங்கள்—மணுதிக ளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மையாகும்' (சித்தி. அளவை. 13.) எனத் தந்திரகலை மந்திரகலைகளைக் கூறியொழித்துத், தணுதியீ றிலாதான் றன்மை யுணர்த்துத லுபதேசந்தான்' (சித்தி அளவை. 13.) என ஞானபாத முழுது முபதேசகலையெனக் கூறிய மெய்கண்ட சுருதியோடு முரணி, மந்திரகலைக்கு மேற்பட்ட ஞானபாதத்துள்ளேதானே, சிலவற்றைத் 'தந்திரகலாப் பிரகாணம்' என்றும், சிலவற்றை 'உபதேசகலாப்பிரகாணம்'

---

† கூடத்தர் ≡ தலைவர்—முன்னோர்.

என்றும் மயங்கிக்கொண்டீர். 'நீயோ செய்யாய்' (இருபாவிரு. 4.) 'குற்றமெல்லா முற்றிடு முயிரின் கண்ணே' (சித்தி. VII. 3.) என்றற்றொடக்கத்துச் சுருதிகளோடு முரணி, எல்லாக்கொடுமைக்கு முதல்வனே மூலகாரணம்' என்றீர். 'நல்லசிவ முன்பின்னடுவே யருளிருக்கு-நல்லவருண் முன்பின் னடுச்சிவமாம்-பல்காலுங்-குன்ற வருளிடத்துங் கூருச் சிவத்திடத்து-நன்ருய்க்குடியிருந்தோ நாம்' என்பதோர் வெள்ளைப்பொருள்பற்றி இரண்டுசிவம் இரண் டருளாகவைத்து, முத்தி பஞ்சாக்கரத்தின்முறை, சிவப்பிரகாசம், திருவருட்பயன், உண்மைவிளக்க முதலிய மெய்கண்ட நூல்களிற் கூறிய முறையோடு மறுதலைப்படக்கூறி 'உடையாளுன்ற நடு விருக்கும்' (திருவாச. கோயில் மூத்த. 1.) என்னுந்திருவாக்கே இதற்குச் சுருதியெனக் கொண்டீர். முத்தி பஞ்சாக்கர முறை இவ்வாறன்று. வேறென்பதற்கு, நம்மனோர் செய்த வர்ணச்சிரம சந்திரிகையிற் பஞ்சாக்கர முச்சரிக்கு முறைவேறு பாட்டா லினைத் தெனவும், அவற்றுண் முத்தி பஞ்சாக்கரமாவ திதுவெனவும் பகுத் தோதி ஆண்டெடுத்துக்காட்டிய சுருதியே சான்ருகலானும், உயிர் *விவதானமா யிடைநிற்றலின் சிவமுமருளுந்தம்முண்டுநிற்றல் நீர் கொண்டமுறையிற் பெறப்படாமையானும், சிவத்தி லருள் வியப் பியமென்றதுபோல அருளிற் சிவம் வியாப்பியமென்றற்குச் சுருதி யின்மையின் அருண் முன்பின்னுக நடுநிற்குமென்றல் பொருந்தா மையானும், 'உடையா ணடுவு ணீயிருத்தி' (திருவாச. கோயில் மூத்த. 1.) என்ற சுருதிக்குத் தாற்பரியம் வேருகலின், அது முடிபு நிலைக்குச் சுருதியன்மையானும், சிவத்துக்குஞ் சத்திக்கும் வஸ்து பேத மின்மையின் ஒன்று முன்பின்னுக ஒன்று நடுநிற்குமென்று வஸ்துபேதமாக வைத்துக்கூறல் பொருந்தாமையானும், வஸ்து பேதமில்லை யென்பதே யவ்வாறு கூறியதற்குத் தாற்பரிய மெனின், ஆன்மாவை யவற்ரோ டொப்பவைத்து நடுநிற்கு மென்றதும் அவ்வாறே வஸ்து பேதமின்மைபற்றி யோதின

---

*விவதானம் = தடை.

தெனப்பட்டு மாயாவாதமாய் முடியுமாகலானும், பிறவாற்றானும் நீர்கொண்டமுறை அவசித்தாந்த மென்பது இனியாகிலுமறிந்து கொள்வீராக. இன்னும் ஈண்டு விரித்துரைக்கற்பாலன வனேக முள; விரிவஞ்சி யுரைத்திலம், இதுநிற்க: 'தற்காலசந்தி யொருதினந் தவறினும் பதிதத்துவமாம்' என்னுஞ் சிவாகம வாக்கியங்களோடு முரணி சமய விசேடங்களில் விடியலிற் செய்யுஞ் சந்தியை வரம்பாகக் கைவிட்டீர். சிவபூசையிற்சாமானியார்க்கியநீராட்டுமளவும் லிங்கசுத்தி; அதன்பின் ஆசனமூர்த்தி வித்தியாதேக மாவாகனுதி அதன்பின் அபிடேக முதலாயின; என்றிம்முறையேசோமசம்பு சிவாசாரியர் ஞானசிவாசாரியர் முதலிய பூர்வாசாரியர் சிவாகமத்தின்வழி விதித்த பத்ததிகளோடும், அவற்றை மொழிபெயர்த்துச் செய்த ஞானமிர்தம், சிவார்ச்சனுபோதம் முதலியவற்றோடு முரணி, சிவசமவாத தாபகரான அகோரசிவாசாரியரையுள்ளிட்ட *ஆதுனிகர் மூல வசனமின்றித் தாமே படைத்திட்டுக்கொண்ட பத்ததிகளையே கைப்பற்றி, கேவலங் கெதானுகெதிக நியாயத்தில் வீழ்ந்து, அபிடேகஞ் செய்து திருவொற்றுடை சாத்திப் பீடத்திலெழுந்தருளுவிக்குமளவும் லிங்கசுத்தி; அதன் பின் னுவாகனுதியெனக்கொண்டு, பாதிப்பூசைத் தொழில் பயப்பாடின்றி வறிதே செய் திளைக்கின்றீர். 'ஆதியா தார சத்தி' 'ஆயதூ பாதி யளித்து' (ஞானபூசாவிதி 13, 14.) என்னும் ஞானபூசாவிதியின் ருற்பரியம் பற்றியாகிலு மறிந்துகொள்ளமாட்டிலீர். நீர் செய்யுங் கிரியைத் திறமே இவ்வாறெல்லாங் குழறுபடையாதலை நோக்குவார்க்கு, நும்முடையஞானத்திறத்தின் குழறுபடை கைமுதிகநியாயத்தானினிது விளங்கும். இவ்வாறே நீர் கொண்ட கோட்பாடனைத்துஞ் சிவாகமங்களோடுஞ் சிவாகமத்தெளிவாகிய மெய்கண்ட நூல்களோடுஞ் சிட்டாசாரத்தோடு முரணுவனவன்றி, ஒருவாற்றானும் அவற்றோடியையு மாறின்மையின், நுமக்குச்சற்குரு பரம்பரையுமில்லை; சற்சம்பிரதாயமுமில்லை யென்பது, எல்லார்க்கு மினிது விளங்கக்

* ஆதுனிகர் = பின்னோர்.

கிடந்தது. அது கிடப்பச், சற்குருசந்ததியென்பது பலவாற்ருனு மெல்லார்க்கு மினிது விளங்குவதற்குரிய பெருந்தகைமையுடைய மரபினுள்ளாரை நோக்கிச், 'சற்குருசன்னிதான விசேடத்திற் கருகரல்லாதார்' என்றும், இங்ஙன நீரிகழ்தற்கேதுவாகிய நுமது துரபிமானத்தின் பெருமை வியக்கற்பாலதேயாம்!

# 58.

## சித்தாந்தமரபு

**ஆணவமலம் தன்னைப்பிடித்தவனை மயக்கும் பிடியாதவனை மயக்காது என்பதற்கு உவமை — ஒரு விடனுனவன் வேசியைப் பார்த்தவிடத்து அவன் அவளை மயக்குகிறது போலும்: சந்நியாசிகள் வேசியைப் பார்த்தபோது அவர்களை அவள் மயக்காதது போலும்.**

## சித்தாந்தமரபு கண்டனம்

ஆணவமலந் தன்னைப் பிடித்தவனை மயக்குமென்பதற்கும். பிடியாதவனை மயக்காதென்பதற்கும், 'பரஸ்திரீ விடன் சன்னியாசி' உவமை சொன்னுர். 'மயக்குகிற மலம் எங்கேயிருந்தது? இவன் எங்கே யிருந்தான்? என்னு யிருந்தான்? என்னத்தாலே பிடிப்பான்? பரஸ்திரீ உவமானஞ்சொன்னுர்; விடனுனவன் அவர்களைக்கண்டு மயங்கினதொழிய அவ ரிவனை மயக்கினதில்லை அன்றியும், 'தானே மாட்டாது' (இருபாவிருபது. 4.) என்னுஞ் சுருதி யிருக்கையாலும், அது அர்த்த மன்று.'

## சிந்தாந்தமரபு கண்டன கண்டனம்

வியாபகப்பொரு ளியல்பறியாமையான் 'மலம் எங்கேயிருந் தது? இவன் எங்கே யிருந்தான்' என்று ஏகதேசப்பொருட் பழக்

*கமே பற்றி வினுயினீர், 'எதினூற்பிடித்தான்' என்னில், அது வழி படுமுறையில் வழிபட்டுக் கேட்டால் விளங்கும். 'பாத்தையர் விடனேமயக்குமா றில்லை' என்றீர். வரைவின்மகளி ரதிகாரமும் பார்த்தறியீர் போலும்.* (திருக்குறள் அதி. 92.)

# 59.

## *சித்தாந்தமரபு*

சரீரத்திரிபாவது பாம்பு சட்டை கழற்றினூற்போல ஸ்தூல தேகத்தைவிட்டு நீங்கிச் சூக்கும தேகத்தோடு பூத சரீரத்தையும் பூதசார சரீரத்தையும் பொருந்துதல்; புண்ணிய பாவ சேஷங்களினுலே பூதபரிணும சரீரத்தைப் பொருந்துதலுமாம்.

இடத்திரிபாவது முட்டையிலே யிருந்த புள்ளானது முட்டையை விட்டு நீங்கிக் கொம்பிலே இருத்தல்போல ஆன்மா ஸ்தூல தேகத்தைவிட்டு நீங்கிச் சூக்கும தேகத்தோடு பூத சரீரத்தைப் பொருந்தி நரகத்திலே செல்லும்: பூதசார சரீரத்திலே பொருந்திச் சுவர்க்கத்திலே செல்லுதலுமாம்: பூதபரிணும சரீரத்தைப் பொருந்தி மீளவும் தரையினிடத்திலே செல்லுதலுமாம்.

அறிவிற் றிரிபாவது நனவிலே அறிந்த செய்தியெல்லாம் கனவிலே மறந்தாற்போல ஆன்மா ஸ்தூல தேகத்திலே அறிந்த செய்திகளெல்லாம் ஸ்தூல தேகத்தை விட்டு நீங்கிப் பூத சரீரத்தையும் பூதசார சரீரத்தையும் பொருந்தி நரக சொர்க்கங்களே அடைந்தபோது மறந்து ஒன்றுந் தெரியாதிருத்தல்.

## *சித்தாந்தமரபு கண்டனம்*

'பாம்பு சட்டை கழற்றினது சரீரத்திரிபு' என்றும், 'முட்டையுவமை இடத்திரிபு' என்றும் சொன்னுர். 'பன்னகமண்ட

சங்கள் ' (சித்தி. II. 38.) என்கிற பாட்டிற்கு விரோதிக்குமாதலால் அது அர்த்தமன்று,'

## சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

'பன்னகமண்டசங்கள்' என்கிற பாட்டிற்கு விரோதிக்குமாதலான், 'முட்டையுவமை யிடத்திரிபிற் கெடுத்துக்காட்டுதல் கூடாது' என்றீர். ஓரியல்புபற்றியொன்றற்குவமையாக வெடுத்துக் காட்டிய பொருளை மற்றோரியல்புபற்றிப் பிறிதொன்றற்குவமையாக வைத்தோதுதல் எல்லாநூல்கட்குந் துணிபென்பது நீரறியகில்லீர். 'கண்டகனவைக் கனவுணர்விற் றான்மறந்து' (சிவஞானபோ. வார்த். சூ2. அதி.2. உதாரணவெண்பா 1,2.) என்றவாசிரியர்தாமே, மீள 'அக்கனவும்' என்றதனையும், முன்னொடுபின் விரோதிக்குமென்றிவ்வாறுகூறித் தள்ளுவீர் போலும். நும்மறிவிருந்தவாறு வியக்கற்பாலதே!

## 60.

## சித்தாந்தமரபு

ஆன்மாவுக்கு எல்லாவற்றிற்கும் முந்தினது பக்குவம். அதற்குப் பிந்தினது சிவபுண்ணியம். அதன்பின்பு மலபரிபாகம், சத்திநிபாதம், இருவினையொப்பு, ஆசாரியர் திருமேனி கொண்டு எழுந்தருளிவருதல், அவர் திருவுளம்பற்று நின்ற ஞான சாஸ்திரம். இவை மோக்ஷமடைவதற்கு ஏதுவாகிய முறைமை என்றறிக.

### அதிகமாகக் காணப்பட்டவை

(1) நிருவாண தீட்சை இரண்டுவிதமாயிருக்கும். அஃது எப்படியென்னில்? சத்தியோ நிருவாணமென்றும்

அசத்தியோ நிருவாணமென்றும் இருவிதமாம். அவற்றுள் சத்தியோ நிருவாணமாவது அறிவித்தால் அறியுந்தன்மை யையுடைய சீடனுக்கு ஆறு அத்துவாவையும் அறிவித்து அவற்றை நீக்குதல். அசத்தியோ நிருவாணமாவது சீட னுக்கு அறிவித்தால் அறியுந்தன்மை இல்லாதபடியினாலே ஆறு அத்துவாவையும் அறிவியாமல் தீக்ஷையினாலே அவற் றை நீக்குதல்.

(2) ஆன்மாவுக்குப் புசிப்பாவது சிவானந்தத்தை அநுபவித்தல்; சிவனுக்குப் புசிப்பாவது ஞானவான்களு டைய பிராரத்தம்.

(3) ஆன்மாவுக்கு லயத்தானம் கேவலாவத்தை, போகத்தானம்சுத்தாவத்தை, அதிகாரத்தானம்சகலாவத்தை. இவை இரண்டுவிதமாயிருக்கும். அவை அசுத்த கேவலம், சுத்தகேவலம், அசுத்த சகலம், சுத்த சகலம், அசுத்த சுத்தம், சுத்த சுத்தமென ஆறும், அசுத்தகேவலமாவது ஆணவம் ஆதாரமாக மூலாதாரத்திலே கிடத்தல். சுத்த கேவலமானது இன்பசத்தியின் கைப்பட்டியிருத்தல். அசுத்த சகலமாவது மாயா காரியமான தேகத்திலே கூடி இந்திரியப் புசிப்பால் மேலைக்கு வினைதேடல். சுத்த சகலமாவது அருள்வடிவாய் நின்று சென்ன ஒழிவுக்கு உபாயந் தேடல். அசுத்த சுத்தமாவது சுத்தமாயையின் கைப்பட்டிருத்தல். சுத்த சுத்தமாவது இன்பாதீதமாய்க் கிடத்தல்.

(4) தேகபந்தமான ஆன்மாவுக்கு முப்பத்தாறு தத் துவங்களும் போக பூமி யென்று கொள்ளுக.

(5) ஞானவான்களுக்குக் குருலிங்க சங்கமமுண்டா னாற்போலப் பெத்தான்மாக்களுக்கு குருலிங்க சங்கமமுண்டு.

அஃதேதென்னில் பெண்டிர்குரு, பிள்ளை லிங்கம், சுற்றத் தாரசங்கமம்.

(6) சிவனுக்கு அழியாத் திருமேனி ஆன்மாவேயாம். சிவலிங்கம் விக்கிரகம் முதலான திருமேனிகள் சர்வசங்கார காலத்திலும் நீங்கா.

(7) பரமேசுவரன் திருமேனி கொள்ளாவிட்டால் பஞ் சகிருத்தியம் உண்டாகமாட்டாது. பிரம விஷ்ணு முத லான தேவர்களுக்கும் நரருக்கும் நாகர்க்கும் வேதாகமங்களை அறிவிப்பாருமில்லை. இம்மூவர்களுக்கும் குருசந்தானத் தொடர்ச்சியும் உண்டாகமாட்டாது. குருவானவர் குண்ட மண்டலாதிகளாற் பாசத்தை நீக்கும் தீக்ஷைகளும் உண் டாகமாட்டாது. ஆகையால் கர்த்தா திருமேனிகொண்டு வருவார் இதற்கு வசனம் 'உருமேனி தரித்துக்கொண் டது' என்கிற பாட்டும் 'உருவருள் குணங்களோடும்' என்கிற பாட்டும். (சித்தி I. 55, 47.)

(8) பரமேசுவரன் திருமேனிகொண்டு வாராரென் பதற்கு வசனம் 'சிவனுரு வருமுமல்லன்' என்ற திருவிருத் தம். பரமேசுவரனானவர் பிரமா விஷ்ணு உருத்திரன் மகே சுவரனாகிய நான்கு ரூபமுமாகான். பரவிந்து பரநாதம் அப ரவிந்து அபரநாதம் என்னும் நான்கு அரூபமுமாகான். சதாசிவமென்னும் ரூபாரூபமுமாகான். இந்த ஒன்பது ரூபத் திலும் வியாபகத்தினாலே பொருந்தியிருந்தாலும் அவற் றைப் பொருந்தாதவனே யாவனென்றறிக.

(9) உண்மைச் சரியைக்குச்சித்தியாரில் தாதமார்க்கம். உண்மைக் கிரியைக்குப் புத்திரமார்க்கம். உண்மையோகத் திற்குச் சகமார்க்கம். உண்மை ஞானத்திற்குச் சன்மார்க்க

மென்று பெயர். 'தாதமார்க்கஞ் சாற்றில்' (சித்தி. VIII. 19—22.)

(10) சிவஞானம் ஒன்றினாலே அறிகிறதேயல்லாமல் மற்ற ஞானங்கள் ஒன்றினாலேயும் சிவனை ஒருகாலும் அறியக் கூடாது.

(11) பக்குவான்மாவுக்குஞானசாத்திரத்தைத்தானே படித்தால் ஞானம் விளங்காது ஞானாசிரியர் சீடனுடைய பக்குவம் அறிந்து ஞானசாத்திரத்தைப் போதித்தால் ஞானம் விளங்கும். அஃது எப்படிப்போல என்றால், தண்ணீர்த்தாக முடையவன் சமுத்திரத்துத் தண்ணீரைத்தானே குடித்தால் தாகம் தீராது. மேகமானது சமுத்திரத்துத் தண்ணீரைப்பருகி உவரையெல்லாம் அகற்றித் தண்ணீரைக் கொடுத்தால் தாகம் தீரும். ஆதலால் தண்ணீர்த் தாகமுடையவனைப்போலும் ஆன்மா, சமுத்திர சலத்தைப்போலும் ஞானசாத்திரம், மேகத்தைப் போலும் ஞானாசிரியர்.

(12) மோக்ஷகாமி யானவன் ஆன்மாவுக்குள்ளேயிருக்கிற சிவனை சிவபத்தியினாலும் சிவஞானத்தினாலும் வெளிப்படுத்தல் வேண்டும். அஃதெப்படிப்போல என்றால் காட்டத்திலேயிருக்கிற அக்கினியை அரணியினாலும் கயிற்றினாலும் சுற்றிக் கடைந்து வெளிப்படுத்தல் போலும், தயிரிலே யிருக்கிற நெய்யை மத்தை நாட்டிக் கயிற்றைச் சுற்றிக் கடைந்து வெளிப்படுத்தல் போலுமாம்.

(13) தத்துவ ரூபமாவது முப்பத்தாறு தத்துவங்களுடன் தொழிலையறிதல். தத்துவ தரிசனமாவது முப்பத்தாறு தத்துவங்களையும் சடமென்றறிதல். தத்துவசித்தியாவது முப்பத்தாறு தத்துவங்களையும் சிவஞானத்தினாலே

தனக்கு அன்னியமென்று அறிந்து நீங்குதல். ஆன்மரூபமாவது பஞ்ச மலங்களையும் நீக்கி ஆன்மாவைப்பிரமமென்று கருதுதல். ஆன்ம தரிசனமாவது தனக்கொரு செய்தியுமில்லையென்று அறிந்து நிற்றல். ஆன்ம சுத்தியாவது ஆன்மா சிவஞானத்திலே போய் அழுந்தித் தான் தோன்றாமல் அந்தச் சிவஞானமாய்ப் போதல். சிவ ரூபமாவது ஆணவமலத்திலே கிடக்கிற ஆன்மாவைச் சிவன் பஞ்சகிருத்தியம் செய்து மலங்களை நீக்கி மோக்ஷத்திலே விடுவரெனத் திடமாயறிதல். சிவதரிசனமாவது சிவஞானம் செய்யும் பஞ்சகிருத்தியத்தை ஆன்மா செய்யமாட்டானென்றறிந்து திருவருளோடு அழுந்தாது சேர்தல். சிவயோகமாவது சிவசத்தி செய்யும் கிருத்தியமெல்லாம் சிவனுக்குச்சற்றுமில்லையென்றறிந்து, சிவசத்தியன்றித் தனக்கும் பிறருக்கும் சற்றும் செய்தியில்லையென்றறிந்து தெளிந்து, திருவருளோடு அழுந்தி அதுவதுவாய்ப்போதல். சிவ போகமாவது ஆன்மா சிவானந்தத்தைப் புசித்தல்.

சித்தாந்தமரபு முற்றிற்று.

---

## சித்தாந்தமரபு கண்டனம்

'ஆன்மாவுக்கு முந்தினது பக்குவம்' என்றார். 'பின்மலபரிபாகம்' என்றார். 'ஆன்மாவுக்குப் பக்குவபரிபாகமாவது என்னை? மலஞ் சடமானபடியினாலே அது பரிபாகப்படுகிற வகை என்னை? 'மும்மலஞ் சடம்' என்று சுருதி யிருக்கையால்,' அது அர்த்தமெனவறிக.

# சித்தாந்தமரபு கண்டன கண்டனம்

'ஆன்மாவுக்குப் பக்குவபரிபாகமாவது என்னே? 'என்றும், 'மலஞ் சடமாகையினுலே அது பரிபாகப்படுகிற வகை என்னே?' என்றும், வினுயினீர். வழிபடுமுறையில் வழிபட்டுக்கேட்டால் அவையெல்லா மினிது விளங்கும்.

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தமரபுகண்டன கண்டன முற்றிற்று.

---

**ஸ்ரீ மெய்கண்ட தேவர் மிளிர்கழல் வெல்க.**

**ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் மலரடி வாழ்க.**

---